● For private circulation only

Book Post

https://christianhistoricalsociety.in/

# கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

● பிப்ரவரி 2023 திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும் ●விலை : ரூ 60 ●இதழ் 33



"நீங்கள் உலகமெங்கும்போய்
சர்வ சிருஷ்டிக்கும் சுவிஷேசத்தை
அறிவியுங்கள்"



CHRISTAVA VARALATRU SUVADUGAL FEB-23 RS 60 ISSUES 33

# கிராம நற்செய்தி பணியின் தொடரோட்டம்

# ஆசிரியர் சுவடு

**கிறிஸ்துவுக்குள் அன்பான சுவடுகள் வாசகர்களே,**

ஆண்டவரும், மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

உன் கூடாரத்தின் இடத்தை விசாலமாக்கு! உன் வாசஸ்தலங்களின் திரைகள் விரிவாகட்டும்; தடை செய்யாதே; உன் கயிறுகளை நீளமாக்கி, உன் முளைகளை உறுதிப்படுத்து. நீ வலது புறத்திலும் இடது புறத்திலும் இடம் கொண்டு பெருகுவாய்; உன் சந்ததியார் ஜாதிளைச் சுதந்தரித்துக் கொண்டு, பாழாய்க்கிடந்த பட்டணங்களைக் குடியேற்றுவிப்பார்கள். ஏசாயா. 54 : 2, 3

நமது திருச்சபையின் முதல் நூற்றாண்டு வரலாற்றில், சபையினர் கொண்டிருந்த உள்நாட்டுச் கிராம சுவிசேஷ ஊழிய ஆர்வமும், வெளி உலக சுவிசேஷச் சேவைப்பற்றும் அதிகமாய் இருந்தது என்பதையும் அறிந்திருக்கின்றோம். நமது திருச்சபையில் நூறு ஆண்டுகளுக்கு முந்திய காலங்களில் நிறைவேற்றப்பட்ட தெய்வப்பணி 'நமது கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது'. இந்தியாவிலும் உலகின் பலவிடங்களிலும், தன் பிள்ளைகளின் மூலமாய்த் தன் ஆண்டவரின் திருப்பணியை நடத்தியும், நடத்துவதில் உதவியும், தனக்கும் பிறர்க்கும் ஆசீர்வாதமாக விளங்குகிறதெனின் எம்பெருமான் இயேசுநாதரின் செயலேயன்றி வேறெதினால்?

ஒவ்வொரு மாதமும் மாத இதழினை வெளிக்கொண்டு வருவதற்கு மிகுந்த பொருட்செலவுகள் உண்டு, தேவைகள் சந்திக்கப்பட ஜெபித்துக்கொள்ளுங்கள். சந்தா, நன்கொடைகளை அனுப்ப இதழின் பக்கங்களிலிருக்கும் வங்கிக் கணக்குகளை பயன்படுத்திக்கொள்ளுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக நண்பர்களுக்கு இப்புத்தகத்தை அறிமுகப்படுத்தி அவர்களை சந்தாதாரர்களாக்குங்கள். தொடர்ந்து வரலாற்று ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

வரும் மார்ச் மாத தலைப்பாக "மிஷனெரி பணியில் இந்திய மிஷனெரிகள்." ஆற்றிய பணிகளை ஆய்வுக் கட்டுரைகளில் கொடுக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பாரபரனின் பணியில்

manna selvakumar

G Pay


சுஜித் ரெக்ஸ்
வடிவமைப்பு

மன்னா செல்வகுமார்
ஆசிரியர்


கிறிஸ்தவ
# வரலாற்றுச் சுவடுகள்

**மாத ஆய்விதழ் சந்தா விபரம்**

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

**வங்கி விபரம்**

Name: Tinnevelly Christian Historical Society
A/c Number : 1748 020000 3684
Bank name : Federal Bank
IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
'திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்'
( Tinnevelly Christian Historical Society )
என்ற பெயரில் எடுக்கவும்


**ஆசிரியர்**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in
tchsportal.co.in
christianhistorical@gmail.com


**தொடர்புகொள்ள +91 91767 80001**

**Rev. Dr. B. அகஸ்டஸ் பால்பாண்டியன்**
**செபத்தையாபுரம்.**



# கிராமங்களில் கிறிஸ்தவம் சென்றடைய மிஷனெரிகள் எடுத்த முயற்சிகள்



இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து நாற்பது நாட்கள் சீடர்களுக்குத் தரிசனமானார். பின் பரத்திற்கு எடுத்துக் கொள்ளும்போது கடைசியாக சர்வ சிருஷ்டிக்கும் கொடுத்த கட்டளை **'நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிஷேசத்தை அறிவியுங்கள்'** என்பதாகும். அதனைத் தொடர்ந்து சீடர்கள் உலகின் பல பகுதிகளுக்குச் சென்று கிறிஸ்தவத்தைப் பரப்பினார்கள்.

பதினெட்டாம் நூற்றாண்டின் துவக்கத்தில் இங்கிலாந்து தேசத்தில் பல பக்தி இயக்கங்கள் தோன்றின. அந்த இயக்கத்தின் மூலமாக உலகின் பல பகுதிகளுக்கு மிஷனெரிகள் அனுப்பி வைக்கப்பட்டனர். அவ்விதமாகச் சென்ற மிஷனெரிகள் அன்றைய கிராமங்களுக்குச் சென்று கிறிஸ்தவத்தைப் பரப்பினார்கள்.

தமிழ்நாட்டிற்கு வந்த திருநெல்வேலி அப்போஸ்தலராக அறியப்படுபவர் சார்லஸ் தியோப்பிலஸ் ஈவால்டு ரேனியஸ் ஐயரவர்கள் ஆவார். இவர் ஜெர்மனியில் 1790-ஆம் ஆண்டு பிறந்தார். **இவர் எவ்விதமாக தமிழ்நாட்டில் குறிப்பாக திருநெல்வேலிப் பகுதியிலுள்ள கிராமங்களுக்குச் சென்று கிறிஸ்தவத்தைப் பரப்பினார்? அதற்கு அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் என்ன? போன்ற வினாக்களுக்கு இக்கட்டுரை விடை கொடுக்கிறது.**

1812-ஆம் ஆண்டு லுத்தரன் திருச்சபையில் முறைப்படி குருப்பட்டம் பெற்றார். தொடர்ந்து C.M.S சங்கத்தாருக்கு தான் மிஷனெரியாக செல்ல விரும்புவதாகவும் தன்னை இந்தியாவுக்கு அனுப்புமாறும் விண்ணப்பம் செய்தார். சங்கத்தாரும் விண்ணப்பத்தைப் பரிசீலித்து 1814-ஆம் ஆண்டு சென்னைக்கு கப்பல் ஏற்றினர். 1814-ஆம் ஆண்டில் 6 மாதக்

கப்பல் பிரயாணத்திற்குப் பின் சென்னை வந்தடைந்தார். அங்கு S.P.C.K சங்கத்தில் பணிசெய்த ஜே.பி. வாகன் போன்றவர்களைச் சந்தித்து அவர்களது மிஷனெரி முறைகளைக் கேட்டு அறிந்தார். பின்னர் தரங்கம்பாடி சென்று அங்கு இருந்து மிஷனெரிகளிடம் ஊழியப் பயிற்சியும், தமிழ்மொழிப் பயிற்சியும் பெற்றார். ஐந்து மாதத்திற்குள் தமிழில் பேச, எழுத, படிக்கக் கற்றுக்கொண்டார். அதற்காக அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் மிகவும் போற்றுதற்குரியதாகும். பயிற்சி முடித்த நிலையில் சென்னை சென்று மாநில அதிகாரிகளிடம் அனுமதி பெற்று ஊழியத்தைச் செய்யும்படி C.M.S சங்கத்தார் அவரை சென்னை அனுப்பி வைத்தனர்.

சென்னை சென்ற ரேனியஸ் ஐயரவர்கள் சுவிசேஷத்தை அறிவிக்கிற பணியில் தனக்கு உதவி செய்ய **'வாசகர்'** என்னும் பணியாட்களை நியமித்துக்கொண்டார். அவர்கள் பிற சமய மக்களுடன் பழகி அவர்களுக்குத் துண்டு பிரசுரங்கள் கொடுத்து இயேசுவை அறிவிப்பர். பின்பு அவர்களை ரேனியஸ் ஐயரிடம் கூட்டி வருவர். ரேனியஸ் அவர்களுடன் இயேசுவின் மகத்துவத்தைக் கூறி அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். இவரது முயற்சியில் 1817-ஆம் ஆண்டு சென்னையில் முதல் C.M.S திருச்சபை தோன்றியது.

மக்கள் இறைவனை ஆராதிக்க ஆலயம் தேவைப்பட்டது. ரேனியஸ் ஐயரவர்கள் ஆலயம் கட்டுவதற்கான முயற்சியில் ஈடுபட்டார்கள். அரசிடம் அனுமதிபெற விண்ணப்பம் செய்தார். கட்டுமானத்திற்குத் தேவையான பணத்தை பலரிடம் சேகரித்தார். 1819-ஆம் ஆண்டு ஆலயம் கட்டும் பணியில் ஈடுபட்டார்.

மக்களின் அறியாமை போக்க பள்ளிக்கூடம் தேவை என்பதை உணர்ந்த ரேனியஸ் அவர்கள் பள்ளிக்கூடத்தைத் தொடங்கினார். கற்றுக்கொடுக்க ஆசிரியர்கள் தேவையை உணர்ந்த அவர் ஆசிரியர் பயிற்சி பள்ளியையும் தோற்றுவித்தார். அதற்கான பாடத்திட்டங்களையும் அவரே உருவாக்கினார்.

சென்னையில் **'துண்டுப் பிரசாரச் சங்கம்'** என்ற அமைப்பை ஏற்படுத்தி அதற்கு உறுப்பினர்களைச் சேர்த்து நற்செய்தியைப் பரப்பினார். 1820-ஆம் ஆண்டு திருநெல்வேலிக்கு செல்லுமாறு C.M.S சங்கத்தார் கேட்டுக்கொண்டதிற்கு இணங்க திருநெல்வேலியில் தனது ஊழியத்தைத் தொடர்ந்தார்.

பாளையங்கோட்டையை மையமாக வைத்து தனது பணியைச் செய்தார். தொடர் சுற்றுப் பயணங்கள் மேற்கொண்டு சென்ற இடங்களில் நற்செய்தியை அறிவிப்பது பள்ளிக்கூடத்தை ஏற்படுத்துவது ஆலயங்கள் கட்ட முயற்சிப்பது என்று தனது பணியை விரிவுபடுத்தினார்.


மாலைப்பொழுதில் பிற சமய மக்களுடன் கலந்துரையாடினார். இதன் மூலம் பிற சமய மக்களின் அன்பிற்கும், மதிப்பிற்கும் உரியவராக ரேனியஸ் திகழ்ந்தார். அவர் அன்பில் இணைந்த பலர் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டனர்.

ரேனியஸ் தோற்றுவித்த சபைகள் பல பிற மக்களின் துன்புறுத்துதலுக்கு உள்ளாகியது. குடிசைகள் தீயிட்டுக் கொழுத்தப்பட்டன. பலர் கொல்லப்பட்டனர். இதனால் ரேனியஸ் ஐயர் மிகவும் மனவேதனை அடைந்தார். அரசாங்க அதிகாரிகளிடம் சென்று பேசி புதிய கிறிஸ்தவர்களை உருவாக்கிக் கொடுத்தார். அருளூர், சமாதானபுரம் போன்ற கிராமங்களைச் சான்றாகக் கூறலாம்.

பாளையங்கோட்டையில் உபதேசிமார்களுக்கான **பயிற்சிப் பள்ளி**யை ஏற்படுத்தினார். புதிதாகத் தொடங்கின சபைகளைக் கவனித்துக்கொள்ள பயிற்சிபெற்ற சபை ஊழியர்களை அக்கிராமங்களுக்கு அனுப்பி வைத்தார். அவர்கள் குடும்பமாக அங்கு தங்கியிருந்து வளர்த்தனர். ரேனியஸ் அவர்கள் அவ்வப்போது சபைகளைச் சந்தித்து திருவிருந்து மற்றும் ஞானஸ்நானம் கொடுத்து சபைகளை வளர்த்தார்கள்.

கிறிஸ்தவம் மக்களுக்குச் சென்றடைய பல துண்டு பிரசுரங்களை எழுதினார். வேற பகுதிகளை தமிழில் மொழிபெயர்த்தார். தமிழுக்கு இலக்கணநூல் எழுதினார். இவ்வாறு இலக்கியப் பணியிலும் தம்மை ஈடுபடுத்திக்கொண்டு தமிழ்மொழிக்கு தொண்டு செய்தார்.

18 ஆண்டுகள் திருநெல்வேலியில் அயராது பாடுபட்டு 370 சபைகளைத் தோற்றுவித்தார். 150-க்கும் மேலான பள்ளிக்கூடங்களைத் திறந்தார். அவரது அயராத முயற்சியால் திருநெல்வேலி தூத்துக்குடி மாவட்டத்தில் கிறிஸ்தவம் தழைத்து நிற்கிறது. ரேனியஸ் ஐயரைப் போன்று அவருக்கு முன்பும் அவருக்கு பின்னும் யாரும் செய்யவில்லை என்று திட்டமாகக் கூறலாம்.



## நற்செய்தி கிராமங்களுக்குள் செல்ல



ஜான் ஞானராஜ்
கல்லிடைக்குறிச்சி

# மிஷனெரிகள் எடுத்த தொடர் முயற்சிகள்

தமிழ்நாட்டின் கிராமங்களுக்குள் கிறிஸ்தவம் சென்றடைய மொழி, பண்பாடு, கலாச்சாரம், சமூக குடும்ப அமைப்பு, தட்பவெப்ப நிலை என அனைத்திலும் மாறுபாடுகள் கொண்ட அயல்நாட்டு ஐரோப்பிய கத்தோலிக்க மற்றும் சீர்திருத்த கிறிஸ்தவ மிஷனரிகள் எடுத்துக்கொண்ட மிகக்கடின உழைப்புடன் கூடிய தொடர் முயற்சிகளைக் காண்போம்.

### கத்தோலிக்க கிறிஸ்தவ மிஷனரிகள்

**அரசியல் சூழ்நிலை**

14 ஆம் நூற்றாண்டு முதல் 16 ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் தென் தமிழ்நாட்டில் குழப்பமான அரசியல் சூழ்நிலை காணப்பட்டது. பிற்கால பாண்டிய பேரரசு வீழ்ச்சி அடைந்த நிலையில் சகோதரர்களான சுந்தர பாண்டியன் மற்றும் வீரபாண்டியன் இடையே நடந்த வாரிசுரிமைப் போட்டி அதைத்தொடர்ந்து ஏற்பட்ட மாலிக்காபூர் படையெடுப்பு அதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட இஸ்லாமியர்களின் ஆதிக்கம், இஸ்லாமிய மார்க்க பெரியோர்களின் வருகை அதையொட்டி இஸ்லாமிய மதமாற்றம் ஏற்பட்டு வந்தது.

1532-34 காலகட்டத்தில் தென் தமிழ்நாட்டில் கயத்தாறை தலைமை இடமாகக் கொண்ட வெட்டும் பெருமாளின் அரசு, **தென்காசி**யை தலைமை இடமாகக் கொண்ட குலசேகர பாண்டியனின் அரசு, தென் திருவாங்கூரில் மார்த்தாண்டவர்மனின் அரசு, கன்னியாகுமரியை மையமாகக் கொண்ட உன்னி கேரளவர்மன் அரசு, மதுரையைத் தலைமை இடமாகக் கொண்ட நாயக்கர் ஆட்சி, பரமக்குடியை தலைமை இடமாகக் கொண்ட தும்பிச்சி நாயக்கர் ஆட்சி என பல்வேறு ஆட்சியாளர்கள் ஆட்சி செய்து வந்தனர்.

கிழக்கு கடற்கரையோர கிராமங்கள் மூர் இஸ்லாமியர்களின் ஆதிக்கத்தில் இருந்தது. அதன் காரணமாக மீன்பிடித்தல் மற்றும் முத்து குளித்தலில் ஈடுபட்டு வந்த மீனவ பரதவ சமூகத்தினர் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

**காது அறுக்கப்பட்டதால் தூத்துக்குடியில் ஏற்பட்ட பெருங்கலவரம்**

தூத்துக்குடியில் கருப்பட்டிப் பணியாரம் விற்றுக் கொண்டிருந்த மீனவ பெண்ணுக்கும் அவரை பாலியல் ரீதியாக கேலி செய்த மூர் இஸ்லாமிய போர் வீரனுக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் அருகில் நின்று கொண்டிருந்த மீனவ பெண்ணின் கணவருக்கும் அந்த போர் வீரனுக்கும் இடையிலான கைகலப்பாக மாறியது மீனவ பெண்ணின் கணவரது காது இஸ்லாமிய போர் வீரனால் அறுக்கப்பட்ட போது அவர் அணிந்திருந்த கடுக்கன் கீழே விழுந்தது. இதை தங்கள் சமூகத்துக்கு ஏற்பட்ட இழுக்காக எண்ணிய மீனவ பரதவர் தூத்துக்குடியில் பெரும் கலவரத்தில் ஈடுபட்டனர்.

**மூர் இஸ்லாமியர்களின் கொடிய அடக்குமுறை**

அக்காலத்தில் தூத்துக்குடியில் பெரும் எண்ணிக்கையிலான மூர் இஸ்லாமியப் படை முகாமிட்டிருந்தது. அவர்கள் மீனவ பரதவரின் இக்கலவரத்தையடுத்து மிகக்கொடுமையாக அவர்களை அடக்கினர். மீனவ பரதவரின் தலையைக் கொய்து வருபவருக்கு ஏராளமான பணம் அளிப்பதாக பகிரங்க அறிவிப்பு கொடுக்கப்பட்டது. இதன் காரணமாக கடற்கரையோர கிராமங்களில் மீனவர் வாழ இயலாத சூழல் ஏற்பட்டது.

**மீனவர்கள் போர்த்துக்கீசியரிடம் உதவி கோருதல்**

அந்நேரம் அவ்வழியே சென்ற

போர்த்துக்கீசிய குதிரை வியாபாரி ஜான் டி குரூஸ் துணையுடன் மீனவ பரதவ தலைவர்கள் கொச்சி சென்று கொச்சி ஆயர் விகார் ஜெனரல் போர்த்துக்கீசிய படைத்தளபதிகள் ஆகியோரிடம் தாங்கள் ஒட்டுமொத்தமாக கிறிஸ்தவத்தை ஏற்பதாக வாக்குறுதி அளித்து உதவி கேட்டனர். போர்த்துக்கீசிய பெரும்படை தூத்துக்குடிக்கு வந்தது. அவர்கள் இஸ்லாமிய மூர் படையை தூத்துக்குடியை விட்டு 1532-1533 இல் விரட்டியடித்தனர். வாக்குறுதி அளித்தபடி அனைவரும் 1534 இல் கிறிஸ்தவத்தை ஏற்றனர்.

1537- 1538 இல் வேதாளையில் இஸ்லாமிய மூர்கள் மற்றும் போர்த்துக்கீசியரிடையே போர்கள் ஏற்பட்டது. போரில் போர்த்துக்கீசியப் படை வெற்றி பெற்றதன் மூலம் மூர் இஸ்லாமியர் ஆதிக்கம் கிழக்கு கடற்கரையோரத்தில் அகன்றது.

**தூய.சவேரியாரின் வருகை**



மீனவக் கிராமங்கள் தோறும் தந்தை மைக்கேல் வாஷ் மூலம் திருமுழுக்கு அளிக்கப்பட்டு வந்தது. அவர் ஒருவரால் இப்பணியைச் செய்ய இயலாத நிலையில் அவரது கடிதத்தின் மூலம் கொச்சி விகார் ஜெனரல் போப் ஆண்டவருக்கு எழுதிய கடிதத்தின் அடிப்படையில் இயேசு சபை நிறுவனர். தந்தை லயோலாவால் தூய. சவேரியார் 1542 ல் தென்தமிழ் நாட்டின் கடற்கரையோர கிராமங்களில் மீனவ பரதவர் மத்தியில் நற்செய்திப் பணியைச் செய்ய அனுப்பப்பட்டார். அவர் கோவா தூய. பவுல் கல்லூரியில் படித்து வந்த மூன்று தமிழ் மாணவர்களுடன் தூத்துக்குடி வந்து சேர்ந்து நற்செய்திப் பணியை கிழக்கு கடற்கரையோர மீனவ பரதவர் மத்தியில் செய்து வந்தார்.

**மீனவ முக்குவர் தூய.சவேரியாரிடம் வைத்த வேண்டுகோளும் முக்குவரது மனமாற்றமும்**

இந்நிலையில் கன்னியாகுமரி முதல் திருவனந்தபுரம் நீரோடி வரையிலான மேற்கு கடற்கரையோர கிராமங்களில் வாழ்ந்து வந்த மீனவ முக்குவர் தங்களுக்கும் நற்செய்தியை அறிவித்து கிறிஸ்தவர்களாக்க தங்கள் கிராமங்களுக்கு வரும்படி தூய. சவேரியாரிடம் 1544 இல் வேண்டிக்கொண்டார்கள். கிழக்கு கடற்கரை கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க இயேசு சபை தலைமையால் தாம் அனுப்பப்பட்ட போதும் தாம் அறிவித்து வந்த கிழக்கு கடற்கரைக் கிராம நற்செய்திப் பணிகளை அப்படியே விட்டுவிட்டு மீனவ முக்குவர்களின் வேண்டுகோளை உடனடியாக ஏற்று 1544 இல் அனைத்து மீனவ முக்குவ கிராமங்களுக்கும் கிராமம் கிராமமாக சென்று நற்செய்தியை அறிவித்த தூய.சவேரியார் அவர்கள் அனைவருக்கும் திருமுழுக்கு கொடுத்தார். ஒரே மாதத்தில் பத்தாயிரம் மீனவ முக்குவர் ஒட்டுமொத்தமாக கத்தோலிக்க கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

**“எனக்கு கொடுக்கப்பட்ட பணி கன்னியாகுமரி முதல் ராமேஸ்வரம் வேதாளை வரையிலான கிழக்கு கடற்கரையோர மீனவ பரதவர் மத்தியில் தான்”** என சாக்கு போக்கு சொல்லாமல் மேற்கு கடற்கரையோர மீனவ கிராமங்களுக்கும் சென்று இரவு பகல் பாராது நற்செய்தியை அறிவித்து தமது கையாலேயே அனைவருக்கும் ஒரே மாதத்தில் திருமுழுக்கு கொடுத்த தூய சவேரியாரின் **அதி தீவிர நற்செய்திப் பணி** நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. கிழக்கு மற்றும் மேற்கு கடற்கரையோர கிராமங்களில் சுமார் 50,000 பேருக்கு சவேரியார் நற்செய்தி அறிவித்து திருமுழுக்கு வழங்கியதாக இயேசு சபை தலைமைக்கு இயேசு சபை குருக்கள் எழுதிய கடிதம் மூலம் அறிய முடிகிறது.

**தூய சவேரியாரின் நற்செய்திப் பணியால் கொம்புத்துறை கிறிஸ்தவ கிராமமாகுதல் தூய.சவேரியாரின் கடிதம்**

28.10.1542 இல் தூத்துக்குடியில் இருந்து தூய சவேரியார் ரோமில் இருந்த தந்தை.லெயோலாவுக்கு எழுதிய கடிதத்தில் காயல்பட்டிணத்தில் இருந்து தென்கிழக்கே இருந்த கொம்புத்துறை கிராமத்திற்கு கிறிஸ்தவ நற்செய்தியைத் தாம் கொண்டு சென்ற வரலாற்றை பதிவு செய்துள்ளார். அதில் சாலை வழியாக கடற்கரையோர கிராமங்களுக்கு தாம் நற்செய்திப் பணியாற்ற சென்றபோது கிறிஸ்தவர்களே இல்லாத கரையர் எனும் மீனவ சமூகத்தவர் வாழ்ந்த கொம்புத்துறையை அடைந்தபோது அங்கு நடந்த சம்பவத்தைக் குறிப்பிடுகிறார். அதன்படி கொம்புத்துறை கிராமத்தில் மூன்று நாட்களாக பிரசவ வேதனை அனுபவித்து மரணத்தை நோக்கி சென்று கொண்டிருந்த பெண்ணுக்காக ஜெபிக்கும்படி அவள் இருந்த வீட்டிற்கு கிறிஸ்துவின் திருப்பெயரை நம்பிக்கையுடன் உச்சரித்தவாறு சவேரியாரும் உடன் ஊழியர்களும் சென்றார்கள். விசுவாச பிரமாணத்தையும் ஆண்டவர் இயேசு கற்றுக் கொடுத்த ஜெபத்தையும் சவேரியார் சொன்னார். அது குறித்து அவரது உடன் ஊழியர் தமிழில் தெளிவாக விளக்கிய போது அந்த பெண் தேவ இரக்கத்தால் கிறிஸ்தவ விசுவாசத்தை பெற்றுக் கொண்டாள்.

நீ கிறிஸ்தவராக விரும்புகிறாயா? என சவேரியார் அந்த பெண்ணிடம் கேட்ட போது தான் முழு மனதுடன் கிறிஸ்தவராக விரும்புவதாக அந்த பெண் கூறினார். உடனடியாக அந்த வீட்டில் சவேரியாரால் நற்செய்திப் பகுதி வாசிக்கப்பட்டது. அதன் பின் அந்த பெண்ணுக்கு உடனடியாக சவேரியாரால் திருமுழுக்கு

கொடுக்கப்பட்டது. திருமுழுக்கு பெற்ற சில நேரங்களுக்குள் அந்த பெண் சுகமான பிரசவத்தில் குழந்தையை பெற்றெடுத்தாள். அந்தப் பெண்ணின் கணவர், அவளது பிள்ளைகள், புதிதாக பிறந்த குழந்தை அனைவருக்கும் தூய.சவேரியாரால் திருமுழுக்கு கொடுக்கப்பட்டது. ஆண்டவர் இயேசு கிறிஸ்து தூய சவேரியார் மூலம் செய்த இந்த அருஞ்செயல் அந்த கிராமம் எங்கும் பரவியது அந்த கிராம தலைவர்கள் சவேரியாரிடம் வந்தார்கள். அவர்களிடம் இயேசு கிறிஸ்துவே கடவுளின் மகன் அவரே வாழ்வு அளிக்க கூடியவர் அவரை நம்புங்கள் என சவேரியார் நற்செய்தியை அறிவித்தார்.

அவர்கள் தாங்கள் தங்களை ஆட்சி செய்யும் குறுநில மன்னரின் அனுமதி இல்லாமல் கிறிஸ்தவர்களாக முடியாது என பதில் அளித்தனர். அந்நேரம் அந்தக் குறுநில மன்னரின் பணியாளர் பணம் வசூலிக்க வருகை தந்திருந்தார். அவரிடம் சவேரியார் நற்செய்தி அறிவித்து அந்த கிராமத்தார் கிறிஸ்தவராக விரும்புவதையும் அதற்கு அனுமதி அளிக்கும்படியும் கேட்டுக்கொண்டார் அதற்கு குறுநில மன்னரின் பணியாளர் இந்த கிராமத்தார் கிறிஸ்தவர்கள் ஆவது நல்லது தாம் அதற்கு அனுமதி அளிப்பதாக பதில் உரைத்தார். உடனடியாக கிராமத் தலைவர்கள் குடும்பமாக திருமுழுக்கு பெற்றுக் கொண்டனர். கிராமத் தலைவர்கள் திருமுழுக்கு பெற்றதைத் தொடர்ந்து அந்த கிராமத்தைச் சார்ந்த பெரியோர், சிறியோர் அனைவரும் கிறிஸ்தவர்களாக விரும்பினர் அனைவருக்கும் சவேரியார் திருமுழுக்கு கொடுத்தார். அந்த கிராமம் கிறிஸ்தவ கிராமமானது அதன்பின் சவேரியார் தூத்துக்குடி நோக்கி புறப்பட்டார். ஒரு கிராமத்தை கிறிஸ்தவத்துக்குள் கொண்டு வருவதில் தூய.சவேரியார் காட்டிய நல் முயற்சியை இந்த கடிதம் மூலம் நாம் அறிந்து கொள்கிறோம்.

### மீனவ கரையர் மத்தியில் ஏற்பட்ட மாபெரும் மக்கள் திரள் எழுப்புதல்

தூய.சவேரியார் காலத்தில் மீனவ கரையர் மத்தியில் தொடங்கிய இந்த மனமாற்றம் சவேரியாருக்கு பின்பு தலைமை குருவாக பணி செய்த தந்தை.அந்தோனி கிரிமினாலி காலத்தில் படிப்படியாக வளர்ச்சி பெற்று அந்தோனிக்குப் பின்னர் தலைமை குரு பணியை ஏற்ற அன்ட்ரிக் அடிகளார் காலத்தில் முழுமை பெற்றது. அன்ட்ரிக் அடிகளார் காலத்தில் பத்தாயிரம் மீனவ கரையர் திருமுழுக்கு பெற்று கத்தோலிக்க கிறிஸ்தவராயினர்.

### பிற சமூக கிராமத்தவருக்கும் தூய.சவேரியார் மூலம் நற்செய்தி

மீனவர்களான பரதவர், முக்குவர், கரையர் ஆகிய மூன்று சமூகத்தவர் மட்டுமல்லாது தென் தமிழ்நாட்டின் உட்பகுதிகளில் பெருவாரியாக வாழ்ந்த நாடார்கள் மற்றும் ஆதிதிராவிடர்களுக்கும் அவர்கள் வாழ்ந்த கிராமங்களில் தூய. சவேரியாரால் நற்செய்தி அறிவிக்கப்பட்டது. அணைக்கரை, தோப்புவிளை, சோமநாதப்பேரி, சொக்கன்குடியிருப்பு போன்ற நாடார் கிராமங்களில் வசிக்கிற கிறிஸ்தவர்கள் தாங்கள் சவேரியார் கால கிறிஸ்தவர்கள் என்பதை ஆதாரத்தோடு வெளிப்படுத்துகின்றனர். சவேரியார் கொச்சி அம்பலக்காட்டில் இருந்து தூத்துக்குடிக்கு தரை மார்க்கமாக பயணம் செய்கையில் கல்லிடைக்குறிச்சி, வீரவநல்லூர், புதுக்குடி, சேரன்மகாதேவி வழியாக நடந்து சென்றதாகவும் அந்த நேரத்தில் அவர் நற்செய்தி அறிவித்ததாகவும் அதன் மூலம் தங்கள் முன்னோர் கிறிஸ்தவர்கள் ஆனதாகவும் சேரன்மகாதேவி, புதுக்குடி, வீரவநல்லூர், ஆதி திராவிடர் சமூக தெருக்களில் வாழ்கிற கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் வெளிப்படுத்துகின்றனர் சவேரியார் பெயரில் இங்கு தேவாலயம் அமைக்கப்பட்டுள்ளது.

## சீர்திருத்த கிறிஸ்தவ மிஷனரிகள்

### அரசியல் சூழ்நிலை

1736 இல் தொடங்கிய நவாப் ஆட்சி 1791-1795 இல் வலுவிழக்கத் தொடங்கியது. நவாப் ஆட்சி காலத்திலேயே தென் தமிழ்நாட்டில் ஆங்கிலேயர் வரி வசூலிக்க தொடங்கினர். மாவட்டங்களை உருவாக்கி கலெக்டர் எனும் மாவட்ட ஆட்சித் தலைவர்களை அவர்கள் நியமித்தனர். 1801 முதல் தென் தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டம் முழுமையாக ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியின் கீழ் வந்தது. கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் போன்ற உயர் அதிகாரிகள் பிற மத வழிபாடுகளில் பங்கெடுப்பது, பிற மத கோயில்களுக்கு மானியம் வழங்குவது, தேர்த்திருவிழா, குடமுழுக்கு, கோயில் திருவிழா போன்ற முக்கிய விழாக்களின் போது வடம் பிடிப்பது, பரிவட்டம் ஏற்பது என செயல்பட்டு வந்தனர். ஆனால் தேவாலயம் கட்டுவதற்கு இடம் தருவது, பள்ளிக்கூடத்திற்கான அனுமதி தருவது போன்றவற்றில் கடின தன்மையோடே ஆங்கிலேய அதிகாரிகள் செயல்பட்டனர். நீதிமன்ற நீதிபதிகளும் மிஷனரிகளுக்கு எதிர்ப்பான நிலையையே எடுத்து வந்தனர். அக்காலத்தில் காலரா நோய் கோர தாண்டவம் ஆடியது, பெருமழை அதைத் தொடர்ந்து கொள்ளைக்காய்ச்சல் (விஷக் காய்ச்சல்) வேகமாகப் பரவி வந்தது. இந்த காலகட்டத்தில் தான் S.P.C.K, L.M.S, C.M.S, S.P.G, ஆகிய மிஷனரி சங்கத்தினர் ஐரோப்பிய மிஷனரிகளை தமிழ் நாட்டிற்கு அனுப்பி வைத்தனர்.

### கனம் C.T.E. ரேனியஸ் ஐயரவர்களின் தோற்றமும் தமிழ்நாட்டு வருகையும்:

கனம்.C.T.E. ரேனியஸ் ஐயரவர்கள் மேற்கு பிரஷ்யாவில் க்ரோட்டன்ஸ்கோட்டையில் ஆதோ கோட்லீப் நிக்கோலஸ் ரேனியஸ் – கேதரின் டாரதி தம்பதியரின் இரண்டாவது மகனாக 05.11.1790 இல் பிறந்தார். அவருக்கு வில்லியம் எனும் அண்ணனும் ஒரு தம்பியும் தங்கையும் இருந்தனர். அவர் பெர்லின் வேதாகம கல்லூரியில் கல்வி கற்று சுவிசேஷ லுத்தரன் திருச்சபைப்படி குருப்பட்டம் பெற்றார். C.M.S மிஷனரி சங்க மிஷனரியாக தமிழ்நாட்டின் சென்னைக்கு 04.07.1814 இல் வந்திறங்கினார். ஐந்து மாதம் தரங்கம்பாடியில் தங்கி தமிழ் மொழியைக் கற்றார்.

1815 முதல் 1820 வரை சென்னையைத் தலைமை இடமாகக் கொண்டு வடதமிழ்நாட்டிலும், சித்தூர் மாவட்டத்திலும் நற்செய்திப் பணியாற்றினார்.

1820 முதல் 1835 வரை C.M.S சார்பில் புதிதாக தொடங்கப்பட்ட பணித்தளமான பாளையங்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு தலைமை மிஷனரியாக இறைப் பணியாற்றினார்.

1835-1838 வரை தாம் தொடங்கிய ஜெர்மன் இவாஞ்சலிகன் மிஷனின் தலைமை மிஷனரியாக ஓரிரு மாதம் ஆற்காட்டிலும் பின் பாளையங்கோட்டையை தலைமை இடமாகக் கொண்டும் பணி செய்தார்.

**ரேனியஸின் நற்செய்திப் பணி**

ரேனியஸின் நற்செய்திப் பணி அக்கால ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டம் முழுவதுமாக இருந்தது. தற்போதைய **திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, விருதுநகர்** ஆகிய மாவட்டங்களே அக்கால திருநெல்வேலி மாவட்டம். மாவட்டம் முழுவதும் குதிரை மூலம் தனியாகவும், சபை ஊழியர்கள் மற்றும் செமினரி மாணவர்களுடன் இணைந்தும் பயணம் செய்து கிறிஸ்தவ நற்செய்தியை அறிவித்து வந்தார். ஒடுக்கப்பட்ட நிலையில் இருந்த பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் வசித்த கிராமங்களை புறக்கணிக்காமல் அவர்களது கிராமங்களில் சிறப்பாக நற்செய்தியைக் கொண்டு சென்றார்.

**பனைத் தொழிலாளர்களை அதிகமாக நேசித்த ரேனியஸ் ஐயரவர்கள்**

அக்கால திருநெல்வேலி மாவட்டத்தில் பெருமளவில் பிற்படுத்தப்பட்ட நாடார்கள் வசித்து வந்தனர். மதுரையை ஆண்ட பிற்கால பாண்டிய பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் அமைந்த விஜயநகர நாயக்கர் ஆட்சிக் காலத்தில் கடுமையான சாதிய ஒடுக்குமுறைக்கு ஆளான இவர்கள் தென் திசை நோக்கி நகர்ந்து பனையேறி பதநீர் இறக்குவது, கருப்பட்டி தயாரிப்பது, பதநீர் சீசன் நிறைவுற்றதும் விவசாயப் பணி செய்வது என தங்கள் வாழ்வை நடத்தி வந்தனர். ஏழை பனைத் தொழிலாளர்களை அதிகமாக நேசித்த ரேனியஸ் ஐயரவர்கள் அடர்ந்த பனை மரங்களுக்கு இடையே **விடலி** எனும் சிறுகுடிசைகள் அமைத்து சிறிய கிராமங்களில் வசித்த ஒடுக்கப்பட்ட நாடார் சமூகத்தினர் வாழ்ந்த பகுதிகளில் பள்ளிக்கூடங்களைத் தொடங்கினார். இறை பணியும் கல்விப் பணியும் அங்கு நடைபெற்றது. ஆசிரியர் மற்றும் உபதேசிமார்களை பயிற்றுவிக்கும் பாளை செமினரியில் அவர்களது பிள்ளைகளைச் சேர்த்து ஏராளமானோரை ஆசிரியர்களாக்கினார்.

**ஆலய நுழைவு மற்றும் கல்வி பயில இருந்த தடைகள்**

அக்காலத்தில் ஆலயங்களில் நுழைந்து வழிபடும் உரிமையும், பிராமணர்களும், சைவ வேளாளர்களும் நடத்தி வந்த திண்ணைப் பள்ளிக்கூடங்களில் கல்வி பயிலும் உரிமையும் நாடார் சமூகத்தினருக்கு தடை செய்யப்பட்டிருந்தது. நாடார்கள் கோயில் கோபுரங்களைப் பார்த்து சாமி தரிசனம் செய்து வந்தனர்.

கனம். ரேனியஸ் பணி செய்த 18 ஆண்டுகளில் சுமார் 400 திருச்சபைகளையும் சுமார் 150 பள்ளிக் கூடங்களையும் நிறுவினார். அவற்றில் பெரும்பாலானவை ஏழை பனைத் தொழிலாளர்கள் வசித்த பகுதியில் அமைந்திருந்தது. இன்று அவை மேல்நிலைப்பள்ளிகளாக கல்லூரிகளாக உயர்ந்துள்ளது.

**வழி தவறிய ரேனியஸின் பயணம் ஆழ்வாநேரி கிராமத்தையே ஆண்டவரண்டை கொண்டு வந்தது**

ஆழ்வாநேரிக்கு C.M.S தலைமை மிஷனரி கனம். C.T.E. ரேனியஸ் ஐயரவர்கள் கொல்லம் ஆண்டு 1003 இல் ஆனி மாதம் முதல் செவ்வாய் அன்று (17.06.1828) வருகை தந்தார்கள். கடற்கரையில் இருந்த இளஞ்சுனை என்ற ஊரில் இருந்து இரவில் பாளையங்கோட்டைக்கு அவசரமாக பயணம் செய்த ரேனியஸ் வழிதவறி ஆழ்வாநேரி அருகில் வந்து சேர்ந்தார்.

**ஆழ்வாநேரி கலுங்கடியான் கோவிலில் சாமக்கொடை**

ஆழ்வாநேரி கலுங்கடியான் கோவிலில் சாமக்கொடை நடைபெற்று வந்தது. கொடைவிழாவிற்காக வைக்கப்பட்ட தீவட்டி வெளிச்சம் ரேனியஸ் கண்களில் பட்டது. ஆதலால் அந்த இடத்தை நோக்கி வந்து சேர்ந்தார். ரேனியஸ் வந்து சேர்ந்த நேரத்தில் சாமியாடிக்கொண்டிருந்த தலைமை சாமியாடி **என்னிலும் வல்லவன் வந்தானே எங்களுக்கு இங்கே இடம் இல்லையே எல்லோரும் மலைக்கேகிடுவோம் எல்லோரும் மலைக்கேகிடுவோம்** எனப் பாடல் பாடியவாறு சாமியாட்டத்தை நிறுத்தினார். பிற சாமியாடிகளும் அப்படியே நின்றுவிட்டனர். அந்த இடம் அமைதியானது உடனே ரேனியஸ் ஐயரவர்கள் **'வல்லவர் இயேசு கிறிஸ்து உலக இரட்சகர்'** என்பதை குறித்து அருட்செய்தியை அருமையாக பிரசங்கித்தார் அனைவரும் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அந்த நேரம் சாமியாடி ஒருவரை ஓனான் கடித்துவிட அவர் பலவீனப்பட்டுப் போனார். கூட்டம் திகைத்து நின்றது. உடனே அந்த இடத்திற்கு சென்ற ரேனியஸ் பயந்து நின்ற மக்களுக்கு தைரியம் சொல்லி ஓனானால் கடிக்கப்பட்ட சாமியாடியின் அருகில் சென்று அவருக்காக உருக்கமாக ஜெபம் செய்து தனது பையில் வைத்திருந்த மருந்தை எடுத்து அந்த இடத்தில் பூசி விட்டார். சற்று நேரத்தில் அவர் நலம் பெற்றார்.

**நெடுவிளை கிராமத்தில் நடந்த ஒரு சம்பவத்தை நினைவு கூறுவோம்.**

நெடுவிளை ஊர் தேவதை கோயில் கொடைவிழாவில் சாமியாடி வந்தவரின் மகனைப் பாம்பு கடித்தது அனைவரும் செய்வதறியாத திகைத்தனர். இந்நிலையில் அங்கு நற்செய்தி அறிவிக்க வந்திருந்த ரேனியஸ் அன்புள்ளத்தோடு பாம்பு கடித்த இடத்தில் சிறிய கத்தியைக் கொண்டு கீறி விஷ இரத்தத்தை வெளியேற்றி அந்த இடத்தில் மருந்திட்டு குணப்படுத்தியதும் கொடைவிழாவிற்கு வந்தவர்களுக்கு இயேசுவின் அன்பை நற்செய்தியாக அறிவித்ததும் அந்த நெடுவிளை கிராமத்தைக் கிறிஸ்தவத்துக்குள் கொண்டு வந்தது அன்றைய தினமே நெடுவிளை ஊர் தேவதை கோயில் பூசாரியான சாமியாடி குடும்பத்தாரும் அநேகரும் பிற கிராமங்களில் இருந்து கொடை விழாவிற்கு வந்தவர்களும் கிறிஸ்தவத்தை ஏற்றனர். நெடுவிளை கிராமத்திற்கு **மெஞ்ஞானபுரம்** எனும் பெயர் 07.03.1830 இல் ரேனியஸால் சூட்டப்பட்டது.

ரேனியசின் அன்பு உள்ளம், உதவி செய்யும் மனப்பான்மையைக் கண்ட ஆழ்வாநேரி ஊரார் அனைவரும் ஆச்சரியப்பட்டுப் போனார்கள். சற்று நேரம் கூட்டம் அப்படியே நின்றது. சாமியாடிய சுவாமியாடி ஆட்கொண்டான் நாடாரும் அவரது இளைய மகன் சுப்பிரமணிய ஆட்கொண்டாரும் அன்றைய தினமே கிறிஸ்தவத்தை ஏற்றனர். கொடை விழாவிற்கு வந்திருந்த இருவர் ரேனியசுக்கு பாளையங்கோட்டைக்கு செல்லும் வழியைக் காட்டவும் உடன்வரவும் முன்வந்தார்கள் .

ஆழ்வாநேரி ஊர் மக்களிடம் அன்புடன் விடை பெற்ற ரேனியஸ் தமக்கு வழிகாட்ட முன்வந்த இருவரோடு

பாளையங்கோட்டை வந்தடைந்தார்.

**ஆழ்வாநேரிக்கு ரேனியஸ் மூலம் உபதேசிமார்கள் அனுப்பப்படுதல்**

இந்த சம்பவத்திற்குப் பின் ஆழ்வாநேரியோடு ரேனியசுக்கு நெருக்கமான தொடர்பு ஏற்பட்டது. ஆனையப்பபுரம் C.M.S உபதேசியார் மற்றும் பிற C.M.S உபதேசிமார்களை ஆழ்வாநேரிக்கு அடிக்கடி அனுப்பி வைத்தார். உபதேசிமார்கள் மூலம் கிறிஸ்தவ நற்செய்தி ஆழ்வாநேரியில் அறிவிக்கப்பட்டது.

1828-1829 காலகட்டத்தில் ஆழ்வாநேரியில் 30 குடும்பங்கள் வசித்து வந்தனர். அதில் 25 வீட்டார் தாங்கள் கிறிஸ்தவராக விரும்புவதாகவும் ஞானஸ்நான ஆயத்தக்காரராக தங்களைச் சேர்க்கவும் வேண்டி ஊர் தலைவர்களாக இருந்த ஆறு பெரியவர்களை 1829 ஆகஸ்ட் மாதத்தில் ரேனியஸை சந்திக்க பாளையங்கோட்டைக்கு அனுப்பி வைத்தனர். அவர்கள் அனைவரையும் மகிழ்ச்சியோடு வரவேற்ற ரேனியஸ் அவர்களது விருப்பத்தை ஏற்றுக் கொண்டார். தாம் ஆழ்வாநேரிக்கு நேரில் மீண்டும் வருவதாக உறுதியளித்தார்.

**ஆழ்வாநேரிக்கு ரேனியஸ் ஐயரவர்கள் வருகை தருதல்**



ஆழ்வாநேரி கிராம பெரியவர்களுக்கு தாம் தந்த உறுதியின்படி 30.08.1829 அன்று ரேனியஸ் ஐயரவர்கள், ஸ்மித் ஐயரவர்களுடன் ஆழ்வாநேரிக்கு வருகை தந்தார்கள். அப்போதைய முப்பிடாரி அம்மன் கோயில் சாவடியில் இறங்கி ஊராரைச் சந்தித்தார்கள். ரேனியஸ் வருவது குறித்து பிற கிராமங்களுக்கும் ஆழ்வாநேரி கிராமத்தார் சொல்லியிருந்தபடியால் சுமார் 400 பேர் அடங்கிய மக்கள் கூட்டம் ரேனியஸ் ஐயரவர்களிடம் நற்செய்தி கேட்க காத்திருந்தது.

**1829 இல் ஆழ்வாநேரி கிராமம் குறித்து ரேனியஸ் தமது நாட்குறிப்பில் எழுதியுள்ள குறிப்பு**

ஆழ்வாநேரியில் நற்செய்தி கேட்க திரளாக மக்கள் கூடியிருந்ததைக் கண்டு மகிழ்ச்சி அடைந்த ரேனியஸ் ஐயரவர்கள் அதை தமது நாட்குறிப்பில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். '30.08.1829 அன்று ஆழ்வாநேரிக்கு சென்ற போது ஆழ்வாநேரி ஜனங்கள் மகா சந்தோஷத்தோடும் மரியாதையோடும் என்னை வரவேற்றார்கள். அநேகர் வழியில் எதிர் கொண்டு வந்தார்கள். அங்கு ஐந்து குடும்பத்தார் மட்டும் உறுதி இல்லாதவர்களாய் இருக்கிறார்கள்.

**ஆழ்வாநேரி கிராமத்தாருக்கு ஞானஸ்நானம்**

1829 ஆம் ஆண்டு இறுதியில் ஆழ்வாநேரியில் கிறிஸ்தவரான அனைவருக்கும் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகளில் அந்த ஐந்து குடும்பத்தாரும் கிறிஸ்தவத்தை. ஏற்று சபையில் சேர்ந்தார்கள். இவ்வாறு ஆழ்வாநேரி ரேனியஸ் ஐயரவர்களின் காலத்திலேயே முழு கிறிஸ்தவ கிராமமாக மாறியது.

**பிற சமூக கிராமத்தவருக்கும் ரேனியஸ் மூலம் நற்செய்தி**

தென் தமிழ்நாட்டில் விவசாயப் பணியைச் செய்து வந்த ஆதிதிராவிடர் மற்றும் தேவேந்திர குல வேளாளர் சமூகத்தவர் வாழ்ந்த கிராமங்களில், காவல் பணி செய்து வந்த மறவர் சமூக கிராமங்களில் மற்றும் திவான்களாக கணக்கு பிள்ளைகளாக பணி செய்து வந்த சைவ வேளாளர் வசித்த கிராமங்கள், நகர்புறங்களில் ரேனியஸ் ஐயரவர்கள் நற்செய்தியை அறிவித்தபோது அந்தந்த சமூகத்தவர்கள் மத்தியில் சபைகள் உருவானது.

1822 இல் ரேனியஸ் ஐயரவர்களின் நற்செய்திப் பணியால் ஸ்ரீவைகுண்டத்தில் இருந்து சில கி.மீ தொலைவில் இருந்த ஆதிதிராவிடர்கள் வசித்த திருப்புளியங்குடி கிராமத்தில் நம்பி எனும் பெரியவரும் குடும்பத்தினரும் திருமுழுக்கு பெற்று கிறிஸ்தவராயினர். கிராமத்தில் பெரும் எதிர்ப்பு கிளம்பியது நம்பியின் மனைவி நம்பியம்மாள் இரத்தசாட்சியாக மரணம் அடைந்தார். சில ஆண்டுகளில் அங்குள்ளோரில் பெரும்பாலானோர் கிறிஸ்தவராயினர். இன்றளவும் கிறிஸ்தவ பக்தியில் சிறந்த திருச்சபையாக திருப்புளியங்குடி திருச்சபை காணப்படுகிறது.

ரேனியஸ் ஐயரவர்களின் நற்செய்திப் பணியால் 1823 இல் தேவேந்திரகுல வேளாளர் வசித்த கிராமமான கீழப்பாட்டத்தில் சபை உருவானது. 1829 இல் உக்கிரன்கோட்டை, முப்பிலிபட்டி, ஜம்புலிங்கபுரம் ஆகிய தேவேந்திர குல வேளாளர் வசித்த கிராமங்களில் திருச்சபை உருவானது. பிற்காலத்தில் உக்கிரன்கோட்டை அதைச் சுற்றியிருந்த தேவேந்திரகுல வேளாளர் வசித்த கிராமங்களில் நற்செய்தி பரவுவதற்கு தாய்க்கிராமமாக விளங்கியது. மறவர் சமூகத்தவர் வசித்த வைத்தியலிங்கபுரத்தில் ரேனியஸ் செய்த நற்செய்தி பணியால் 1824 இல் சபை உருவானது. பிற்காலத்தில் வைத்திலிங்கபுரம் சபை வேளூர் போன்ற பல மறவர் சமூக கிராமங்களில் நற்செய்திப் பரவவும் பலப்படவும் உறுதுணையாக விளங்கியது. சைவ வேளாளர்கள் பெருமளவில் வசித்த திருநெல்வேலி டவுன் மற்றும் பாளையங்கோட்டை பகுதிகளில் ரேனியஸ் ஐயரவர்களின் ஊழிய தொடக்கத்திலேயே சபைகள் உருவானது. இவர்கள் மத்தியில் இருந்து ஏராளமான உபதேசியார்கள் ஆசிரியர்கள் எழும்பினர். தொடக்க கால மிஷனரிகள் கிராமங்களுக்குள் கிறிஸ்தவத்தைக் கொண்டு சென்ற மேற்கண்ட வரலாற்றை முன்னுதாரணமாகக் கொண்டு நற்செய்திப் பணியைத் தீவிரப்படுத்துவோம்.

# சின்ன கருப்பன்

(எ)

# P.சுவிசேஷமுத்து உபதேசியார்

*1853–1915*

**Rev.G.P.ராஜா**




19 ஆம் நூற்றாண்டில் இன்றைய விருதுநகர் அன்று விருதுப்பட்டி என்று அழைக்கப்பட்டது. இவ்வூரின் மேற்கே அமைத்துள்ள மூன்று மைல்கல் தொலைவிலுள்ள பட்டி மற்றும் பாவாலி என இரு கிராமங்கள் உள்ளது. இந்த பட்டி என்ற கிராமத்தில் பெரியண்ணன் பிறந்தார். இவருடைய குடும்பம் நல்ல செல்வ செழிப்புடன் இருந்தார்கள். பெரியண்ணனுக்கு குறைந்த வயதில் திருமணம் நடந்தது. இவருக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் பிறந்தார்கள். முதல் மகன் பெயர் பெரியகருப்பணன் மற்றும் இளைய மகன் பெயர் சின்ன கருப்பணன் ஆவார். பெரியண்ணனின் குடும்பம் தலைமுறை தலைமுறையாக கோவிலில் பூசாரியாகவும், இந்து வைராக்கியம் கொண்ட குடும்பமாகவும் திகழ்ந்தார். மூத்த மகன் பெரியகருப்பன், சின்ன கருப்பன் சிறுவயதில் தன் தகப்பன் பெரியண்ணன் மரித்துவிட்டார். இந்த கவலையில் இருக்கின்ற சூழ்நிலையில் தன்னுடைய சொத்துக்களை எல்லாம் விற்றுவிட்டார்கள்.

பாவாலி என்னும் கிராமத்தில் கருப்பணனுடைய பெரியம்மாவும், பெரியப்பா பிச்சைக்குட்டியும் மற்றும் பிச்சைக்குட்டியின் சகோதரர் வாழ்ந்து வந்தார்கள். தொழிலுக்காக சிவகாசிக்கு முன்னே சென்றுவிட்டார்கள். பிச்சைக்குட்டிக்கு ஒரே மனைவி இருந்தார் அவருக்கு பிறந்த குழந்தைகள் ஆறு ஆண் பிள்ளைகளும், ஒரு பெண் பிள்ளைகளும் ஆவார். பிச்சகுட்டியின் சகோதரருடைய மூத்த மனைவியின் மகன் பெரியசாமி ஆவார். இந்த பெரியசாமியை சின்ன கருப்பன் என்ற சுவிசேஷமுத்துவை அதிகமாக நேசித்தார். பிச்சக்குட்டியின் சகோதரருக்கு மூன்று மனைவிகள் இருந்தார்கள். இவர்கள் மூன்று மனைவிகளுக்கும் பல ஆண் பிள்ளைகளும், சில பெண் பிள்ளைகளும் இருந்தார்கள்.

**சிவகாசியில் குடியேறுதல்:**

1853 ஆம் ஆண்டு சின்ன கருப்பன் என்ற சுவிசேஷமுத்து பிறந்தார். தன்னுடைய எட்டாவது வயதில் தந்தை பெரியண்ணன் இறந்த பிறகு தன் தாயாருடனும், தன் பெரியம்மாவுடனும் சிவகாசியில் குடியேறினார்கள். ஏற்கனவே பாவாலிருந்து வெள்ளையப்பா என்பவர் சிவகாசி மாரியம்மன் கோவிலில் பூசாரியாகயிருந்து பூஜை செய்து வந்தார். இவருடன் சின்ன கருப்பன் என்ற சுவிசேஷமுத்துவின் குடும்பமும் கோவில் வேலைகளை செய்து வந்தார்கள். பூஜைக்கு தேவையான பொருட்களை வியாபரம் செய்து, வெள்ளையப்பாவுடன் பூசாரி வேலைகளை செய்து வந்தார்கள். வெள்ளையப்பா என்பவர் சுவிசேஷமுத்துவின் உறவினர் ஆவார்.

**சின்ன கருப்பன் என்ற சுவிசேஷமுத்துவின் கல்வி:**

சின்ன கருப்பன் என்ற சுவிசேஷமுத்து வெள்ளையப்பாவுடன் பூஜை வேலைகளை பார்த்து வந்தார்.

தன்னுடைய பெரியம்மா மகன் பெரியசாமியின் கரிசனை பெரிய கருப்பன் என்ற சுவிசேஷமுத்துவின் மேல் விழுந்தது. தன்னுடைய தம்பி நல்ல ஆர்வமும், அறிவும், ஞானத்தையும் பெரியசாமியும், சுவிசேஷமுத்துவின் குடும்பத்தினரும் கண்டார்கள். அந்த நாட்களில் வட நெல்லை ஊழியத்தில் சாட்சியாபுரத்தில் மிகவும் பிரபலமான மெடோஸ் அவர்கள் தங்குவதற்கு பங்களா, சிறப்பான சிலுவை வடிவில் கட்டப்பட்ட ஆலயம், பாடசாலை கட்டப்பட்டு கல்வி சேவையும், ஆன்மீக வளர்ச்சியையும் பரவியிருந்தது. சாட்சியாபுரம் Rev.R.R.மெடோஸ் பள்ளியில் சின்ன கருப்பன் என்ற சுவிசேஷமுத்துவை கல்வி பயில சேர்த்தார்கள். சின்ன கருப்பன் என்ற சுவிசேஷமுத்து நல்ல கல்வியை கற்று வந்தார். சில ஆண்டுகள் கல்வி பயின்று நல்ல அறிவுள்ள மாணவராக திகழ்ந்தார். Rev.R.R. மெடோஸ் அவர்களின் கண்களில் சின்ன கருப்பன் என்ற சுவிசேஷமுத்துவிற்கு தயவு கிடைத்தது. Rev.R.R. மெடோஸ் அவர்கள் சின்ன கருப்பன் என்ற சுவிசேஷமுத்துவை மிகவும் நேசித்தார். Rev.R.R. மெடோஸ் வீட்டில் சுவிசேஷமுத்து குடும்பத்தில் ஒருவராக மாறினார்.

**சின்ன கருப்பன் சுவிசேஷமுத்துவாக மாறினார்:(திருமுழுக்கு மற்றும் திடப்படுத்தல்)**

சின்ன கருப்பன் என்ற சுவிசேஷமுத்துவிற்கு கைப்பிரதி கிடைத்தது, கைப்பிரதி வாசித்து கடவுளுடைய சத்தியத்தை அறிந்துகொண்டார். வேதத்தையும் வாசித்து நல்ல தேறினவராகவும், கிறிஸ்தவ ஒழுக்கத்தில் முன்னேறினவராகவும் மாறினார். சாட்சியாபுரம் பள்ளியில் படிக்கும்போதே ஞானஸ்நானம் பெற்று சின்ன கருப்பன் என்ற பெயரை மாற்றி **'சுவிசேஷமுத்து'** என்ற பெயரை மாற்றிக்கொண்டார். இந்த பெயரை Rev.R.R. மெடோஸ் அவர்கள் திருமுழுக்கு கொடுத்து பெயர் சூட்டினார்.

**சுவிசேஷமுத்து எழுதிய கடிதத்தில்:**

சிவகாசியில் முதலில் இயேசுகிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டவர் திரு.வேதமுத்து உபதேசியார். இவர் இயேசுகிறிஸ்துவை வேதம் வாசிப்பதின் மூலம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார். இவர் பாளையம்கோட்டையில் C.M.S உயர்நிலைப்பள்ளியில் உதவி ஆசிரியராக பணியாற்றினார். சிவகாசியில் இரண்டாவது நபராக சுவிசேஷமுத்து இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர் என்று அவர் தன்னுடைய கடிதத்தில் எழுதுகிறார். சில காலங்களாக கிறிஸ்துவை அறியாத நபர்களுக்கு புதிய ஏற்பாடு மற்றும் கைப்பிரதி கொடுத்து நற்செய்தி அறிவித்தார். அப்படி அறிவிக்கும் போது ஒரு இந்து வாலிபருக்கு புதிய ஏற்பாட்டை கொடுத்ததினால், அந்த வாலிபன் வேதத்தை வாசித்து, மறைமுகமாக ஜெபித்து வந்தார். இவர் திருமுழுக்கு பெறுவார் என்ற நம்பிக்கையும் சுவிசேஷமுத்துவிற்கு காணப்பட்டது. இவரைத்தவிர மற்றவர்களும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார்கள் என்று அவருடைய கடிதத்தில் எழுதுகின்றார்.

**கடவுள் செய்த அற்புதத்தின் மூலம் பாதுகாத்தல்:**


சுவிசேஷமுத்து இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, திருமுழுக்கு பெற்றதினால் அவரை சார்ந்தவர்களும், சில வெறியர்களும் சுவிசேஷமுத்துவை கொலை செய்ய வகைதேடினார்கள். அதற்காக அவர் எப்போதும் செல்லும் வழியில் கொலை வெறியர்கள் கொலைசெய்ய பதுங்கி நின்றார்கள். இதை அறிந்த ஒரு நபர் சுவிசேஷமுத்துவிடம் வந்து சொன்னதினால், கடவுள் அவர் மூலம் வேறு வழியில் செல்ல அறிவுறுத்தப்பட்டார். அதனால், சுவிசேஷமுத்து வேறு வழியாக சென்றதினால் அவர் பாதுகாக்கப்பட்டார். இதன் மூலம் கடவுள் அற்புதம் செய்தார்.

**சுவிசேஷமுத்துவின் மேல் படிப்பு :**

Rev.R.R. மெடோஸ் அவர்கள் சுவிசேஷமுத்துவின் அறிவையும், ஆங்கில மொழி கற்பதில் ஆர்வத்தையும் கண்டு, சுவிசேஷமுத்துவின் தன்னுடைய தாய், சகோதர், பெரியம்மா மகன் பெரியசாமி அவர்களுடைய முழு ஆதரவைக்கொண்டு, பாளையம்கோட்டையில் தூய ஜான்ஸ் பள்ளியில் படிக்க சேர்த்தார். அனைத்து தேர்விலும் வெற்றி பெற்றார். பல பாராட்டுக்களை சேர்த்தார். தன் படிப்புகளோடு வேதாகமத்தையும் நன்கு கற்று தேறினார். பாளையங்கோட்டை சி.எம்.எஸ். சேகன்ட்ரி போதனா பள்ளியில் ஆசிரியர் பயிற்சி முடித்து, கனம்.ஷாப்டர் துரை அவர்களால் ஆசிரியர் நியமனமும் பெற்று சாட்சியாபுரம் சி.எம்.எஸ் ஆண்கள் பள்ளியை அடைந்தார்.

**சுவிசேஷமுத்துவின் குணநலன்கள்:**

சுவிசேஷமுத்து அவர்கள் நல்ல குணமும், நாகரீகமும், சுறுசுறுப்புள்ளவராகவும், புத்திகூர்மையுள்ளவராகவும், கடவுளுடைய நடத்துதல், பராமரிப்பு ஆகியவற்றில் நன்னம்பிக்கையுள்ளவராக திகழ்ந்தார். இயேசுகிறிஸ்துவின் ஞானம், அன்பு, நீதி, இரக்கம், அனைத்து பண்புகளும்



நிறைந்தவராய் உண்மையான கிறிஸ்தவராக திகழ்ந்தார்.

**சுவிசேஷமுத்துவின் திருமணம் மற்றும் குடும்ப வாழ்க்கை :**

சிவகாசியில் மெடோஸ் மருத்துவமனையில் (இன்றைய இராக்லாந்து ஆலயம் அமைந்துள்ளது) பணிபுரிய வந்த அருள்திரு.டேவிட் அவர்களுடைய நட்பு பெரியசாமிக்கு கிடைத்தது. அதனால், தன்னுடைய தம்பி சுவிசேஷமுத்துக்கு திருமணம் முடித்து வைக்க வேண்டும் என்று நினைத்து, அருள்திரு.டேவிட் அவர்கள் தலைமையில் நடத்த விருப்பப்பட்டார். அதனால் பெண் பார்க்க ஆரம்பித்தார்கள். சி.எம்.எஸ் ஊழியத்தின் மூலம் உருவாக்கப்பட்ட நல்லூர் திருச்சபையில் ஊழிய பணி செய்த கனம்.யோவான் அவருக்கு மேரி என்ற மகள் 1859 ல் பிறந்தார். கனம்.யோவான் மகள் மேரி அவர்களை சுவிசேஷமுத்துவிற்கு திருமணம் செய்து வைத்தார்கள். அவர்களுக்கு பிறந்த

பிள்ளைகளை கர்த்தருக்கென்று பெற்று கடவுளுடைய அன்பிலே வளர்த்தார்கள். சிவகாசியில் பெரிய வீடுகட்டி பிள்ளைகளுடன் வாழ்ந்தார்கள். 1899ம் ஆண்டு நடைபெற்ற சிவகாசி ஜாதி கலவரங்களில், சுவிசேஷமுத்துவின் குடும்ப சாட்சி சிறந்துவிளங்கி பாதுகாக்கப்பட்டார்கள். இவர்களுக்கு உதவியாக சாட்சியாபுரம் குருவானவரும், சாட்சியாபுரம் வட்டகை மன்ற தலைவருமான அருள்திரு.சாமுவேல் பவுல் ஐயர் அவர்கள் சுவிசேஷமுத்து குடும்பத்திற்கு உதவியாகயிருந்தார். அநேக இந்து நாடார்கள் கிறிஸ்தவராக பெரிய பெரிய கூட்டமாக மாறி பாதுகாக்கப்பட்டார்கள். சுவிசேஷமுத்துவின் மனைவி மேரி அவர்கள் ஊழியத்திலும், தன் கனவருக்கு ஏற்ற சாட்சியுள்ள பெண்மனியாக திகழ்ந்தார்.

**சுவிசேஷமுத்துவின் பிள்ளைகள் :**

இந்திய உபதேசியார்களில் சாட்சியாபுரத்தில் முதல் தலைமையாசிரியர் சுவிசேஷமுத்து ஆவார். சுவிசேஷமுத்து மேரி குடும்பம் மிகப்பெரியது. இவருக்கு ஒன்பது குழந்தைகள் பிறந்தார்கள். இவர்களில் 5 ஆண் பிள்ளைகளையும், நான்கு பெண் பிள்ளையையும் பெற்று எடுத்த பாக்கியசாலி என்று சொன்னால் மிகையாகாது. சுவிசேஷமுத்து மேரி தம்பதிகளுக்கு இரண்டு குழந்தைகள் இறந்துவிட்டார்கள்.

1. துரைச்சாமி கிரேஸ் அவர்களுக்கு திருமணம் நடந்தது. அவர்களுக்கு வின்செண்ட், ராஜம்மாள், ஐடா, சுந்தரராஜ் மற்றும் தேல்மா ஆகிய ஐந்து பிள்ளைகள் பிறந்தார்கள்.
2. தேவ சிகாமணி சௌந்தரம்மாள் அவர்களை திருமணம் செய்து விக்டர் என்ற ஒரே மகனை பெற்றார்கள்.
3. ஞானம்மாள் தர்மராஜ் அவர்களை திருமணம் செய்து ஃபுளோரன்ஞ், கான்டன்ஞ், ஜான், ஜெயபால், ஜேம்ஸ், வின்செண்ட் மற்றும் பெட்ரீஸ் ஆகிய ஏழு பெயர்களை பெற்றார்கள்.
4. ராஜம்மாள் - செல்லச்சாமியை திருமணம் செய்து வைலட் என்ற ஒரே பெண்ணை பெற்றார்கள்.
5. ஞானையா கிரப் ஜேன் அவர்களை முதல் திருமணம் செய்து சுவிராஜ் என்பவரை பெற்றார். சுவிராஜ் அவருடைய தாய் இறந்த பிறகு, கிரப் இரண்டாவது சிரோன்மணி அவர்களை திருமணம் செய்து ஜெயராஜ், லீலா, பத்மா மற்றும் தர்மராஜ் நான்கு பிள்ளைகளை பெற்றார்கள்.
6. ராஜ நாயகம் செல்லம்மாளை திருமணம் செய்து ராதாபாய், மணோன்மணி, கனிபாய், சௌந்தரபாய், வசந்தாபாய் மற்றும் லலிதா போன்ற ஆறு பிள்ளைகளை பெற்றார்கள்.
7. செல்லராஜ் வடிவம்மாள் அவர்களை திருமணம் செய்து ஹெலன், ஸ்டான்லி, ஜுலியன், பேபி, சுகந்தி, ஜார்ஜீனா, ஜான், சாமுவேல் கிரப், பெபியோலா மற்றும் டயனா போன்ற பத்து பிள்ளைகளை பெற்றார்கள்.
8. புஷ்பம்மாள் ஜெல் அவர்களை திருமணம் செய்து ராக்கிமணி, தனமணி, ஜான், விமலா மற்றும் பெர்சிஸ் ஆகிய ஐந்து பிள்ளைகளை பெற்றார்கள்.
9. கமலாதாய் துரைராஜ் அவர்களை திருமணம் செய்து செல்லத்துரை, பொன்னம்மாள், மங்கலத்துரை மற்றும் ஞானதுரை ஆகிய நான்கு பிள்ளைகளை பெற்றார்கள். சுவிசேஷமுத்துவின் மூன்றாவது பிள்ளை ஞானம்மாளை பர்மாவில் பல ஆண்டுகள் அரசாங்கத்தில் ஆட்சியாளராக பணியாற்றிய திரு.தர்மராஜ் அவர்களுக்கு மணம் முடித்து வைத்தார்கள். இவர் ஓய்வு பெற்ற பிறகு சிவகாசிக்கு வந்தார்கள். இவருடைய தகப்பனார் பெயர் மாணிக்கம் ஆவார், தாயார் பெயர் மீனாட்சியம்மாள், திரு.P.தர்மராஜ் என்பவர்தான் சிவகாசி இராக்லாந்து நினைவு ஆலயத்தை கட்டுவதற்கு அதிக பங்கை பர்மாவிலிருந்து அனுப்பியவர், இவருடைய தாயாரின் சகோதரர் பெயர் வெள்ளையப்பா நாடார் ஆவார்.

**சாட்சியாபுரத்தில் தங்கி ஊழியம்:**

தன்னுடைய பெயருக்கு ஏற்றவாறு சுவிசேஷம் அறிவித்து அநேகருக்கு முத்தாக திகழ்ந்தவர். சாட்சியாபுரம் பாட சாலையில் பல ஆண்டுகள் கல்வி சேவை செய்தார். சாட்சியாபுரம் ஆண்கள் பாட சாலையில் முதல் தலைமை ஆசிரியராக 33 ஆண்டுகள் சேவை செய்தார்.(1879-1912) சாட்சியாபுரம் ஆலயத்தில்(தற்போது உள்ள தூய.மாற்கு ஆலயம்) உபதேசியாராக பல ஆண்டுகள் சேவை செய்தார். (1879 1912)

சுவிசேஷமுத்து மாணவர்களுக்கு வேதாகம சரித்திரங்களையும், இயேசுகிறிஸ்துவின் போதனைகளையும் கற்றுக்கொடுத்து வந்தார்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை மாலையில் சிவகாசிக்கும், அதன் சுற்றியுள்ள கிராமங்களுக்கும் சென்று நற்செய்தி அறிவிக்கப்பட்டது. விடுதியில் தங்கி படிக்கும் ஏழ்மையான பிள்ளைகளுக்கு பள்ளிக்கூடம் கட்டணம், விடுதி கட்டணம் இல்லாமல் படிக்க வைத்தார். உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல் படிப்பை படிக்க ஸ்ரீவில்லிபுத்தூர், பாளையம்கோட்டை, சென்னைக்கு மாணாக்கர்களை அனுப்பி வைத்தார். ஆங்கிலம் மற்றும் கணிதம் வராத பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுத்தார்.

சிவகாசி பகுதியை சுற்றியுள்ள கிராம ஆலயங்கள் மற்றும் கிராமங்களில் சுவிசேஷ பணியை செய்தார். பின்தங்கிய பிள்ளைகளுக்கு விடுதியில் தங்கி படிக்க உதவினார். சாட்சியாபுரத்திலிருந்து சிவகாசியில் ஜவுளி கடை தெருவில் இருக்கும் சிறிய ஆலயத்திற்கு நடந்தே வந்து ஒவ்வொரு புதன்கிழமை தாய்மார்கள் கூட்டத்தை மேரி அம்மாவும், சுவிசேஷமுத்துவும் நடத்தினார்கள். இந்த கூட்டத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டவர்கள் அநேகர்.

இதே சாட்சியாபுரம் ஆலயத்திலும், பள்ளியிலும் இவருடைய மூன்றாவது மகன் Rev.S.G.கிரப் அவர்கள் கலெக்டர் வேலை ஓய்வுபெற்ற பிறகு கௌரவ குருத்துவப்பணி செய்தது வரலாற்று சிறப்பு மிக்க செயலாகும்.

சுவிசேஷமுத்து இதே பள்ளியில் படித்தார், இதே பள்ளியில் தலைமை ஆசிரியராக கல்வி பணி செய்தார். இதே ஆலயத்தில் இரட்சிக்கப்பட்டு, திருமுழுக்குபெற்று உபதேசியராக பணி செய்தார். P.சுவிசேஷமுத்துவின் மூன்றாவது மகன் Rev.S.G.கிரப் அவர்கள் சாட்சியாபுரம் பள்ளியில் படித்து, இதே ஆலயத்தில் திருமுழுக்கு பெற்று. தன்னுடைய தந்தை பரி.மாற்கு ஆலயத்தில் உபதேசியராக பல ஆண்டுகள் ஊழியம்

செய்ததுபோல. இதே ஆலயத்தில் 1963 ஆம் ஆண்டு Rev.S.G.கிரப் அவர்கள் கௌரவ குருவாக குருத்துவப்பணியும், C.M.S. பெண்கள் உயர்நிலைப்பள்ளிக்கு மேற்பார்வையாளராகவும், 1968-1969 வரை நடுநிலைப்பள்ளிக்கு தாளாளராகவும், சிறப்பாக ஆன்மிக பணியையும், கல்வி பணியையும் செய்தார் என்பது குறிப்பிடதக்கது.

**சுவிசேஷமுத்துக்கு புகழாரம் :**

சாட்சியாபுரத்தில் சுவிசேஷமுத்து அவர்கள் பணியாற்றி வந்த காலத்தில் இப்பகுதியில் பணியாற்றிய மாவட்ட கலெக்டர் மற்றும் மாவட்ட போலீஸ் சூப்பிரண்ட்டன்ட் போன்ற உயர்ப்பணி செய்யும் ஆங்கிலேயர்களுக்கு தமிழ் கற்பிக்கும் **"முன்ஷி"** ஆகப் பணியாற்றும் சந்தர்ப்பம் கிடைத்ததால், உயர்ந்த அரசாங்க அலுவலர்களின் நன்மதிப்பையும் பெற்று இருந்தார். இவர் செய்த சேவைகளால் மக்கள் இவரை மதித்த பெருமை சிவகாசியில் சிவன் கோவிலுக்கு அருகில் **"சுவிசேஷமுத்து வாத்தியார் தெரு"** என்ற பெயர் பலகை இன்று வரை உள்ளது.

**சுவிசேஷமுத்துவின் குடும்பத்தை இரட்சிப்புக்குள் வழிநடத்தினார்:**

சுவிசேஷமுத்து தன் தாயாரையும், தன் சகோதரயும் இரட்சிப்புக்குள் வழிநடத்தினார். தன் பெரியம்மா குடும்பத்தையும், அதிகமாக நேசித்த பெரியம்மா மகன் தன் அண்ணன் பெரியசாமியையும், அவருடைய மனைவி மாரியம்மாளை இரட்சிப்புக்குள் வழிநடத்தி திருமுழுக்கு கொடுக்கப்பட்டது. இவருக்கு மரியம்மாள் என்று பெயர் சூட்டப்பட்டது.

பிச்சைக்குட்டி நாடாருடைய மனைவியையும், சில ஆண் மக்களையும், ஒரே பெண் பிள்ளையையும் கிறிஸ்துவண்டை வழி நடத்தினார். பிச்சைக்குட்டி சகோதருடைய இரண்டாம் மற்றும் மூன்றாம் மனைவியின் பிள்ளைகள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவில்லை.'

K.வெள்ளையப்பா நாடார் மற்றும் அவருடைய சகோதரிகள் இரண்டுபேர் இரட்சிப்புக்குள் வழிநடத்தி சாட்சியாபுரத்தில் திருமுழுக்கு பெற ஆயத்தப்படுத்தினார், வெள்ளைப்பாவின் மூலம் இரட்சிக்கப்பட்டவர்கள் அநேகர். K.வெள்ளையப்பா நாடார் சிவகாசி டவுன் ஜவுளி கடை தெருவில் இருக்கும் தன் சொந்த நிலத்தைக்கொடுத்து ஆலயம் கட்டப்பட்டு, Rev.R.R. மெடோஸ் அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. K.வெள்ளையப்பா நாடார் அவருடைய மூத்த சகோரியின் கணவர் திரு.பால்வண்ணன் மற்றும் அவர்களுடைய மூன்று பிள்ளைகளுக்கு திருமுழுக்கு கொடுக்கப்பட்டது.

கருப்பையா (எ) பால் மாணிக்கம், டேவிட் ராஜமணி ஆகிய இரண்டு பேரையும் இரட்சிப்புக்குள் வழிநடத்தினார். K.வெள்ளையப்பா நாடாருடைய அத்தைக்கு திருமுழுக்கு கொடுக்கப்பட்டது. இவருக்கு கிறிஸ்தவ பெயர் "ஞானபாக்கியம்" இவர்தான் வெள்ளைப்பரை சொந்த மகனாக வளர்த்தார். இவர்தான் சுவிசேஷமுத்துவின் மனைவி திருமதி.மரியம்மாள் அவர்களால் ஞானபாக்கியத்தை முதல் உபாத்தினியாக சாட்சியாபுரம் ஆலயத்திலும், பெண் கல்வி பாடசாலையில் நியாமிக்கப்பட்டார். வெள்ளையப்பாவுக்கு திருமணம் நடந்தது, அவருக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் பிறந்தார்கள். இவர்களையும் கிறிஸ்துவுக்குள் வழிநடத்தினார். சாட்சியாபுரத்தில் Rev.R.R.மெடோஸ் அவர்களால் திருமுழுக்கு கொடுக்கப்பட்டது. ஒருவருக்கு பொன்னப்பர் அதே பெயரும், இளையவருக்கு ஞானமுத்து என்றும் பெயர் சூட்டப்பட்டது.

சுவிசேஷமுத்துவின் மூலம் திரு.பாலப்பா, திரு. ஐயா நாடார் ஆகிய இருவரையும் இரட்சிப்புக்குள் வழிநடத்தி, சாட்சியாபுரத்தில் Rev.R.R..மெடோஸ் அவர்களால் திருமுழுக்கு கொடுக்கப்பட்டது. பொன்னப்பருக்கு அதே பெயரும், திரு.ஐயா நாடாருக்கு வேத நாடார் என்று பெயர் கொடுக்கப்பட்டது.. தன்னுடைய சொந்த குடும்பத்தின் உறவுகளையும், மற்ற புற சமுதாய மக்களையும் நல்வழிப்படுத்தவும், சுவிஷேசப்பணியின் மூலமாகவும் வழிநடத்தி, இறுதியாக கர்த்தருக்குள் கோதுமை மணியாக மரித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**மரணம்:**

திரு.சுவிசேஷமுத்து தன்னுடைய 62 வது வயதில் 1915 ஆம் ஆண்டு ஜீன் 29 ஆம் தேதி கர்த்தருக்குள் மரித்தார். அவரடைய கல்லறையில் எழுதப்பட்டுள்ள வாசகம் என்வென்றால், **'நாம் நலமானதை விரும்புகிறோம், ஆனால் இயேசு சிறந்ததை விரும்புகிறார்'** என்று எழுதப்பட்டுள்ளது.

திரு.சுவிசேஷமுத்துவின் மனைவி திருமதி.மேரி அவர்கள் தன்னுடைய 72 வது வயதில் 1931 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதி கர்த்தருக்குள் மரித்தார். அவருடைய கல்லறை கல்வெட்டில், நீதிமொழிகள்: 31:28- **அவள் பிள்ளைகள் எழும்பி, அவளைப் பாக்கியவதி என்கிறார்கள்** என்று எழுதப்பட்டுள்ளது. இவர்கள் இரண்டு பேர்களையும் சிவகாசி டவுன் ஆலயத்தின் பழைய கல்லறைத்தோட்டத்தில் அடக்கம் செய்யப்பட்டது.'

**சுவிசேஷமுத்துவின் நினைவாக கல்வி பணி**

சுவிசேஷமுத்துவின் மூன்றாவது மகன் அருள்திரு. S.ஞானையா கிரப் அவர்கள் தன்னுடைய தகப்பனார் பல ஆண்டுகள் பணிபுரிந்த சாட்சியாபுரத்தில். அவருடைய நினைவாக அங்கு இருந்த பெண்கள் மத்திப் பாடசாலையை, 1959 ஆம் ஆண்டு உயர்நிலைப்பள்ளியாக்கத் திட்டமிட்டு, மதுரை அத்தியட்சரவர்களின் ஒத்தாசையுடன், கல்வித்துறை சர்க்கார் அதிகாரிகளையும் கொண்டு அனுமதி பெற்றார். ஆரம்ப நாட்களில் Rev.R.R..மெடோஸ் ஐயரும், பின்னால் கனம்.F.W.பிரீட் ஐயரும் வசித்த பெரிய பங்களாவிலே வகுப்புகள் திறக்கப்பட்டு. '1960ல் பெண்கள் உயர்நிலைப்பள்ளி தொடங்கப்பட்டது.' இப்பள்ளியின் மேற்பார்வையாளராகமுதன்முதலில்அருள்திரு.ஜான்ஆசீர்வாதம் பொறுப்பேற்றார். முதல் தலைமை ஆசிரியராக திருமதி.ஹெப்சி பியூலா (1960-1968) பணி செய்தார். மூன்று ஆண்டுகளுக்கு பிறகு, அருள்திரு. S.G.கிரப் அவர்கள் பொறுப்பேற்றார். மாணவிகளின் தொகை அதிகமானதால், போதிய கட்டிடங்கள் இல்லாததினால் வெளிநாட்டு மக்களின் உதவியால் விடுதி கட்டிடங்களும், கல்விக்கென்று வகுப்பறைகளும் கட்டப்பட்டது. சாட்சியாபுரம் பள்ளி ஓர் சாட்சி நிறைந்த மிஷன் நிறுவனமாகவும், நல்ல பக்தியுள்ள மிஷனரிகளாலும், இந்திய ஊழியர்கள் பலர் நல்ல ஊழியத்தை நிறைவேற்றிய நிறுவனமாகும். இந்த பள்ளி தற்போது சுவிசேஷமுத்து C.M.S பெண்கள் மேல் நிலைப்பள்ளியாக உயர்ந்துள்ளது.

# தாவீது உபதேசியார்

சார்ல்ஸ் துரைசிங்,
செக்கடிவிளை

தாவீது உபதேசியார் சாத்தான்குளம் சந்தையில் வாரந்தோறும் செய்த ஊழியத்தின் பயனாக செக்கடிவிளை சபை உண்டாயிற்று.

செக்கடிவிளையில் வேத மார்க்கத்தில் சேர்ந்தவர் பத்து குடும்பத்தினர். அவர்களுக்கு ஒரு கோயிலிருந்தது. அம்மக்கள் அக்கோயிலில் வைத்துத் தாங்கள் அதுவரை வணங்கி வந்த சாமி சிலைகளை அகற்றிவிட்டு அதை தாங்கள் கர்த்தரை வணங்கும் தேவாலயமாக மாற்றியமைத்தார்கள். ரேனியஸ் ஐயர் 18.02.1825 அதை பிரதிஷ்டை செய்தார். சாத்தான்குளம் சபையாரும் அங்குள்ள ஊழியரும் செக்கடிவிளை கிறிஸ்தவர்களை ஞானஸ்நானத்துக்கு ஆயத்தப்படுத்தினர்.

ஐயம்பெருமாள் என்னும் முதியவர் (வயது 79) அவ்வூரில் முதல் கிறிஸ்தவர். அவருடன் சிவஞானம், சிவசுப்பிரமணியன், நல்லபெருமாள் முதலியோரும் மேலும் பலரும் கிறிஸ்து நாதரை ஏற்றுக் கொண்டனர். சாத்தான்குளம் சபையாரும் ஊழியர் சிலரும் அவ்வூரார் கிறிஸ்தவ விசுவாசத்திலிருந்து விலகாதிருக்க பெருந்துணையாயிருந்தனர். ரேனியஸ் ஐயர் செக்கடிவிளையில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட சிவசுப்பிரமணியன், நல்லபெருமாள், சிவஞானம் மூவரையும் பாளையங்கோட்டை செமினரியில் உபதேசியார் பயிற்சி பெறும்படி செய்து 25.12.1825 கிறிஸ்மஸ் தினத்தன்று ஞானஸ்நானம் கொடுத்தார்.

சிவசுப்பிரமணியன் - அருளானந்தம், சிவஞானம் ஆரோக்கியம், நல்லபெருமாள்-நற்குணத்தான் என்றும் புதிய பெயர்களில் ஞானஸ்நானம் பெற்றனர். நற்குணத்தான் செக்கடிவிளையில் முதல் உபதேசியாராக நியமிக்கப்பட்டு சிறந்த ஊழியம் செய்து தன் ஊராரை ஞானஸ்நானத்துக்கு ஆயத்தப் படுத்தினார். ரேனியஸ் ஐயர், ஸ்மிட் ஐயர் முதலியோரும் அடிக்கடி அவ்வூராரை சந்தித்துப் போதித்து வந்தனர். நற்குணத்தான் உபதேசியாரின் ஊழியத்தின் பயனாக மறுவருஷம் (1826) செப்டம்பர் 26 ம் நாளில் ரேனியஸ் ஐயர் செக்கடிவிளைக்குச் சென்று அக்கிறிஸ்தவ மக்களைச் சோதித்து அவர்களில் 33 ஆத்துமாக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்.




நற்குணத்தான் உபதேசியாரின் நான்கு மக்களும் மோசே, அன்னம்மை, ஞானமுத்து, பேதுரு என்று ஞானஸ்நானம் பெற்றார்கள். அவருடைய நண்பனான ஆரோக்கியத்தின் மனைவி பரமராக்கியும் அவ்வாராதனையில் ஆனந்தாயி (22) என்ற பெயருடன் கிறிஸ்து சபையில் அங்கமானார்.

C.M.S சபையில் செக்கடிவிளை உபதேசியார் நற்குணத்தான் ஒரு திறமை மிகுந்த சுவிசேஷகன். அவரது மனைவி முத்தாயி அவருக்கேற்ற உத்தமி. நற்குணத்தான் மகன் ஞானமுத்து திருவரங்கநேரி சபையின் முதல் சபை ஊழியர் (1842). ஞானமுத்து திருவரங்ககநேரியில் யோசேப்பு என்வரின் மகள் பாக்கியத்தை திருமணம் செய்தார்.

இறுதியாக நற்குணத்தான் அனுக்கிரகபுரம் சபையிலேயே ஆசிரியராகவும், சபை ஊழியராகவும் பணி செய்து அங்கேயே மரித்து அடக்கம் செய்யப்பட்டிருக்கலாம். நற்குணத்தாரின் சந்ததி நம்மில் யார் யாரோ...

G Pay
சந்தா அனுப்ப
கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்
G-pay (Google Pay) மூலமாக சந்தா நன்கொடை அனுப்ப .....
'வரலாற்றுச் சுவடுகள்' – மாத ஆய்விதழுக்கென்று G-pay(Google Pay) மூலமாக நன்கொடை அனுப்ப விரும்புகிறவர்கள், 91767 80001 என்கிற இந்த எண் மூலமாகவும் அனுப்பலாம். நீங்கள் சந்தா நன்கொடை அனுப்பிய பின்பு, அதைக் குறித்த முழு விபரங்களை இதே எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WhatsApp மூலமாகவோ, அல்லது christianhistorical@gmail.com மூலமாகவோ எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.

தமிழ் நாட்டின் தனிப்பெரும் நாவலாசிரியர்

அ.மாதவையா

அவர்களின்

# கிளாரிந்தா

தமிழ்நாட்டில் வெளி வந்த முதல் வரலாற்று நாவல்



## தொடர்– 23

நான் இப்பொழுது உனக்கு ஒரு கதை சொல்லப் போகிறேன். அதைக் கேட்ட பிறகு உலகத்தில் நீ ஒருத்திதான் துர்ப்பாக்கியசாலி என்று நினைக்கத் தோன்றாது. நான் வெகு நாட்களாக இந்தக் கதையை உன்னிடம் சொல்லவேண்டும் என்று விரும்பினேன். சொல்லட்டுமா, நீ கேட்பதற்குத் தயார்தானா?' என்றார்.

அவருடைய கரம்பட்டுக் கிளர்ச்சியடைந்த கிளாவிருந்தா, தன் கையை மெல்ல விடுவித்துக்கொண்டு மெல்லிய குரலில், 'சொல்லுங்கள்' என்றாள்.

'இக்கதை என் தேசத்தினன் ஒருவனைப் பற்றியது. அவன் சிறுவனாக இருந்தபோது பெற்றோர் அவன்மீது மிகவும் பிரியமாக இருந்தார்கள். அவன் தாய்க்கு அவன்மீது மிகுந்த அன்பு. அவனும் தன் தாயை பெண்களில் உத்தமியாகப் போற்றி வந்தான். அவன்தான் வீட்டில் மூன்றாவதும் கடைசிப் பையனுமாக இருந்தான். தகப்பனார் வசதி உடையவராதலால் கிடைக்ககூடியதில் சிறந்த கல்வியை அவனுக்கு அளித்தார். பள்ளிப் படிப்பில் சிறந்து விளங்கியதால், பெற்றோர் அவன் எதிர்காலம் மிக உயர்வாக இருக்கும் என்று எண்ணினர். தந்தையைப்போல் பாதிரியாராகி, ஒரு பெரிய சபைக்குத் தலைமை தாங்கக்கூடும் என்று எதிர்பார்த்தனர்.

'பள்ளிப் படிப்பு முடிந்து அவன் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தபோது, ஒரு விடுமுறைக் காலத்தில் நண்பனைப் பார்ப்பதற்காக ஒரு கடற்கரைப் பட்டினத்திற்குச் சென்றான். அங்கு தன் வயதை ஒத்த ஒரு பெண்ணைக் கண்டு, கண்டதும் காதல் கொண்டான். பெண்மையைப்பற்றி அவன் கொண்டிருந்த கற்பனைகள், காதல் கனவுகள் அனைத்தும் கலந்த ஓர் அவதாரம் அவள் என்று அவன் நம்பினான். அவளருகில் இருக்கும் போது இன்ப வேதனையில் சிலிர்த்துப்போனான். அவளும் அந்த இளைஞனைக் காதலிப்பதாகச் சொல்லி அவன் உத்வேகத்துக்குத் தயக்கமில்லாமல் தன்னை அர்ப்பணித்தாள். அது அவளுடைய உண்மைக் காதலுக்கும் ஆழ்ந்த அன்புக்கும் அடையாளம் என்று அவன் கருதினான். அந்தக் கடற்கரைப் பட்டினத்தில் கடற்படை வீரருக்கும் கெட்டுப்போன பெண்களுக்கும் மணம் செய்வித்து வயிறு பிழைக்கும் பாதிரிமார் உண்டு. அந்த இளைஞனும் பெண்ணும் சந்தித்துக்கொண்ட ஒரு வாரத்துக்கெல்லாம் அப்படிப்பட்ட பாதிரி ஒருவரால் அவர்கள் கலியாணம் நடந்தேறியது.

அந்த இளைஞன், மணப்பெண்ணின் அழகையும் குணத்தையும் வர்ணித்து, தனக்குத் திருமணமாகிவிட்ட செய்தியைப் பெற்றோர்க்கு எழுதினான். அவர்கள் திகைப்புற்று நேரில் புறப்பட்டுவந்து பெண்ணைப் பார்த்து விசாரித்து அறிந்த போது மிகுந்த அதிருப்தி அடைந்தார்கள்.

'அவளுக்கு ஒரு கணிசமான தொகையைக் கொடுத்து ஒதுக்கி விட்டு, அவளை விட்டு விட்டுத் தங்களுடன் வந்து விடும்படி பெற்றோர் அவனுக்கு ஆலோசனை சொன்னார்கள். தன் வாழ்க்கையிலேயே முதல் தடவையாக அந்த இளைஞன் பெற்றோர் சொல்லை எதிர்த்து, அவர்கள் மனம் நோகச் செய்தான். தந்தை கௌரவமான வாழ்க்கை நடத்துபவர். கண்டிப்பு மிகுந்தவரும்கூட. பையனின் பிடிவாதத்தால் கோபமுற்று அவனுடன் உறவை முறித்துக்கொண்டு கிளம்பிவிட்டார். பையன் சிலகாலம் காதல் போதையில் மூழ்கிக் கிடந்துவிட்டு விழித்தபோது செலவுக்கு இல்லாமல் திண்டாடினான். பெண் கவர்ச்சி மிகுந்தவளாக இருந்ததுபோல படாடோப வாழ்க்கையில் ஆசை மிகுந்தவளாகவும் இருந்தாள்.'

கதையை ஆர்வமுடன் கேட்டுக்கொண்டு வந்த கிளாவிருந்தா, 'அவன் அவளை மிகவும் நேசித்ததால், வசதி படைத்த தந்தையிடமிருந்து குடும்பச் சொத்தில் தன் பகுதியைக் கேட்டு வாங்கியிருக்கக்கூடாதா?' என்று கேட்டாள்.

'இந்து மதச் சட்டப்படிதான் பூர்வீகச் சொத்தில் எல்லா ஆண் மக்களுக்கும் சொத்தில் சமபாத்தியதை உண்டு. ஆனால், எங்களுடைய சேஷ்டபுத்திர உரிமைச் சட்டப்படி இந்த இளைஞன் மூன்றாவது பையனாதலால் இவனுக்கு ஒரு செப்புக் காசுகூடக் கிடைக்காது. அவன் தாயும் சகோதரிகளும் தங்கள் கையிருப்பிலிருந்து திருட்டுத்தனமாக சில காலம் கொஞ்சம் அனுப்பி வந்தார்கள்.

அவன் பிழைப்புக்கு வழி தேடிக்கொண்டு இருந்தான். மனைவியிடம் டாம்பீகச் செலவுகளைக் குறைத்துச் சிக்கனமாக இருக்கக்கூடாதா என்று கேட்டுக்கொண்டான். ஆனால், பயன்

ஏதும் இல்லை. அவன் பணக்கார வீட்டுப்பிள்ளை என்று அறிந்து அவன் பணத்தின்மீது தான் அவள் காதல் கொண்டாள் என்பதைப் புரிந்துகொண்டான். இருந்தும் அவன் அவளை அன்புடன் பராமரித்து வந்தான். ஆனால், அவள் வரவர அவனிடம் அன்பில்லாமலும் கொடூரமாகவும் நடந்துகொண்டாள். முதலில் அவன் பெற்றோர் சொன்னபடி பணத்தைக் கொடுத்தால், தான் அவனை விட்டுப் போய்விடுவதாகவும் சொன்னாள். இதனால் அந்த இளைஞன் வெறி பிடித்தவன்போல் ஆகித் தற்கொலை செய்துகொள்ளலாமா என்றும் நினைத்தான். இதற்கிடையில், அவனது அழகிய லட்சிய மனைவி குடிக்கவும் தொடங்கினாள். மேல் நாட்டில் இது ஒரு சாபம். அதைவிடவும் படுகுழியில் விழுந்துகொண்டிருக்கிறாள் என்று சந்தேகிக்கவும் இடமிருந்தது. அவள்மீது இன்னும் அவனுக்குச் சற்றுப் பாசமும், பாசத்தைவிட அதிகமாக இரக்கமும் இருந்தது. ஆகையால் அவளைக் காப்பாற்றுவதற்காக எத்தனையோ முயற்சிகள் செய்தான். பலன் எதுவும் இல்லாததால் இருபதுவயது நிரம்புவதற்குள்ளேயே வாழ்க்கையை வெறுத்தவனாய், நிராசையோடு இந்தத் தொலை தூர நாட்டுக்குப் பரதேசியாக வந்துவிட்டான்' என்றார்.

'அவன் ஏன் தன் பெற்றோரிடம் திரும்பிப் போகவில்லை? போயிருந்தால் அவர்கள் மன்னித்திருக்கமாட்டார்களா? அவர்கள் உதவியால் அவன் அவளையும் காப்பாற்றி இருக்கலாமே. அப்படியும் அவள் திருந்தாவிட்டால் அவன் வேறு யாரையாவது ஒரு நல்ல பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருந்திருக்கலாம்' என்றாள் கிளாவிருந்தா.

அவர் கவலையுடன், 'பெருமைதான் அவனைத் தடுத்திருக்க வேண்டும் அல்லது கண்டிப்பான தந்தையிடம் கொண்ட பயம் குறுக்கிட்டிருக்கலாம். என்ன காரணமோ அவன் தன் பெற்றோரையும் சகோதர சகோதரிகளையும் மீண்டும் சந்திக்கத் துணியவில்லை. கிறிஸ்தவர்கள் ஒரு தாரம் இருக்கையில் மறுதாரம் செய்துகொள்வது சட்ட விரோதம். அதனால்தான் வேறு நல்ல பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளவும் அவனால் முடியவில்லை.'

'எங்களுடைய சாதிக்கட்டைப்போல்தான் உங்கள் சேஷ்ட புத்திர உரிமைச் சட்டமும் இருக்கிறது. இரு தாரத்தைக் குற்றமென்று கொள்கிற உங்கள் சட்டம் மிகுந்த நியாயமானதாக மனிதாபிமானமுள்ளதாகத் தோன்றுகிறது. ஆனால், உங்களைப் போன்றவர்களுக்கு அது மிகவும் இடைஞ்சலானது இல்லையா?' என்றாள். பின்னும் தொடர்ந்து:

'மன்னிக்கவும். உங்கள் கதையில் குறுக்கிட்டு விட்டேன், சொல்லுங்கள். வெளி நாட்டுக்கு ஓடின அந்த இளைஞனும் அவனது உதவாக்கரை மனைவியும் என்ன ஆனார்கள்?'

'அவள் தீராத குடிகாரி ஆகி மிகவும் கேவலமான முறையில் வாழ்ந்துகொண்டிருந்தாள். அவளுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது.'

அவன்? 'கடவுள் அவனிடம் கருணை காட்டினார். அவரது ஆழ்ந்த குரல் உணர்ச்சியாலும் சோகத்தாலும் கனத்திருந்தது.

'புதிய தொழிலில் இறங்கினால் பழைய நிகழ்ச்சிகளை மறந்து விடலாம் என்று எண்ணி அவன் ஆபத்தும் சிரமுமான முயற்சிகளில் எல்லாம் தன்னை ஈடுபடுத்திக்கொண்டான். புதுச் சூழ்நிலையில் ஓரளவுக்குப் பழங் கதையை மறந்தும் போனான். ஆனால், சில வருடங்கள் கழித்து, எதிலும் அதிகப் பிடிப்பு இல்லாமல் வாழ்ந்துகொண்டிருந்தவன் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சியானது அவனுக்கு வாழ்க்கையில் ஒரு லட்சியத்தையும் நோக்கத்தையும் உருவாக்கிக் கொடுத்தது. பருவத்தின் உச்சத்தை எட்டியிருந்தும் கடந்த காலத்தின் கசப்பு மாறவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் வாழ்க்கையைக் குருடனைப்போலத் தடவிக்கொண்டிருந்த அவன், இப்பொழுது வாழ்க்கையில் ஒரு புது அழகையும் ஒளியையும் கண்டான். இந்தப் புது மகிழ்ச்சி அவன் நெஞ்சில் பெருக்கெடுத்ததும், பழம் நினைவுகள் கனவைப்போல் மறைந்து விட்டன. இந்த அனுபவத்தால் அவன் வாழ்க்கையே ஒரு வரப்பிரசாதம் என்று கருதினான். யாராவது வரம்வேண்டித் தவம் செய்யும்போது, தேவர்கள் அவனது பக்தியையும் விடாமுயற்சியையும் சோதித்துத் திருப்தியடைந்த பின்னரே, வரம் அருள்வதாக உங்கள் புராணக் கதைகள் சொல்லவில்லையா? அதைப்போல கடவுளும் இந்த மனிதனைச் சோதித்து, அவன் தவத்தைக் கண்டு பிரீதி அடைந்தார்போலும். ஏனென்றால், அவன் தன் சகபாடிகளைப்போல் இந்தத் தொலை தேசத்தில் ஒழுக்கக் குறைவாக நடந்துகொண்டால் அதனால் கெட்டுப் போவதுதான் என்ன? என்ற மனப்பான்மையுடன், தெய்வ பயமே இல்லாமல் கேளிக்கைகளிலும் சிற்றின்பங்களிலும் ஈடுபடவில்லை. அவமான உணர்ச்சியும், பாவம் செய்தால் மனம் வருந்தும் தன்மையும் அவனிடம் எப்பொழுதும் இருந்தன. சந்நியாசியைப்போல அவன் வாழ்ந்த தனிமை வாழ்வைக் கண்டு கடவுள் மனம் இரங்கியிருக்கவேண்டும். அதனால்தான் கடவுள் அவனுக்கு இத்தகைய அரிய கருவூலத்தை அருளியிருக்கிறார். அவனுக்கு நிகழ்ந்தது என்ன என்று உனக்கு யூகிக்கமுடிகிறதா?'

அவர் அவள் முகத்தை நோக்கித் திடீரென்று அந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டார். கண்களில் மகிழ்ச்சி சுடர் விட்டுக்கொண்டிருந்தது. அவள் அவரை ஏறிட்டுப் பார்த்தாள். ஆனால், அவர் கண்களைச் சந்திக்க முடியாமல் வெட்கத்தில் தலை கவிழ்ந்தாள்.

'உனக்கு யூகிக்கமுடியவில்லையா?' என்று மீண்டும் மெல்லிய குரலில் கெஞ்சும் பாவனையில் கேட்டார்.

அவள் நெஞ்சில் விசித்திரமான, ஆனால் சுகமான குழப்பம் ஏற்பட்டது. குனிந்த தலையை நிமிர்த்தமுடியாமல் மிக மிக மெல்லிய குரலில் 'அவர் திரும்பவும் காதல் கொண்டாரா?' என்றாள்.

'ஆம், நீ சொல்வதுபோல அவன் திரும்பவும் காதல் கொண்டான். ஆனால், இது முற்றிலும் வேறுபட்டது. அவன் வாழ்க்கையின் வசந்தகாலத்தை விஷமாக்கிக் கிறுகிறுப்படையச் செய்த பழைய காதல் அல்ல இது. உங்கள் நாட்டில் பரிசுத்தமான இமாலயத்தின் பனி மூடிய சிகரங்களில் இருந்து புறப்பட்டு வழியெல்லாம் வரங்களை அள்ளிக் கொடுத்துக் கொண்டு ஆழ்கடலை நோக்கிப்போகின்ற பிரமாண்டமான நதியின் சாந்தமும் சக்தியும் கொண்ட வெள்ளப்பெருக்குப் போன்றது அவன் காதல். கோடை மழை பெய்ததும் சேற்றையும் சகதியையும் அடித்துக்கொண்டு சலசலத்த வண்ணம் ஓடிவந்து விரைவில் மணலில் வற்றிப்போகும் நீரோட்டத்தைப் போன்றது அல்ல

அவன் காதல். ஆம், அவன் இப்பொழுது காதலித்தான். ஆனால், எத்துணை வேறுபட்ட காதல்! அவன் அன்பு செய்த அந்தப் பெண் வேறு இனத்தவளாயினும், பெண்மையின் இலட்சியம் என்று அவனுக்குக் கற்பிக்கப்பட்ட சித்திரத்திலிருந்து சில அம்சங்களில் மாறுபட்டவளாயினும், பெண்களில் மாணிக்கம் போன்றவள். சக்கரவர்த்தியின் மகுடத்தில் பதிக்கத் தகுந்த கோஹினூர் வைரத்தை ஒத்தவள். புடமிடப்பட்டுப் பரிசுத்தமாக ஒளிரும் பொன்னைப்போல அவளும் பல துன்பங்களை அனுபவித்துக் கடவுளால் சுத்திகரிக்கப்பட்டவள். இத்தகைய ஒரு விலையேறப் பெற்ற அன்பை அவனுக்கு வழங்க கடவுள் திருவுள்ளம் கொண்டார். இந்த அன்புப் பாதையில் ஏற்படும் இடைஞ்சல்களினாலேயே, அது மேலும் புனிதமடைந்து வலுப்பெற்று, ஆழமுடையதாகிறது. ஆனால், இறைவன் தம் வரத்தை ஒருநாளும் வீணிலே வழங்கமாட்டார். அவர் வழிகள் சர்வ வல்லமை பொருந்தியதும் மர்மம் நிறைந்ததாகவும் உள. இந்த அன்பு அனுபவத்தையே அவன் ஒரு வரமாக நினைக்கிறான். அது வெற்றியடையுமா என்ற தயக்கத்தினால் வெளியில் சொல்லாமல் தன் இதயத்துள் அடக்கி வைத்திருந்த காலத்திலும் அது அவனுக்கு விவரிக்க முடியாத இன்பத்தை அளித்தது. ஒருமகாகவி, இயற்கையின் ஒரு லீலையால் உலகம் அனைத்தும் ஒன்றாகிவிடுகிறது என்பதுபோல, அவளும் அவன் மகிழ்ச்சியில் சிரத்தை கொண்டிருக்கிறாள் என்று அவன் அறிந்தபோது, அவனது ஆனந்தத்துக்கு அளவே இல்லை. கடவுள் தனக்கு அருளிய ஆசீர்வாதத்தால் மனம் நிறைந்து அவருக்குத் துதி செய்தான்!'

தமது சொற்களின் விளைவைக் கவனிக்குமாறு நிறுத்தினார். அவள் இன்னும் அவரைப் பார்க்காமல் வேறு எதையோ பார்த்துக்கொண்டிருந்தாள். ஆனால், மகிழ்ச்சியில் அவள் கண்கள் ஒளி வீசின; அவருக்கு அவள் உணர்ச்சிகள் தெளிவாகப் புலப்பட்டன. அதற்குமேல் அவர் பேசத் துணியவில்லை. அவள் முதலில் பேசட்டும் என்று காத்திருந்தார். வெட்கி முகம் சிவந்த கிளாவிருந்தா வேறு பக்கம் பார்வையை ஓட்டிய வண்ணம் தடுமாறிய குரலில் பேச ஆரம்பித்தாள்.

'ஆனால் அவர் திரும்பவும் கல்யாணம் செய்துகொள்ள முடியாதென்று சொன்னீர்கள். அப்படியானால் அவர் அன்பு எப்படி வெற்றி பெறும்? இப்போது சொல்லுங்கள். இது யாருடைய கதை?' அவள் அவரை ஏறிட்டுப் பார்த்தாள். தன் விதி அங்குதான் எழுதப்பட்டிருப்பதுபோல அவரும் அவள் கண்களை உற்றுப் பார்த்தார். அவளுக்குத் தெளிவாகப் புரிந்துவிட்டது. மனக்கலக்கத்துடன் வேகமாக எழுந்து அறையை விட்டு வெளியே சென்றாள்.

**நலம் கருதி ஒரு பொய்!**

திருச்சிராப்பள்ளி அதிகாரிகள் குடியிருப்பு ஒன்றின் வராந்தாவில் லிட்டில்டன் பரபரப்பான மனநிலையில் மிக வேகமாகக் குறுக்கும் நெடுக்கும் நடந்துகொண்டிருந்தார். அவருடைய நண்பர் ஷெர்கான்-இப்பொழுது நவாபின் படையில் குதிரைப்படை அதிகாரியாக இருப்பவர்-திண்டு வைத்த சோபா ஒன்றில் சாய்ந்தவண்ணம் ஹூக்காவைப் புகைத்து, அதன் நறுமணப் புகையை உறிஞ்சிக்கொண்டு, அது போட்ட சத்தத்தை தேவகானமாகக் கருதி ரசித்துக்கொண்டிருந்தார். அவர் லிட்டில்டனைப் பார்த்து:

'சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி சமயோசிதமாகத்தான் நடந்துகொண்டிருக்கிறீர்கள். அப்பட்டமான உண்மை சில வேளைகளில் பயங்கரமாகத்தான் இருக்கும். சில சூழ்நிலைகளில் குற்றமும்கூட. இது நிச்சயமாக அப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பம்தான்.'

'உண்மையை அப்படியே சொல்லியிருந்தால் நம்பிக்கையே இல்லாமல் போயிருக்குமே. என் வாழ்நாள் முழுவதும் துக்கம் நிரம்பியதாகிவிடும். ஆனால் எத்தனை நாள் அவளிடமிருந்து இதை மறைக்க முடியும்? இப்பொழுதுகூட அவள் யூகித்திருக்கலாம். ஆனால் நான் சொல்லுவதை நம்பிவிடுவாள். அதனால் தான் எனக்குக் கவலையாக இருக்கிறது. இப்படிப்பட்டவளை நான் எப்படி ஏமாற்றுவேன்?' என்று அங்கலாய்த் தார் லிட்டில்டன்

ஷெர்கான் தோள்களைக் குலுக்கிக்கொண்டு பேசினார்: 'பொய்யெல்லாம் பொய்யல்ல. உண்மையெல்லாம் உண்மையும் அல்ல. ரொம்பவும் எதிர்பார்க்கக்கூடாது. **எழுத்தைவிட கருத்தே முக்கியமாகிறது**. நான் சொல்லுகிற திட்டம் உங்கள் இரண்டுபேருக்கும் மகிழ்ச்சி தரவல்லது. நீங்கள் சொல்லுவதைப் பார்த்தால் கலியாணம் என்று ஆகாவிட்டால் அவள் உங்களோடு எந்தச் சம்பந்தமும் வைத்துக் கொள்ளமாட்டாள் போலிருக்கிறது இல்லையா?'

'ஆம், அது நிச்சயம்.'

'பின்னே இந்தச் சந்தர்ப்பத்தில் உண்மையை அப்படியே சொல்வதால் யாருக்கு என்ன லாபம்? பேசாமல் இருந்து விடுவதால் என்ன நஷ்டம் வந்துவிடப்போகிறது? உங்களுக்கு எப்பொழுது விடுதலை கிடைக்கிறதோ அப்பொழுது அவளை உடனே திருமணம் செய்துகொள்ளப் போவதாகச் சொல்லுகிறீர்கள். உங்கள் மனச்சான்றைத் திருப்திப்படுத்த அது போதுமானது. அவளுடைய விசித்திரமான சாதிச் சட்டப்படி அவள் விதவையாக இருப்பதால் திருமணம் செய்து கொள்ளவே முடியாது. நான் முன்பு சொன்னதுபோல ஏதாவது ஒரு சடங்கைச் செய்துகொண்டீர்களானால் அதுவே அவளுக்குத் திருப்தியாகப் போய்விடும். உண்மையைச் சொல்லி இரண்டு பேரும் மருகி மாய்ந்து வாழ்க்கையை வீணடிப்பதை விட்டுவிட்டு ஆனந்தமாக இருக்கலாம்.'

'பொய் பொய்தானே; அது இல்லாமலே காரியம் கைகூடுவதானால் எவ்வளவு மனநிம்மதியாக இருக்கும்!' என்றார் லிட்டில்டன் விசனத்துடன்.

'பொய்தான். ஆனால் இது பரிசுத்தமான பொய் என்பேன். உங்கள் நாடகமொன்றில் ஒரு ஐரோப்பிய மாது, தனது மூர் காதலனால் கொலையுண்டு கிடக்கும்போது உயிர் போகும் தறுவாயில் அவனைக் காப்பாற்றுவதற்காகப் பொய் சொன்னதாகச் சொல்லுவீர்களே, அதைப் போன்றது இது. பொய் சொல்லுகிறோமே என்று நீங்கள் மனமார வருந்துவதாலேயே அந்தப் பொய் இன்னும் மகத்துவம் பெறுகிறது. காதலுக்காகச் செய்யப்படும் தியாகம் இது. அந்நாளில் ஆதாம் பாவம் செய்துவிட்டான் பாருங்கள், அதனால் தான் எந்த மகிழ்ச்சியும் பரிபூரண வடிவில் நமக்குக் கிட்டமாட்டே னென்கிறதுபோலும். நீங்களும் நானும் உலகத்தை அமைக்கிறதானால் இதைவிடச் சிறப்பாக அமைத்துவிடலாம்.

அப்படி நாம் நினைத்துக்கொள்ளுகிறோம் என்றாவது வைத்துக் கொள்ளுங்களேன். **'முள்ளில்லாத ரோஜா இல்லை என்பது தான் உண்மை. பூ வேண்டுமானால் முள் குத்துவதை சகித்துக் கொள்ளத்தான் வேண்டும்'** என்றார் ஷெர்கான்.

உங்கள் தத்துவம் அது. சற்று சௌகரியமானதுங்கூட. எனக்கு அதிலெல்லாம் நம்பிக்கை இல்லை. ஆமாம். என் சங்கடம் உங்களுக்குப் புரிகிறதா, இல்லையா?'

'நன்றாகப் புரிகிறது ஐயா, உங்களைப் பார்த்தால் பாவமாகவும் இருக்கிறது' என்றார் பரிவுடன். தொடர்ந்து: 'நான் என்றாவது பொய் சொல்லவோ, வேறு கண்ணியக் செயல்களைச் செய்வதையோ நீங்கள் பார்த்து குறைவான திருக்கிறீர்களா? உங்கள் சங்கடம் புரியாத முட்டாளும் அல்ல நான். ஆனால் இந்த விசித்திரமான நிலையில் நான் இருந்தால், நான் இப்படித் தயங்கமாட்டேன். இதனால் யாருக்கும் விளையப்போவதில்லை. மனைவி குணமாகி உங்களிடம் வந்து இருக்கக்கூடிய நிலையில் இருந்தால், நானும் இதைக் கண்டனம் தான் செய்வேன். அதுவும் உங்கள் ஒழுக்க முறையை அளவுகோலாகக்கொண்டுதான். நல்ல காலம் எங்கள் மதாசாரப்படி இந்த விஷயத்தில் நபி எங்களுக்கு நிறைய சுதந்திரம் கொடுத்திருக்கிறார்.'

'அவள் சுகம்பெறுவது இனி நடக்கிற காரியமில்லை. அவளுக்கு எந்த நிமிடமும் மரணம் நேரலாம். அந்தச் செய்தியைத்தான் எதிர்பார்க்கிறேன்' என்றார் விட்டில்டன். 'பின் என்ன? நீங்கள் இனிமேலும் காத்திருப்பது தேவையில்லை. அது முடியவும் முடியாது என்ற நிலையில் இருந்து கொண்டு எதற்காக நீங்கள் அவதிப்படவேண்டும். ஒரு வேளை உங்கள் மனைவி இறந்துபோன செய்தி வழியில் வந்து கொண்டுகூட இருக்கலாம்.'

'ஆனால் இந்தப் பெண் என்றாவது உண்மையைத் தெரிந்து கொண்டால் என்னைப்பற்றி என்ன நினைப்பாள்? இப்படி ஏமாற்றுவதைக் கடவுள் மன்னிப்பாரா?' 'நீங்களாக முட்டாள் தனமாக அவளிடம் சொன்னால் தவிர வேறு எந்த வழியிலும் அவள் தெரிந்துகொள்ள முடியாது.

உங்கள் மனைவியின் மரணத்திற்குப் பின் நீங்கள் உண்மையைச் சொன்னாலும்கூட, அவள் உங்களை மிகவும் நேசிப்பதால், அவள்மேல் கொண்ட ஆழ்ந்த அன்பினால் அவளை மகிழ்ச்சியாக்குவதற்காகவே நீங்கள் இதைச் செய்யத் துணிந்தீர்கள் என்பதை அவள் நிச்சயம் புரிந்துகொள்வாள். கடவுள் மன்னிப்பாரா என்று கேட்டீர்களே அதற்குப் பதில் சொல்லுகிறேன் கேளுங்கள். நீங்கள் எங்கள் தத்துவத்தை கண்டனம் செய்கிறீர்கள். இருந்தும் சந்தர்ப்பத்துக்குப் பொருத்தமாக இருப்பதாலும் நல்ல கருத்து உடையதாலும் சொல்லுகிறேன் கேளுங்கள். எங்கள் முதிய கூடாரக்காரர் எழுதியது; சற்று தேவ நிந்தனையாகக்கூடத் தோன்றும்:

**'ஆண்டவா! புழுதியிலிருந்து மனிதனை உருவாக்கினாய். ஏதேனைப் படைத்த கையோடு பாம்பையும் படைத்தாய், பாவியாய்ப் போன இந்தப் பாழும் மனிதனுக்கு மன்னிப்பைக் கொடு. பின் நீயும் அதைப் பெற்றுக்கொள்!'** என்றார்.

லிட்டில்டன் பதில் ஏதும் சொல்லாமல் யோசனையுடன் மேலும் கீழும் நடந்தவண்ணம் இருந்தார். ஷெர்கான் ஹுக்காவை ரசித்து உறிஞ்சிக்கொண்டு தம் தாடியை உருவிவிட்டவண்ணம், நண்பரின் அழகிய முகபாவனையைக் கவனித்துக்கொண்டிருந்தார்.

லிட்டில்டன் இரண்டு கைகளையும் பின்புறம் கட்டிக் கொண்டு ஷெர்கான் எதிரில் வந்து, 'சரி, அப்படியே துணிந்து விடுகிறேன். வேறு வழி எதுவும் இல்லவும் இல்லை' என்றார். 'ஆம். இது அவளைக் காப்பாற்றியதாகவும் இருக்கும். அவளுடைய நிலைமையை நினைத்துப்பாருங்கள். நீங்கள் இப்பொழுது உண்மையைச் சொல்லப்போனால், நீங்கள் முன்னால் அவளைக் காப்பாற்றிய பாம்புக்கடி, நெருப்பு முதலியவற்றை விட இது கொடுமையானதாக இருக்கும். தஞ்சையில் இப்பொழுது ஒரு குருவோ, வேறு ஐரோப்பிய அதிகாரியோ இல்லாதது நல்லதாகப் போயிற்று. உங்கள் கல்யாணச் சடங்குக்குச் சாட்சியாக நான் எப்பொழுது வேண்டுமானாலும் வருகிறேன். உங்கள் வழக்கப்படி மோதிரம் மாற்றிக் கொண்டு, சடங்கு என்ற பேரில் அமைதியாக நடத்திவிடுங்கள்!'

லிட்டில்டன் சற்றுக் கோபமாகவே, 'இதைக் கோவிலில் செய்யக்கூடாது. இம்மாதிரிப் போலிச் சடங்குகளால் தேவாலயத்தைக் கறைப்படுத்தக்கூடாது' என்றார்.

ஷெர்கான் வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு, 'அது சரிதான்! உங்கள் பங்களாவிலேயே வைத்துக்கொள்ளுங்கள். உங்கள் கலியாணச் சடங்கு முறைகள்பற்றி அவளுக்கு ஒன்றும் தெரியாதுதானே?'

'தெரியாது' என்றவர் சற்று யோசித்து 'எனக்கு ஒன்று தோன்றுகிறது. அவளுக்குத் திருப்தியளிக்கும்படியாகவே இதை முடித்துவிடலாம். வல்லத்தில் அவள் பாட்டனாரை அடக்கம் செய்திருக்கும் இடத்தில் ஒரு சிறு கோவில் இருக்கிறது. புண்ணியம் வாய்ந்த இடம் என்று அவளுக்கு அந்த இடத்தில் பிரியமும் நம்பிக்கையும் உண்டு. திருமணத்தைக் கோவிலில் நடத்த இயலாமைக்கு தஞ்சையில் குரு இல்லாததையும், அவள் இன்னும் முறைப்படி ஞானஸ்நானம் பெறாததையும் சாக்காகச் சொல்லி அவள் பாட்டனாரின் கல்லறையின் முன்பு மோதிரம் மாற்றிக்கொள்ளலாம். நாம் மூவரும் ஒருநாள் வல்லத்துக்குச் சென்று முடித்துவிடலாம்' என்றார்.

ஷெர்கான் அதை ஒப்புக்கொண்டவராக 'ஆம் அதுதான் சரி, நீங்கள் விரும்பினால் நான் இப்பொழுது வேண்டுமானால் கூட வருகிறேன். ஆனால் அவள் ஒருவேளை தன் இனத்தாருக்குச் சொல்லவேண்டும் என்று நினைப்பாள் இல்லையா?'

இல்லை. அவள் இனத்தார் அவளை அடியோடு விலக்கி விட்டார்கள். இப்பொழுதுகூட நாங்கள் இருவரும் சேர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்றுதான் தஞ்சை முழுவதும் நினைத்துக்கொண்டிருக்கிறது. அவள் பணிப்பெண் சாரதா ஒருத்திக்குத்தான் விஷயம் தெரியும். எஜமானி சொல்வதும் செய்வதும்தான் அவளுக்குச் சட்டம்.'

'பின்னே என்ன, எல்லாம் இலேசாகப் போய்விட்டது. இந்தப் புத்திசாலித்தனமான முடிவுக்கு என் மனமார்ந்த. வாழ்த்துக்கள். பண்டிதராவ் உங்களைப்பற்றிச் சொன்னாராமே, நல்லோர் சேர்க்கையால் பயன்பெறுவது எப்படி என்று நீங்கள் நன்றாகத் தெரிந்துவைத்துக்கொண்டிருக்கிறீர்கள் என்று, அது சரியாகத்தான் இருக்கிறது!' என்றார்.

**தொடரும் ...**




# அருள்திரு.ஜோசப் T.நாய்ஸ்
## (Rev.Joseph T.Noyes)

Rev.G.P.ராஜா

அருள்திரு.ஜோசப் T.நாய்ஸ் அவர்கள் அமெரிக்காவில் 1819 ஆம் ஆண்டு பிறந்தவர். இவர் இரண்டு திருமணங்கள் செய்தார். முதல் மனைவியின் பெயர் திருமதி.எலிசபெத் S.நாய்ஸ். இவர்களுக்கு இரண்டு பெண் பிள்ளைகள் பிறந்தார்கள். இவர்கள் இரண்டு பெண் பிள்ளைகளும் பின்னாட்களில் மதுரை மிஷனில் கன்னியர்களாக இறைப்பணியை தன் பெற்றோர்களைப் போல் சாட்சியாக செய்து முடித்தார்கள். முதல் மனைவி திருமதி.எலிசபெத் நாய்ஸ் தன் கணவருடன் உற்சாகமாக ஊழியம் செய்தார்கள். இவருடைய உடல் நிலை குறைவினால் நோய்வாய்ப்பட்டு பழனியிலுள்ள லோன் காட்டேஜ் (Lone Cottage) என்றழைக்கப்படும் பங்களாவில் 1880 ஆம் ஆண்டு ஏப்ரல் 10ம் தேதி தன்னுடைய 58ம் வயதில் கர்த்தருக்குள் மரித்தார். 1881 ஆம் ஆண்டு மே 11 ம் தேதி இரண்டாவது திருமணமாக திருமதி.மார்த்தாது மாண்டவில்லி என்ற பெண்ணை ரோமாபுரியில் திருமணம் செய்து கொண்டார். 1882 ஆம் ஆண்டு ஜீன் 29ம் தேதி இருவரும் மதுரை மிஷன் பணியில் சேர்ந்தார்கள்.

**இந்தியா வருகை:**

அருள்திரு.ஜோசப் T.நாய்ஸ் அவர்கள் ஆரம்ப காலங்களில் யாழ்ப்பாண மிஷனரியாக பணி செய்து வந்தார். அமெரிக்க மிஷன் போர்டிங் உத்தரவுக்கிணங்க அவர் மதுரை மிஷனுக்கு 1853 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 11 ஆம் தேதி வந்து சேர்ந்தார். அவருடன் திருமதி.நாய்ஸ் அவர்களும் சேர்ந்து பெரியகுளத்தை மையமாக வைத்து ஊழியத்தை ஆரம்பித்தார்கள்.

**பெரியகுளம் ஊழியம்:**

மதுரைக்கு மேற்கு பகுதியில் இருக்கும் பெரியகுளத்தில் தங்கி ஊழியம் செய்ய அருள்திரு.செரி கேட்டுக்கொள்ளப்பட்டார். அவர் தன் ஊழியத்தை 1847ஆம் ஆண்டு ஜுலை மாதம் 7 ஆம் தேதி தொடங்கினார். அவரோடு சேர்ந்து அருள்திரு.ப்வோர்டும் (Ford) திருப்பணி செய்ய அழைக்கப்பட்டார். சில மாதங்களுக்கு பிறகு மேலூருக்கு மாற்றப்பட்டார். இந்த சில மாதங்களில் அருள்திரு.செரியும், அருள்திரு.ப்வோடும் தங்கள் குடும்பங்களோடு மண்ணினால் கட்டப்பட்ட கூரை வீடுகளில்தான் வாழ்ந்தார்கள். 1849 ஆம் ஆண்டில் இரு குடும்பத்தாரும் மலைக்காய்ச்சலால் அவதிப்பட்டார்கள். அருள்திரு வோடு மாற்றம் பெற்றுப் பிற இடங்களுக்குச் சென்றார். பெரியகுளத்தில் மிஷனரிமார் வாழப் புதிய பங்களா ஒன்று 1849 ஆம் ஆண்டு கட்டப்பட்டாலும், 1854 ஆம் ஆண்டு அருள்திரு.ஜோசப் T.நாய்ஸ் வரும் வரை முழுமையாக கட்டப்படவில்லை, ஆனால் அருள்திரு.நாய்ஸ் அவர்கள் வந்த பிறகு முழுமையாக அந்த பங்களா கட்டி முடித்தபிறகு தன் ஊழியத்தை ஆரம்பித்தார்கள். ஆரம்பம் எளிமையாயிருந்தாலும் ஊழிய வளர்ச்சி வேகமாக பரவியது. அருள்திரு.டெய்லர் மண்டப சாலையை வளர்த்துக்கொண்டிருந்தார். பெரியகுளத்தில் அருள்திரு.நாய்ஸ் அவர்கள் ஊழியத்தை வளர்த்தார்.

**ஆய்வுக்குழுவின் ஆலோசனை:**

அமெரிக்க மிஷன் போர்டு காரியதரிசி ஆண்டர்ஸனும், பரிசீலனைக் கமிட்டித் தலைவர் அறிவர்.தாம்ப்ஸனும், ஆய்வுக்குழுவாக இந்தியாவிற்கு மதுரை மிஷனைப் பார்வையிடவும், ஆலோசனைகள் கூறவும் 1855ஆம் ஆண்டில் வந்து சேர்ந்தனர். அவர்கள் மும்பை வந்து, கப்பல் பயணத்தில் கொல்லம் வந்து சேர்ந்து அங்கிருந்து இரயில் மூலம் சாத்தூர் (வட நெல்லை ஊழியம் பகுதி) வந்தடைந்து, அதன்பின்பு மண்டபசாலைக்கு சாலை மார்க்கமாக 1855 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30ம் தேதி வந்து சேர்ந்தார்கள். அங்கு அருள்திரு.டெய்லர் செய்த ஊழிய பணியை பார்வையிட்ட பின்பு அங்கிருந்து சாலை மார்க்கமாக பெரியகுளத்தில் பணி செய்யும் அருள்திரு.ஜோசப் T.நாய்ஸ் அவர்களின் பணியை பார்வையிட்டார்கள். பெரியகுளத்தை சுற்றியுள்ள தலைமையிடங்களையும், கிராமங்களின் பணித்தளத்தையும் பார்வையிட்டு நாய்ஸ் ஊழியத்தை பாராட்டினார்கள். மதுரை மிஷன் அனைத்து பணியிடங்களையும் ஒன்றிணைத்து மிகப்பெரிய மாநாடு நாடத்தினார்கள் அமெரிக்க மதுரை மிஷன் போர்டு. இந்த

மாநாட்டில் 24 தலைப்புகளின் அடிப்படையில் ஆலோசனைகள் பகிரப்பட்டது. அவற்றுள் ஒன்று கட்டிடம் கட்டுதல்.

**கட்டிட அமைப்பு:**

போர்டின் பரிசீலனைக் கமிட்டியின் ஆலோசனைக்கிணங்க, அமெரிக்க மிஷன் ஊழிய நிலையங்களில், நல்ல கட்டிடங்கள் கட்டப்பட வேண்டுமென்றும், அதற்கான ஒரு கமிட்டி செயல்பட வேண்டுமென்றும் ஆலோசனை கூறப்பட்டது. அதன்படி நாய்ஸ், திரேசி, ரெண்டால் மூவரும் கட்டிடக் கமிட்டியாக இயங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி நாய்ஸ் கட்டிடங்கள் கட்டுவதில் தீவிரமாக ஈடுபட்டார். ஏற்கனவே 1854 ஆம் ஆண்டில் பெரியகுளத்தில் முற்றுப் பெறாமலிருந்த பங்களாவை முழுமையாகக் கட்டி முடித்த அனுபவத்தை பெற்றிருந்தார். இவரும், திரேசி, ரெண்டால் மூவரும் கட்டிடக் கலையில் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். கட்டிடப்பணியில் மூவரும் கலந்து பேசி, நல்ல ஆலோசனையோடு சிறப்பான கட்டிடங்களை கட்டி முடித்தார்கள்.

**ஆலயங்கள் கட்டப்படுதல்:**

பெரியகுளம் சுற்றியுள்ள பகுதிகளில் பல கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்பட்டது. கொடைக்கானல் ஆங்கில ஆலயம் கட்டப்பட்டது. 1855 ஆம் ஆண்டு மே மாதம் மதுரை சப் ஜட்ஜ் மனைவி திருமதி.பிலிப்ஸ் அம்மையாரின் நன்கொடையால் நாய்ஸ் அவர்கள் ஆலய கட்டிடத்தை தொடங்கினார். 1866 ஆம் ஆண்டு இவ்வாலயம் நிறைவு செய்து பிரதிஷ்டை செய்யப்பட்டது. இங்கு வெளிநாட்டு மிஷனரிகளின் குடும்பங்கள் பங்குபெற்றார்கள்.

அருள்திரு.நாய்ஸ் மற்றும் அருள்திரு.டெய்லர் இணைந்து சுமார் 4 ஆண்டுகளில் 16 சபைகளை கட்டி எழுப்பினார்கள். இவர்கள் இருவரும் ஒன்றிணைந்து இப்பணிகளை செய்தார்கள். 1852 ஆம் ஆண்டில் 1000 திருச்சபைகள் இருந்தது. 1871 ஆம் ஆண்டில் வளர்ச்சி பெற்று பெற்று 6865 திருச்சபைகள் வளர்ச்சி பெற்றது என்று நாய்ஸ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கொடைக்கானலில் தமிழ் திருச்சபையை கட்ட நாய்ஸ் எடுத்த முயற்சிகள்.**

மதுரை மிஷன் பதிவேட்டுப்படி 1888 ஆம் ஆண்டு மே மாதத்தில் தமிழ் மக்களுக்காக ஆலயம் கட்ட நாய்ஸ் கட்டிட கமிட்டியிடம் அனுமதி பெற்றார். இதற்காக 2,220 ரூபாய் வசூல் செய்தார். இந்த நேரத்தில் நாய்ஸ் அவர்களுக்கு நோய் தாக்கியதினால் சிகிச்சைக்காக சென்னை சென்றார். இவ்வாலயத்தின் கட்டுமான பணியை அருள்திரு.எட்வர்ட் திரேசி மிஷனரிடம் ஒப்படைத்தார். இவரும் கடின முயற்சியுடனும், நாய்ஸ் அவர்களின் விருப்பப்படியும் 1895 ஆம் ஆண்டு கட்டி முடித்தார். நாய்ஸ் அவர்களின் குடும்பத்தின் சார்பாக இவ்வாலயத்திற்கு அவர்களுடைய இரண்டு பிள்ளைகள் ஒரு மணி நன்கொடையாக கொடுத்தார்கள்.

**நாய்ஸ் அவர்கள் அனுபவித்த இன்னல்கள்:**

வளர்ந்து வரும் திருச்சபைகள் பல நெருக்கடிகளை சந்தித்தது. 1857 ஆம் ஆண்டு சாதி வெறியர்களின் இடையூறால் சில திருச்சபைகள் துன்பத்தை சந்தித்தது. திருச்சபை கூட்டங்களில் சாதி வெறியர்கள் சபையாரை அடித்து துன்பப்படுத்தினார்கள். அநேக திருச்சபைகளுடைய வீடுகளை சூறையாடினார்கள். இந்த சம்பவத்தில் ஒருவர் கொலை செய்யப்பட்டார். கொலையாளிக்கு சிறை தண்டனை கிடைத்தது. தேவாரம் ஜமீன்தாரால் நாய்ஸின் இரு திருச்சபைகள் துன்பப்படுத்தப்பட்டது. பாம்பனில் இரு உபதேசிமார்கள் சிறையில் வைக்கப்பட்டார்கள். இவர்களை விடுவிக்க தேவையான செலவுகளை மிஷன் ஏற்றுக்கொண்டது. ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் மூலமாகவும் துன்பங்கள் ஏற்பட்டது. திருச்சபை மக்களுக்கு தொல்லைக்கொடுத்தது. அடிக்கடி வியாதிகளும், பஞ்சங்களும் வந்து திருச்சபை மக்களை எல்லா நிலைமையிலும் அருள்திரு.ஜோசப் S .நாய்ஸ் அவர்கள் பொறுமையுடனும், தளராமல் அனைவரையும் ஒன்றிணைத்து ஊழியத்தை சிறப்பாக செய்தார்.

**உள்நாட்டு சுவிசேஷ இயக்கங்களில் நாயஸின் ஆர்வம்:**

1851 ஆம் ஆண்டு மதுரை, பசுமலையில் ஒரு சுவிஷேச இயக்கம் தோன்றியது. இந்த இயக்கம் ஆல்பர்ட் பார்னஸ் என்ற பசுமலை குருவானவர்தான் இந்த இயக்கத்தை தோற்றிவித்தார். சுவிசேஷம் அறிவிப்பதில் நாளுக்கு நாள் பெருகிற்று. இந்த இயக்கத்திற்கு கணிக்கைகள் அதிகமாக பெருகியது. குறிப்பாக 1860 ஆம் ஆண்டு கம்பம், பெரியகுளம் பகுதிகளில் நான்கு மடங்கு காணிக்கைகளை இந்த சுவிஷேச இயக்கத்திற்கு கொடுத்து உதவினார்கள்.

**நாய்ஸ் அவர்களின் பெயரில் நன்கொடைகள்:**

அருள்திரு.ஜோசப் T.நாய்ஸ் அவர்களுடைய மகன் J.C.நாய்ஸ் பெயரில் பசுமலை அறக்கட்டளை நிதியாக 300 டாலர் அமெரிக்காவிற்கு விடுமுறைக்கு சென்ற காலங்களில் நிதியை அனுப்பி வைத்தார். நாய்ஸ் அவர்களின் முதல் மனைவி திருமதி.எலிசபெத் அவர்கள் பெயரில் ஏழை, எளிய மாணாக்கர்களுக்கு உதவித்தொகை பெரியகுளம் பகுதி பிள்ளைகளுக்கு கொடுக்கப்பட்டது. பின்னாட்களில் இந்த உதவித்தொகை நாய்ஸ் உதவி தொகை என்று (Noyes Scholarship) வழங்கப்பட்டது. 1909 ஆம் ஆண்டு வரை கொடுக்கப்பட்டது.

1892 ஆம் ஆண்டு முதல் 1895 ஆம் ஆண்டு வரை பசுமலை இறையியல் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இப்பரிசுகள் நாய்ஸ், பர்னல், ஸ்கடர், கேப்ரன் ஆகியோரின் பெயரில் கொடுக்கப்பட்டது.

**நாய்ஸ் அவர்களுடன் இணைந்து பணியாற்றியவர்கள்:**

அருள்திரு.ஜோசப் T.நாய்ஸ் அவர்களுடன் இணைந்து பணிபுரிந்த அருட்பணியாளர்கள் செரி, முசி, டுவைட், வார்ட், டெய்லர், ஹெர்ரிக், வெப், ரெண்டால், சாண்டலர், ப்வோர்ட், நாய்ஸ், பெர்னல், ஒய்ட், கேப்ரன், செஸ்டர், வாஷ்பர்ன், ஸ்கடர், பென்ஃபீல்டு, ஹாசன், பால்மர் ஆகியோர் ஆவார்.

**நாய்ஸின் மரணம்:**

1853 ஆம் ஆண்டு ஜீன் 11 ஆம் தேதி மதுரை மிஷனுக்கு வந்த நாய்ஸ் அவர்கள் 1892ஆம் ஆண்டு ஆகஸ்டு 9 ஆம் தேதி தன்னுடைய 73 வது வயதில் சென்னையில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இவருடைய சிறப்பான பணியை அவருடைய இரண்டு குமாரத்திகள் மதுரை மிஷனுக்கு 'கன்னியராகயிருந்து உழைத்தார்கள்' என்று சொன்னால் மிகையாகது. இவருடைய பணி இன்றும் பேசிக்கொண்டு இருக்கின்றது.

# 150 வது ஆண்டை கண்டு மகிழும் மதுரை மாநகரின் ஒப்பற்ற தேவாலயம்!

**Dr.சாமுவேல் தங்கபாண்டியன்**
**மதுரை**

அமெரிக்க மிஷன் விரிவாக்கப் பணிக்கு என்று 1833-ல் லேவி ஸ்பால்டிங் என்பவர் இந்தியாவில் தகுதியான இடம் கண்டுவர அனுப்பப்பட்டார். அவர் 1834 சனவரி 10-ம் நாள் இராமநாதபுரம் அருகிலுள்ள தேவி பட்டிணம் என்ற இடத்தை அடைந்தார். மேலும் இவர் 1834 பிப்ரவரி 8-ம் நாள் மதுரை நகர் வந்து ஒரு சிறிய ஆலயத்தில் பிரசங்கம் செய்தபோது ஏற்கனவே இங்கே கிறிஸ்தவ மதம் வியாபித்திருந்ததைக் கண்டு வியந்தார்.

அன்றைய காலகட்டத்தில் மதுரை நகரில் தமிழ் மன்னர்கள் ஆட்சியும், பிராமணர்களின் செல்வாக்கும், கத்தோலிக்க திருச்சபை மக்களும், வேறு சில சபை மக்களும் இருந்தனர்.

1801-ல் ஆங்கில ஆதிக்கத்திலிருந்த மதுரையின் மக்கள் தொகை 13 லட்சம். இதில் ரோமன் கத்தோலிக்க இனத்தவர்கள் சுமார் 18000 பேர் ஆவர். அந்த சமயம் இந்திய கவர்னர் ஜெனரலாக வில்லியம் பென்டிங் பிரபுவும் சென்னை கவர்னராக பிரடெரிக் ஆடமும் இருந்தனர்.

மதுரை நகர் அமெரிக்கன் மிஷன் அமைக்க தகுதியான இடம் என லேவி ஸ்பால்டிங் தெரிவு செய்து பின்னர் இலங்கை சென்றார்.

**'அமெரிக்க மதுரை மிஷனை'** அமைக்க மதுரை மாநகர் தகுதியான இடம் என்று கருதிய அருட்திரு. வுட்வார்ட், கவர்னர் ஜெனரல் வில்லியம் பென்டிங் பிரபுவிடம் அனுமதி பெற்று திரும்பும் வழியில் கேரளாவில் திடீரென்று மரித்து போனார்.

1834-ல் ஜூலை 30-ம் நாள் அருட்திரு. ஸ்பால்டிங் வழியாக மதுரையில் மதுரை மிஷன் வேரூன்றியது.

1842-ல் அருட்திரு. அறிவர் வில்லியம் டிரேயி அவர்களால் வேதாகமப் பள்ளி திருமங்கலத்தில் ஏற்படுத்தப்பட்டு பின்பு அது பசுமலைக்கு, பசுமலை இறையியல் கலாசாலை என்ற பெயரில் மாற்றப்பட்டது.

மதுரை மிஷனுக்கென்று 44 ஏக்கர் நிலம் 1845-ல் பசுமலையில் இருந்தது. அங்கு வில்லியம் டிரேலி, அவரது நண்பர் அருட்திரு. செரி அவர்களால் **'புதிய இங்கிலாந்து தேவாலயம்'** கட்டப்பட்டது. இது இன்றும் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் பின்புறம் கம்பிரமாக காணப்படுகிறது. பல பிரிவுகளை சார்ந்த 100 நபர்கள் தெரிவு செய்யப்பட்டு மதுரை மிஷன் ஊழியத்திற்கென்று அவர்களை உபதேசியார்களாகவும், பிரசங்கிமார்களாகவும் பழக்கி பயிற்சி கொடுக்கப்பட்டது.

இந்த 100 நபர்களில் நன்கு அனுபவம் பெற்றவர்களை தெரிந்து கொண்டு போதகர் பயிற்சி கொடுத்து அவர்களுக்கு குருபட்டம் அளித்து குருமார்களாக்கினார்கள், மிஷனெரிகள். 1842-1867 பயிற்சி பெற்றவர்களில் முக்கியமானவர்கள் S. இராயப்பன் வின்பிரட், பரமானந்தம் ஏசுவடியான், சின்னத்தம்பி ஆல்பர்ட் ஜார்ஜ் ரோலண்ட், கோல்டன், சூசை ஆல்பர்ட், பார்ன்ஸ் பவுல், யோசுவா, ஆகியோர். இதில் A.G. ரோலண்ட் என்பவர் தூய இம்மானுவேல் ஆலயம், மேலவாசல் திருச்சபையில் 1863-ல் குருவானவராக நியமிக்கப்பட்டு 1883 வரை பணியாற்றினார்.

**மேலவாசல் ஆலய உதயம்**

பசுமலை இறையியல் கலாசாலையில் 20 ஆண்டுகளாக ஆசிரியராக பணியாற்றிய அருள்திரு. சின்னதம்பி A.G. ரோலண்ட் மேலவாசல் திருச்சபைக்கு முதல் இந்திய குருவானவராக நியமிக்கப்பட்டார். மேலவாசல் திருச்சபை மக்களின் வழிபாட்டிற்காக ஒரு இடத்தை தெரிவு செய்தார். மதுரையில் நான்கு வெளிவீதிகளின் மதில்களும் பழுதடைந்திருந்ததால் இடிக்கப்பட்டு நான்கு வீதிகளிலும் ஆலயங்கள் கட்ட தீர்மானிக்கப்பட்டது. அப்படி கட்டப்பட்டவையே கீழவாசல், மேலவாசல், தெற்குவாசல், வடக்குவாசல் ஆலயங்கள்.

அருட்திரு. A.G. ரோலண்ட் 1869-ல் சபை மக்கள் வழியாக ரூ. 110-ம் இந்திய நண்பர்கள் வழியாக ரூ.383-ம் வெளிநாட்டு நண்பர்கள் வழியாக ரூ. 2228-ம் அமெரிக்க மிஷன் ஸ்தாபனம் வழியாக ரூ. 2310-ம் அயல்நாட்டு மிஷன் வழியாக ரூ. 457 ஆக மொத்தம் ரூ. 5488 நன்கொடையாக சேகரிக்கப்பட்டது.

1871-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3-ம் தேதி மேலவாசல் ஆலயம் கட்டுவதற்கான இடத்தில் அடிக்கல் நாட்டப்பட்டது. அந்த வேளையில் சபையாரின் எண்ணிக்கை 148 ஆக இருந்தது. ஆலயம் 1873-ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. கடவுளின் நாம மகிமைக்கென்று 1873-ம் ஆண்டு ஆகஸ்டு 6-ம் நாள் மங்கலப் படைப்பு செய்யப்பட்டது. அந்த பிரதிஷ்டை ஆராதனையில் 400 பேர் பங்கு பெற்றனர்.

அறிவர் வில்லியம் டிரேஸி, அருட்திரு. சாண்ட்லர், அருட்திரு. பார்ன்ஸ், அருட்திரு. A.G. ரோலண்ட் ஆகியோர் பங்கு பெற்றனர். வடக்கே கேப்ரன் ஹால் பள்ளி, மேலவாசல் பள்ளியிலுள்ள மேலை நாட்டு ஆசிரியைகள், குருமார்கள் மாட்டு வண்டியில் பயணித்து ஆலய ஆராதனைக்கு வருவார்கள். அன்று குருமார்களும், ஆசிரியைகளும் கடவுளுக்கு அடுத்தபடியாக மதிக்கப்பட்டனர்.

மேலவாசல் ஆலயத்தில் தினமும் காலை 6 மணிக்கு சபையார் கூடி வேதம் வாசித்து, ஜெபத்தோடு கூட்டம் நடத்தப்பட்டது. ஞாயிறு ஆராதனைகள் காலையிலும், மாலையிலும், நடத்தப்பட்டது. ஞாயிறு ஓய்வு நாள் பள்ளி மாலை நடத்தப்பட்டது. இந்த ஆலயம், ஆங்கில ஆராதனை நடைபெற்ற முதல் அமெரிக்க மதுரை மிஷன் ஆலயமாகும். அப்போது கேப்ரன் ஹால் பள்ளி வளாக மிஷனெரிகள், ரயில்வேயில் பணியாற்றிய ஆங்கிலோ இந்தியர்கள் பங்கு பெற்று ஆராதனையை சிறப்பித்தனர்.

அருட்திரு. சாண்ட்லர் ஐயர் நினைவாக மேலவாசல் ஆலய பீடத்தின் பின் அழகிய வேலைப்பாட்டுடன் கூடிய கலர் சித்திர கண்ணாடி பதித்த நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டது. தேவாலயம் கட்டப்பட கடுமையாக உழைத்த A.G. ரோலண்ட் ஐயர் நினைவாக ஒரு பளிங்கு கல்வெட்டு ஆலய முகப்பில் வைக்கப்பட்டது.

1878-ம் ஆண்டு மதுரையின் அருகிலுள்ள கீழமாத்தூர் கிராமத்தில் ஒரு ஆலயம் அருட்திரு. A.G. ரோலண்ட் காலத்தில் அமைக்கப்பட்டது. மதுரை அமெரிக்க மிஷனின் Golden Jubilee 1884-ல் தூய இம்மானுவேல் ஆலயம், மேலவாசலில் பிப்ரவரி 26-ம் தேதி முதல் 28-ம் தேதி வரை நடத்தப்பட்டது. திருச்சபையார், கிராமசபையார் என சுமார் 2000 பேர் வந்து பொன்விழாவை கொண்டாடினார்கள்.

பொன்விழா நாளான 26-2-1884-ல் காலை 7 மணிக்கு மேலவாசல் ஆலயத்திலும், பசுமலை புதிய இங்கிலாந்து ஆலயத்திலும், கீழவாசல் தேவாலயத்திலும் ஒரே நேரத்தில் ஆலயங்களின் மணி அடிக்கப்பட்டு விழா ஆரம்பிக்கப்பட்டது வியப்பிற்குரிய காரியமாக அமைந்தது. அருட்திரு. சாண்ட்லர் தலைமையில் அருட்திரு. பார்னஸ் இறைச்செய்தி வழங்கினார்.

மேலவாசல் திருச்சபையார் பூத்தூவி, பன்னீர் தெளித்து, அனைவரையும் வரவேற்றனர். மாலை 4 மணி அளவில் பெரிய ஒரு ஊர்வலம் மேலவாசல் ஆலயத்திலிருந்து புறப்பட்டு இந்துக்கள் வாழும் பகுதிகள் வழியாக சுற்றி வந்தனர். ஊர்வலத்தில், திண்டுக்கல் வாத்திய குழுவினர்களுடன், திருமங்கலம், திருப்புவனம், மண்டபசாலை அவைகளிலிருந்து Drum Set களும், பழனி, மானாமதுரை, வத்தலகுண்டு சபைகளிலிருந்து 11 Banner களும், பிடித்து வந்து ஊர்வலத்தை சிறப்பித்தனர். மராத்திய மிஷன் மிஷனெரிகள் மராத்திய மொழியில், இரவு கூட்டத்திலே பாடல்களைப் பாடி தேவனை மகிமைப்படுத்தினார்கள். மிஷனெரிகளால், ஆலயத்திற்கு ஒரு ஆர்கன் நன்கொடையாக வழங்கப்பட்டது.

இரண்டாம் நாள் ஒடுக்கக் கூட்டம் Father Noyes தலைமையில் நடைபெற்றது. பல்வேறு பொருட்கள் நன்கொடையாக கொடுக்கப்பட்டது. மேலும் அன்று திருச்சபையாரால் ரூ.5000/- ஈட்டப்பட்டது. கடைசி மூன்றாம் நாள் கூட்டத்திற்கு திரு.செஸ்டர் தலைமை தாங்கினார். இந்த பொன்விழா வழியாக திருச்சபை வளர்ச்சிக்கென்று

ரூ.75000/- திரட்டினார்கள். இதனைக்கொண்டு கிராமங்களில் 18 ஆலயங்கள் எழுப்பப்பட்டன.

இவ்வாறாக 1873-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மேலவாசல் தூய இம்மானுவேல் தேவாலயம் சிறிது சிறிதாக வளர்நிலை அடைந்து, படிப்படியான வளர்ச்சி பெற்று தனது 150 வருடமாகிய 2023-ல் வெற்றி பெருமிதத்துடன் மதுரை மாநகரின் மேல் திசையில் கெம்பீரமாக நின்று இயேசு கிறிஸ்துவின் மகிமையை வெளிப்படுத்திக் கொண்டிருப்பது கிறிஸ்தவ மார்க்கத்திற்கு ஒரு சாட்சியாக இருப்பது பெருமையல்லவா.

ஆலய வளர்ச்சியில் பங்குகொண்ட சபை ஆயர்கள் மற்றும் சபை மக்களின் அயராத பணிக்கு மேலவாசல் ஆலயம் ஒரு எடுத்துக்காட்டு.

அருட்திரு. A.G.ரோலண்ட் ஐயருக்கு பின்னர் அவரது மகன் அருட்திரு. J. ரோலண்ட் அவர்கள் 1890-1924 வரை மேலவாசல் ஆயராக பணி புரிந்தார்கள். இவர்கள் காலத்தில் ஆலயத்தின் சுற்றுப்புறச் சுவர்களும், பக்கவாட்டுச் சுவர்களும் எழுப்பப்பட்டது.

அருட்திரு. J. ரோலண்ட் அவர்களுக்கு முன் அருட்திரு. ஆரப்பன் மதுரநாயகம் 1884-1889 வரை மேலவாசல் ஆலயத்தில் பணியாற்றினார்கள் என்பது வரலாறு.

இந்நாட்களில் சபை வளர்ச்சியில் ஈடுபட்ட குடும்பங்களில் முக்கியமானவர்கள், திரு. பீட்டர் ஐசக், திருமதி நட்சத்திரம், தர்மக்கண், சாமுவேல், காபிரியேல், நத்தானியேல், டேனியல், வேதமாணிக்கம், A. ரத்தினம், ஜெர்மனி, செல்லையா, மகாராஜா, முத்துசாமி, Dr. பாண்டித்துரை, Dr. செலின் பாண்டித்துரை, Dr. கிரேஸ் கென்னட், நல்லப்பா, சாந்தப்பன், Dr. ராயப்பா, பொன்னுசாமி, G.T. ஸ்கடர், ஐசக், லாசரஸ், அசரியா, ராஜம்மா, ராஜையா ஆகியோராவர்.

அடுத்ததாக 1924-25, 1927-1940 ஆகிய ஆண்டுகளில் அருட்திரு. தங்கம் கேபிரியேல் ஐயர் மேலவாசல் ஆலயத்தில் பணிபுரிந்தார். இவர் சபையின் நல்ல மேய்ப்பன் என்றும், சங்கை பொருந்திய போதகப் பிதா என்றும் போற்றப்பெற்றவர். இவருடைய காலத்தில், வீடு சந்திப்பு, ஜெபக் கூட்டங்கள் சிறப்பாக நடைபெற்றது. திருவிருந்தில் பங்குபெற சபையாரை ஊக்கப்படுத்தினார். ஆலயத்தின் மேற்கூரை ஓடுகள் அமைப்பு, ஆலய உட்புற சிமெண்ட் தரை அமைத்தல் ஆகியவை சபையாரின் பொருளுதவி கொண்டு சீர் செய்யப்பட்டது.

திரு. ஜேம்ஸ் என்பவரால், பரிசுத்த பிரகாரத்தின் பீட மேஜை கொடுக்கப்பட்டது. திருமறை வாசிக்க வாசக பீடம், திருமுழுக்கு கொடுக்க ஞானஸ்நானத் தொட்டி அமைக்கப்பட்டது. திரு. ஜார்ஜ் ஆசிரியர் மேற்பார்வையில், S. ஆர்தர், C. சார்லஸ் சுந்தரம், செல்வராஜ் பீட்டர், G.T. ஸ்கடர், I. ஜான், ஸ்டான்லி, மணி மனுவேல், ஆசீர்வாதம் ஆகிய வாலிபர்கள் கொண்ட குழு, மதுரை கல்லூரி மேல்நிலைப்பள்ளி வளாக மேடையில் சவுல் நாடகம் நடத்தினர். வசூல் செய்த ரூ.1000/- கொண்டு ஆலய பிரகார மரவேலைப்பாடுள்ள கிராதி Alter சுற்றி அமைக்கப்பட்டது. மேலும்

ஆலய தென்புறத்தில் ஒரு கூரைக் கூடமும் அமைக்கப்பட்டது.

1940-1948 வரையில் அருட்திரு. V.J. செல்லையா பொறுப்பேற்றார்கள். இவரை மக்கள் அனைத்துத் துறைகளின் பிரதான இயக்குனர் என்று அழைப்பார்கள். இவரது காலத்தில் ஆலய bell tower புதுப்பிக்கப்பட்டது. ஆலயமணி அமெரிக்க மிஷனெரிகளால் இங்கிலாந்திலிருந்து கொண்டுவரப்பட்டு ஆலயத்தில் பொறுத்தப்பட்டது.

1925-26, 1948-1954 ஆகிய ஆண்டுகளில் அருட்திரு. I.D. பர்னபாஸ் ஐயர் அவர்கள் பணியாற்றினார்கள். தென்னிந்திய திருச்சபை உருவான பின்பு மேலவாசல் ஆலயத்திற்கு நியமிக்கப்பட்ட முதல் குருவானவர் ஆவர். மேலும் திருமண்டலத்திலிருந்து முதல் மாத சம்பளம் பெற்றவர் இவர் ஆவர்.

அடுத்த 1954-1959 ஆண்டுகளில் அருட்திரு. J. ஜீவமணி ஐயர் அவர்கள் பொறுப்பேற்றார்கள். இவர் காலத்தில் புதிய குருமனை கட்டிட நிதி ரூ. 9000/- திரட்டப்பட்டது. நிதி திரட்டிட N. சவுந்திரராஜ் பீட்டர், ஜானி பீட்டர், G.D. துரைராஜ், வேதராஜ், ஜார்ஜ், G.T. ஸ்கடர், A. ரத்தினம், J. எடி, T. ராஜா, எபினேசர், திருமதி எலிசபெத் ஆகியோர் உதவினார்கள். அருட்திரு. S.M. பரஞ்ஜோதி ஐயர் அவர்கள் ஆலய ஊழியத்தில் பங்குபெற்று மாலை ஆராதனைகள் நடத்தினர். அருட்திரு. J. ஜீவமணி காலத்தில் ஆறு பேர் கொண்ட பாஸ்ட்ரேட் கமிட்டி மேலவாசல் ஆலயத்தில் ஏற்படுத்தப்பட்டது. குருமனை 1959-ல் கட்டி முடிக்கப்பட்டு, மதுரை முகவை முதல் பேராயரான அருட்பெருந்திரு. லெஸ்லி நியூபிகின் (1947-1957) அவர்கள் காலத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

புதியதொரு எழுச்சியோடு 1959-1964 வரை அருட்திரு. D.A. கிரிகரி ஐயர் அவர்கள் புதிய குருமனையின் முதல் போதகராக குடியேறி தன் பணி சிறப்புடன் செய்தார். ஓய்வு நாள் பாடசாலை, வாலிபர் சங்கம் சிறப்புடன் நடைபெற திரு. ஜார்ஜ். வேதராஜ், N. ஜான்சன் ஆகியோர் உதவினார்கள். மேலக்கால், கீழமாத்தூர், செக்கானூரணி போன்ற இடங்களில் நற்செய்திப்பணி நன்கு நடைபெற்றது. இவரது காலத்தில் திருமண்டலத்தின் இரண்டாவது பேராயராக அருட்பெருந்திரு. ஜார்ஜ் தேவதாஸ் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். பாஸ்ட்ரேட் கமிட்டி பெண் உறுப்பினர் வேண்டுமென கூறப்பட்டபடியால் திருமதி எலிசபெத் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஆலயத்தின் வெளிப்புற கிரில்கேட் மற்றும் ஆல்டர் சிலுவை, மெழுகுவர்த்தி ஸ்டான்ட் ஆகியவை இவர் காலத்தில் திரு. V. மாணிக்கம் அவர்களால் நன்கொடையாக வழங்கப்பட்டது. ஜார்ஜ் பாடகர் குழு தலைவராகவும், எபினேசர் விசுவாசம் ஆர்கனிஸ்டாகவும் இருந்தார்கள்.

1964-ல் மூன்று மாதங்கள் மட்டும் அருட்திரு. ஜெயசீலன் தங்கம் அவர்கள் ஆயராக பணிபுரிந்தார்கள். ஆலய உட்பிரகார முகட்டில் ஆலயத்தின் திருநாமமும் அதன் பொருளுமான EMMANUEL GOD WITH US என்ற வாசகத்தை ரோம எழுத்திலிருந்து ஆங்கில எழுத்து வடிவில் மாற்றி எழுதிய பெருமை இவரைச் சார்ந்ததாகும்.

1964-1974 அருட்திரு. S.K. ஸ்டீபன்சன், மேலக் கீரனூரைச் சேர்ந்தவர் ஆயராக பணி புரிந்தார். பொறுமை குணம் கொண்ட இவர் பிஷப் கமிசரியாகவும் பொறுப்பிலிருந்தார். இவரது காலம்வரை திருவிருந்தில் திராட்சை ரசம் Individual cup-ல் கொடுக்கப்பட்டது. வெள்ளி தட்டும், கிண்ணங்களும் Dr. கிரேஸ் கென்னட் அன்பளிப்பாக கொடுத்தார்கள்.

அருட்திரு. D. ஜேசுதாஸ் 1976-1982 வரை குருவானவராக பொறுப்பேற்றார்கள். திருமண்டலத்தில் துணைத் தலைவராகவும் இருந்தார். இவரது காலத்தில் ஆலயத்தின் மேற்கூரை ஓடுகள் மாற்றப்பட்டு சிமெண்ட் கான்கிரிட் போடப்பட்டது. ஆல்டர் சுவர், தரை மொசைக், ஜார்ஜ் ஆசிரியர் நினைவாக போடப்பட்டது. ஆலய புதுப்பித்தல் கமிட்டியில் மோசஸ் ஸ்டான்லி, N. ஜான்சன், ஜான் சுந்தரராஜ், ஆன்சலம், ராஜம்மா கென்னட் ஆகியோர் பங்கு பெற்றார்கள். பேராயர் அறிவர். D. டேவிட் ஞானையா போத்தி ராஜீலு (1978-1986) அவர்களால் மறுமங்கலப் படைப்பு செய்யப்பட்டது. அன்னபூரணா J. எடி திருமண்டல செயலராகவும், ரூஸ்வெல்ட் மத்திய வட்டாரமன்ற செயலராகவும் பணியாற்றி, மேலவாசல் ஆலயத்திற்கு சிறப்பு செய்து உதவினார்கள்.

1976-1982 எழுப்புதல் பிரசங்கி எனப்படும் அருட்திரு. ஜான் நவரத்தினம் அவர்கள் ஜேசுதாஸ் ஆயரோடு உதவியாளராக இருந்தவர். இணை குருவானவராக அவரோடு பணியாற்றினார். மாதத்தின் முதல் நாள் திருவிருந்து இவரால் ஆரம்பிக்கப்பட்டது. அருட்திரு. M. வரதராஜன் உதவி குருவாக 1983-84-ல் பணியாற்றினார்.


அருட்திரு. D. தேவ இரக்கம் 1987-1995 வரை ஆலய குருவானவராக பணியாற்றினார். இவரது காலத்தில் ஆலய வெஸ்ட்ரி மற்றும் பாடகர் குழு உடைகள் ஆலய பணி மூட்டுகள் பாதுகாப்பாக வைக்க அறை கட்டப்பட்டது. முதலாவது குடும்பக் கூடுகை என ஒருநாள் ஒடுக்கக் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆலய விஸ்தரிப்புக் கென்று 12-12- 1993 காலை ஞாயிறு ஆராதனைக்குபின் சபை மூப்பர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. Dr. ஹென்றி ஜோசப் கௌரவ பணியாளராக பணியாற்றினார். இலவச மருத்துவ முகாம் Dr. S.V. சஞ்சிவி ராஜா அவர்களால் மேலக்கால் கிராமத்தில் மாதம் ஒருமுறை நடத்தப்பட்டது. ஆலய உபயோகத்திற்கென பல்வேறு பொருட்கள் சபையாரால் கொடுக்கப்பட்டது.

அருட்திரு.J. தாமஸ் விக்டர் 1995-2000 தலைமை குருவானவராகவும் அருட்திரு. எட்வின் இயேசுராஜ் உதவி குருவானவராகவும் பணியாற்றினார்கள். சபை மக்களின் குடும்பங்கள் 480 ஆக உயர்ந்தது.

Thanks giving prayer மற்றும் பிறந்தநாள், திருமண நாள் ஜெபமும் அறிமுகப்படுத்தப்பட்டது. 2-2-1997 அன்று ஆலய விஸ்தரிப்பு கூடம் C.S.I. பிரதம பேராயர் அறிவர். வசந்த் P. டன்டின் அவர்களால் மங்கல படைப்பு செய்யப்பட்டு மதுரை முகவை பேராயர் அருட்பெருந்திரு. D. தவராஜ் டேவிட் ஏம்ஸ் அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. ஆலய விஸ்தரிப்பு நிதி திரட்டுவதற்கு பங்கு பெற்றவர்கள் திரு. டானியேல் மனோகரன், திரு. W. செல்வம், திரு. ராஜேந்திரன், எடி தர்மராஜ், சார்லஸ், ஆன்செலம், Er. வாசுதேவன், Dr. காபிரியேல், சாமுவேல் தங்கபாண்டியன், மனோகரன், மோசஸ் ஸ்டான்லி மற்றும் பலராவர்.

அருட்திரு. பால் ரெஜினால்ட் ஆயர் அவர்கள் 2000-2005 வரை மேலவாசலில் பணியாற்றினார்கள். அவர் காலத்தில் ஆலயத்திலிருந்த வயர் பின்னப்பட்ட நாற்காலிகள் அகற்றப்பட்டு மர பெஞ்சுகள் அமைக்கப்பட்டது. பேராயர் அமர்வதற்குரிய அலங்கார மர வேலைப்பாடு செய்யப்பட்ட நாற்காலி ஆல்டரில் மாற்றப்பட்டது.

பின்பு 2005-2013 அருட்திரு. A. யாக்கோபு ஆயராக பணியாற்றினார். இவர் காலத்தில் 127 கிறிஸ்மஸ் தாத்தாக்கள் கொண்ட ஊர்வலம் நகரின் முக்கிய தெருக்கள் வழியாக நடத்தப்பட்டது. அருட்பெருந்திரு. கிறிஸ்டோபர் ஆசீர் அன்றைய பேராயர் தலைமையேற்று நடத்தினார்.





அருட்திரு. சாமுவேல் சவுந்திர பாண்டியன் 2013-2019 வரையில் பணியாற்றினார். இவர் காலத்தில் வரலாற்று சிறப்புமிக்க மேலவாசல் தேவாலயம் முற்றிலும் இடிக்கப்பட்டு, புதியதொரு ஆலயம் அவசர அவசரமாக கட்டி முடிக்கப்பட்டது. மேலவாசலில் மகிமை பொருந்திய வரலாற்று சிறப்புமிக்க ஆலய ஆல்டர் இடிக்கப்பட்டது மிகவும் வருந்தக்கூடியது.

அருட்திரு. அருள் விஜயக்குமார் அவர்கள் 2019-ல் சில மாதங்களே மேலவாசல் ஆயராக பணிபுரிந்தார்கள். அடுத்ததாக 2019-2021 வரை அருட்திரு ஜான்சன் அவர்கள் ஆயராக பணிபுரிந்தார்கள். அடுத்ததாக அருட்திரு. ஜெஸ்லர் ராய் அவர்கள் 2021 லிருந்து இன்றுவரை மேலவாசல் குருவானவராக பணிபுரிகிறார்கள். ஆலயத்தில் பெண்கள் கூடி ஒவ்வொரு செவ்வாய் கிழமையும் ஜெபிக்கிறார்கள். ஆண்கள் ஐக்கிய சங்கம், வாலிபர் ஐக்கிய சங்கம் தொடங்கப்பட்டு முறையாக நடைபெறுகிறது.

இப்படியாக 1873-ல் தொடங்கப்பட்ட தூய இம்மானுவேல் ஆலயம், மேலவாசல் பிரசித்தி பெற்ற மதுரை மாநகரின் மத்தியில் அமைந்துள்ளது. திருமண்டலத்திற்கு பெருமை. 150 ஆண்டுகளாக பல்வேறு வளர்ச்சி நிலைகளையும், பல்வேறு ஆயர்களையும் தன்னகத்தே கொண்ட மேலவாசல் ஆலயம், மதுரை முகவை திருமண்டலத்தின் பழமையான அதுவும் நகரின் மத்தியில் அமைந்து உள்ள வரலாற்று சிறப்புமிக்க ஆலயமாகும்.

இந்த மேலவாசல் ஆலயத்தின் கீழ் கிளை சபைகளாக மேலக்கால், கீழமாத்தூர் ஆகிய கிராமங்களில் ஆலயங்கள் இருந்தன. காலப்போக்கில் கீழமாத்தூரில் அமைந்திருந்த ஆலயம் வளர்ச்சி இல்லாமல் போயிற்று. ஆனாலும் மேலக்காலில் உள்ள ஆலயம் சோழவந்தான் குருசேகரத்துடன் இணைக்கப்பட்டுவிட்டது. கீழமாத்தூரில் இருந்த ஆலயம் மீண்டும் செயல்பட தாய் சபையாகிய மேலவாசல் முயற்சி மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது.

எனவே நிறைவாக, 150-வது ஆண்டை கண்டு மகிழும் கிறிஸ்தவ மக்களாகிய நாம் இந்த கோவில்கள் நிறைந்த மதுரை மாநகரின் மத்தியில் அமைந்துள்ள இந்த தேவாலய மகிமை இன்னும் வளர்ச்சி பெற்று கிறிஸ்தவ மார்க்கம் உன்னத நிலையடைய முயற்சிகளை எடுப்போம்.



## சேலத்தின் முதல் கிறிஸ்தவ குடியிருப்பு

# கிறிஸ்டியன்பேட்டை 2

ஜே.பர்னபாஸ்,
சேலம் வரலாற்றுச் சங்கம்

**சேலம் மாவட்டத்தின் முதல் கிறிஸ்தவ குடியிருப்பு இன்றுமுள்ள சேலம் கோட்டை கிறிஸ்டியன்பேட்டை (Salem Fort Christianpet) ஆகும். இந்த சேலம் கிறிஸ்தவ குடியிருப்பின் வரலாற்றை இரண்டு பகுதிகளாக பிரிக்கலாம்.**

முதல் பகுதி 1834 முதல் 1863 வரையிலான ஆரம்ப காலம். அது அப்பொழுது இந்த சேலம் கிறிஸ்தவ குடியிருப்பு சேலம் கோட்டைக்கும், சேலம் செவ்வாய்ப் பேட்டைக்கும் இடைப்பட்ட பகுதியான 30 ஏக்கர் சேலம் மிஷன் வளாகத்தில் அமைந்திருந்தது. இதனை சேலம் மிஷன் வளாக கிறிஸ்டியன் பேட்டை (Salem Mission Compound Christianpet) என அழைக்கலாம்.

இரண்டாவது பகுதி 1863 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையிலான தற்காலம். இதில் இந்த சேலம் கிறிஸ்தவ குடியிருப்பு தனது பூர்வீகமான சேலம் மிஷன் வளாகத்திலிருந்து தற்போதைய சேலம் கோட்டைப் பகுதிக்குள் இடம் பெயர்ந்து, சேலம் கோட்டை கிறிஸ்டியன்பேட்டை ஆனதிலிருந்து இன்றுவரை. இதனை சேலம் கோட்டை கிறிஸ்டியன்பேட்டை என அழைக்கலாம். அதுவே இதன் பெயராக இன்றும் - அதாவது கிறிஸ்தவர்கள் இந்த இடத்தில் மிகக்குறைவாக, சிறுபான்மையினராக வாழ்ந்துவரும் இந்த நாட்களிலும் நிலைத்திருக்கிறது.

**சேலம் மிஷன் வளாக கிறிஸ்டியன்பேட்டை**
**(Salem Mission Compound Christianpet): 1834-1863.**

சேலம் வந்த முதல் சீர்திருத்த கிறிஸ்தவத் திருத்தொண்டர் சங்கை ஹென்றி கிறிஸ்பு ஐயரின் மரணத்திற்குப் (28-10-1831) பின்பு சிறிதுகால இடைவெளிக்குப் பின்பாகவே சேலம் மிஷன் நிர்வாகப் பொறுப்பை சங்கை ஜார்ஜ் வால்டன் ஐயர் (சேவைக்காலம் -1832-1841) ஏற்றுக் கொண்டார். அவர் காலத்தில் 1833 ல் சேலத்தில் ஒரு மிகப்பெரிய பஞ்சம் (Severe Famine) வந்தது. அந்த பஞ்சகாலத்தில் சேலம் மக்களுக்கு தரும இல்லம் (Alms house) அமைத்து ஐயர் மக்களின் பசிப்பிணி போக்கினார்; ஒருநாளைக்கு 500 பேர்கள் வீதம் உணவளித்து வந்தார்.

இந்த பஞ்சகாலம் முடிவடைந்தவுடன் ஐயர் செய்த முதல் வேலை சேலம் மிஷன் வளாகத்தில் ஒரு கிறிஸ்தவ குடியிருப்பைத் தொடங்கியதுதான். ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவ குருமார்களும், தென் தமிழ்நாட்டில் சீர்திருத்த கிறிஸ்தவ குருமார்களும் ஆரம்பித்த கிறிஸ்தவ குடியிருப்புகள் போலவே சேலம் மிஷன் வளாகத்திலும் சங்கை வால்டன் ஐயர் 1834ல் ஒரு கிறிஸ்தவ கிராமத்தை அன்றைய 30 ஏக்கர் வளாகத்தில் உருவாக்கினார். (A Christian Village on the Mission Compound).

இந்த கிறிஸ்தவ கிராமத்தில் அநேகமானவர்கள் ஞானஸ்நானம் பெறாதவர்களாக இருந்தாலும், கிறிஸ்தவ சமயத்தை அண்டிக் கொண்டவர்களாக இருந்தனர். இங்கே கிறிஸ்தவ போதனைகளிலும், ஒழுக்க நெறிமுறைகளிலும், குடியிருப்பு வாசிகள் நிலைத்திருந்து வாழ அறிவுறுத்தப்பட்டனர். சேலம் மாவட்டத்தின், நகரின், பல்வேறு பகுதிகளில் பிற சமயத்தினருடன் கூடிவாழும் போது அன்றைய காலகட்டத்தில் புது கிறிஸ்தவர்கள் பட்ட உபத்திரவங்கள், தொல்லைகள், நீங்கி இங்கே சுதந்திரமாக வாழும் வசதியைப் பெற்றனர்.(It must also be remembered that in those days, when a man becomes a Christian he became an outcaste, and could not live any longer among his relatives and neighbors.) சேலம் நகரிலும் அருகான பகுதிகளிலும் ஒருவர் கிறிஸ்தவராகும்போது அவரும் அவரது குடும்பத்தினரும் அன்று சேலம் மிஷன் வளாகத்திற்கு அழைக்கப்பட்டு இங்கே குடியமர்த்தப்பட்டனர். அனைத்து உபதேசிமார்களும் இந்த கிறிஸ்தவ குடியிருப்பில் சேர்ந்து வாழ அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்த குடியிருப்பில் வாழ்பவர்கள் தங்கள் குடும்பத்திற்காகவும், தங்களுக்காகவும், வெளியே சென்று உழைத்து பிழைக்கவும், கிறிஸ்தவக் குடியிருப்பின் நெறிமுறைகளுக்கு உட்பட்டு நடக்கவும் அறிவுறுத்தப்பட்டனர். இந்த கிறிஸ்தவ கிராமத்தில் வாழ்ந்த அனைவரும் கவனத்துடன் பாதுகாக்கப்பட்டனர், ஒழுக்கம் பெற போதிக்கப்பட்டு, எண்ணிக்கையிலும், கிருபையிலும் நாளும் வளர்ந்து பெருகினர்.

**சேலம் கோட்டை கிறிஸ்டியன்பேட்டை**
**(Salem Fort Christianpet) 1863லிருந்து..**

சங்கை லெக்லர் ஐயரின் மரணத்திற்கு (17-6-1861) பிறகு சேலம் மிஷன் வரலாற்றில் மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்பட்டது. முதலாவதாக சங்கை லெக்லர் ஐயர் துவக்கிய தொழிற் பயிற்சிப் பயிலகம் மூடப்பட்டது, அது செயல்பட்டுவந்த மிஷன் வளாகத்தின் மேற்குபகுதி முழுவதுமாக விற்கப்பட்டுப்போனது. (The industrial school was first closed, ...eventually the building and the plant, and even three and a half acres of the compound on shevapet side, where the industrial school had been located, were closed) இப்படியான நடவடிக்கைகளை எடுத்த சங்கை W.கேம்பெல் ஐயர்,

(Rev.W.Campbell in 1862) ஆண்கள் மற்றும் பெண்களுக்கான அனாதை இல்லத்தையும், (Boys and girls home) அவருக்குப் பின் வந்த சங்கை குட்ஈவ் மாப்ஸ் ஐயர் (Rev.Goodeve Mabbs) பெண்களுக்கான விடுதியையும் மூடினார். சேலம் மிஷன் வளாகத்தில் இருந்த கிறிஸ்தவ கிராமத்தில் சீர்கேடுகள் அதிகமாக ஏற்பட்ட சூழலில் வேறு இடத்திற்கு கிறிஸ்தவ கிராமத்தை மாற்றி அமைத்து அங்கே அவர்களுக்கான நிலப்பகுதியை அவர்களுக்கே




சொந்தமாக்கிக் கொள்ளவும் ஏற்பாடு செய்ய சங்கை மாப்ஸ் ஐயர் எண்ணியிருந்தார். (Another change that took place soon after Rev.G.Mabbs arrival, again on plans laid down by Rev.Campbell, was the breaking of the christian village, and the removal of christians from the mission compound)

சங்கை G.மாப்ஸ் ஐயர் காலத்தில் அதாவது 1863 ஆம் ஆண்டில் சேலம் மிஷன் வளாகத்திலிருந்து கிறிஸ்தவர்கள் தங்கள் இடங்களை விட்டுவிட்டு வெளியேறும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர். அவர்களுக்கு நஷ்டஈடாக சேலம் கோட்டைப் பகுதியில் மனைகள் வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது. (In compensation, however, plots of land were acquired for them in what is now the Christian street in the Fort, with the help of Mr.K.T.Paul's father, the Sheristadar David Paul.) (P.nos.5,6,25,26, A Hundred Years of Salem Mission History - Rev.T.C.Witney, B.A.,1936,London Mission Press, Nagercoil,Travancore,India.)

இதன்படி கிறிஸ்தவர்களுக்கான மாற்று இடம் சேலம் கோட்டையின் தென்பகுதியில் வழங்கப்பட்டது. இந்த கிறிஸ்தவ மக்களின் கோரிக்கைகளை அப்போதைய சேலம் சிரேஸ்ததார் திரு.டேவிட் பால் பிள்ளை (திரு.K.T.பால்,B.A.,O.B.E.அவர்களின் தந்தையார்.) அன்றைய சேலம் மாவட்ட கலெக்டரிடம் எடுத்துரைத்தார். அதனை ஏற்றுக்கொண்ட சேலம் பிரிட்டீஷ் கலெக்டர் தனது உத்தரவின்படி, தற்போது உள்ள சேலம் கோட்டையின் தென்பகுதியில் சேலம் லண்டன் மிஷன் கிறிஸ்தவர்களுக்கு மனை மனையாக வீடுகள் அன்று வழங்கப்பட்டது. அந்த பகுதி ஒரு கிறிஸ்தவ குடியிருப்பு பகுதியாக (Christian pettah) அறிவிக்கப்பட்டது. சங்கை G.மாப்ஸ் ஐயர் கிறிஸ்தவர்களுக்கு அவரவர் குடும்ப உறுப்பினர்கள் தொகைக்கேற்ப நிலங்களை 60,70,80,90 அடி என நீள வாக்கில் 25 அடி அகலமுமாக மனைகளாக பிரித்து வழங்கினார். (The present site was given free to the London Mission Christians only.Rev.G.Mabbs divided the land, manai by manai, according to the number of Christians.Each manai was 60,70,80,90, feet long and 25 feet wide. The land was allotted to every one by lot.Thus the site came to the possession of our London Mission Christians and called "The Christian Pettah" (p.no.14,15, My Experiences in the L.M.S.Salem - S.J.Simpson, 1921) இன்று கிறிஸ்டியன்பேட்டை என்று அழைக்கப்படும் அந்த சேலம் கோட்டையின் தென்பகுதி அந்த காலத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க சேலம் கோட்டையின் தென்புற அகழியான திருமணிமுத்தாறு அடுத்த நிலப்பகுதி மற்றும் சேலம் கோட்டையின் தென் பகுதி வளாகமாகவும் இருந்தது. இன்று இந்த கிறிஸ்தவ குடியிருப்பில் கிறிஸ்தவர்கள் மிகக்குறைவாகவே இருந்தாலும் இந்த பகுதி கிறிஸ்டியன்பேட்டை என்றே இன்றும் அழைக்கப்பட்டு வருகிறது. பல கிறிஸ்தவர்கள் தங்களுக்கு சுதந்திரமாக, இலவசமாக, கொடுக்கப்பட்ட நிலங்களை விற்றுவிட்டு வேறு இடங்களுக்கு வசதி, வேலை வாய்ப்புகளைத் தேடி சென்றதாலே இப்படியான இன்றைய நிலை. ஒருமுறை இந்த பகுதியின் பெயரை மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது என்றும் சொல்லப்படுகிறது. இன்றைக்கு ஏறத்தாழ 190 ஆண்டுகள் பழமையான இந்த கிறிஸ்தவ குடியிருப்பு சேலம் வரலாற்றில் ஒரு வியப்பான சரித்திர சகாப்தம்.


கிறிஸ்தவ
வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

A/c Name: Tinnevelly Christian Historical Society

A/c Number : 1748 020000 3684

Bank name : Federal Bank

IFSC code: FDRL0001748

தொடர்புகொள்ள

+91 91767 80001

09

அத்தியாயம்

# புரட்சிப்புயல் ஏமிகார்மைக்கேல்

முனைவர்.த.ஜான்சி பால்ராஜ்
நாவலாசிரியர் , திருநெல்வேலி
jansy.emmima@gmail.com
+91 73971 56808

திருநெல்வேலி, நாகர்கோவில் சாலைவழியாக அப்போதைய திருநெல்வேலி கலெக்டர் ஆஷ் துரை நாகர்கோவிலுக்குச் செல்ல இருப்பதாக ஏமிக்கு தகவல் கிடைத்தது. எனவே, எதிர்பாராமல் ஏற்பட்ட ஒரு பிரச்சனையை அவர் மூலம் தீர்ப்பதற்கான ஆலோசனைப் பெற உவாக்கரோடும் சில தோழியரோடும் அவரை சந்தித்துப் பேச நாங்குநேரியில் காத்திருந்தார் ஏமி. நாங்குநேரி, டோனாவூருக்கு அருகில் சுமார் எட்டு கிலோமீட்டர் தொலைவில் திருநெல்வேலி நாகர்கோவில் சாலையில் உள்ள ஓர் ஊர்.



இந்தியச் சுதந்திரப் போராட்டம் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்த காலகட்டமது. வெள்ளையரான ஆஷ்துரை ஏமியின் சொந்த நாடான அயர்லாந்தை பிறப்பிடமாக கொண்டவர். அதுமட்டுமல்ல தனது சேவைகள் மீது சரியான பார்வை அன்றைய அரசியலாளர்களுக்கு இருக்கும் என்ற நம்பிக்கைதான் அவரை சந்தித்து இப்பிரச்சனைக்கு நேர்மறை தீர்ப்பை பெறலாம் என்ற நம்பிக்கையை ஏமிக்கு தந்திருந்தது.

அன்றைய சூழலில் கலெக்டரே மாவட்ட நீதிபதியாகவும் பொறுப்பில் இருந்ததால் ஏமியின் வெற்றிக்கான எதிர்பார்ப்பு அதிகரித்தது.

அக்கால கட்டத்தில் ஏமியின் சமயப்பணிகளைவிட அவரது சமுதாயப்பணிகள் திருநெல்வேலி மாவட்டத்தில் பரவலாக அனைத்து தரப்பினருக்கும் தெரிந்திருந்தது. குறிப்பாக அரசு பணியில் இருந்த ஆங்கிலேயர்கள் அனைவருக்கும் மிஷனெரிகளின் பணிகள் நன்கு தெரியும். அதுவும் இதுவரை எவரும் செய்யத் துணிந்திராத தேவதாசி முறைக்கு எதிரான ஏமியின் இந்தத் துணிச்சல் ஆங்கிலேய, இந்திய அரசியலாளர்களையும் திரும்பிப்பார்த்து திகைக்க வைத்திருந்தது.

கிறித்தவ சமயப் பணியாளரான ஏமி, இந்து சமயத்திற்கு எதிராக செயல் படுவதாகவும் தேவதாசிமுறையை ஒழிக்க திட்டமிடுவதாகவும் இதன்மூலம் இந்தியக் கலாச்சாரம் அழிந்துக் கொண்டிருப்பதாகவும் தேவதாசிமுறையை ஆதரித்தவர்கள் அவருக்கு எதிராக தம் கருத்துக்களைக் கூறியும் பத்திரிக்கைகளில் எழுதியும் வந்தனர்.

தேவதாசிமுறை என்ற பெயரில் பெண்களுக்கு எதிரான பெருந்தீமை இதுவென்று தெரிந்தும் தட்டிக் கேட்க முடியாமல் ஆங்கிலேய அரசு அமைதிக் காத்தது. அதே வேளை ஏமிக்கு எதிரான இக்குற்றச் சாட்டுகளைக் கண்டு கொள்ளாமலும் நேரடியான ஆதரவை அதற்குத் தெரிவிக்க இயலாமலும் செயல்பட்டுக் கொண்டிருந்தது ஆங்கிலேய அரசு.

கலெக்டர் துரை காரில் தொலைவில் வந்து கொண்டிருந்தார். ஏமி உவாக்கரோடு சாலையோரம் அவர்கள் பார்வையில் படும்படி கைக்கூப்பி நின்றிருந்தார். இவர்களைப் பார்த்ததும் கார் வேகம் குறைந்து பத்தடி தொலைவில் நின்றது. திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டுமல்ல இந்தியாவிலேயே புடவைக் கட்டிய வெள்ளைக்கார பெண் ஏமி மட்டும் தான் இருக்கமுடியும்...! ஏற்கெனவே ஏமியைப்பற்றி அறிந்திருந்தார்

கலெக்டர் துரை.

ஏமி கைக் கூப்பியபடி காருக்கருகில் செல்லவும் கலெக்டரோடு பாதுகாவலர்களும் வெளியில் பார்வையை செலுத்தினர். ஒரு ஐந்து நிமிடம் எனக்கு தந்து உதவ வேண்டும் என்றார் ஏமி. கட்டாயம் தருகிறேன் என்றபடி காரிலிருந்து இறங்கினார் துரை. சாலையோர மர நிழலில் நின்று கொண்டே அந்த திறந்தவெளி பேச்சு நிகழ்ந்தது.

நான் ஏமிகார்மைக்கேல், இங்கு.... என்று ஏமி தொடங்கவும், செனானா மிஷனெரி நிறுவனம் மூலம் அயர்லாந்திலிருந்து 1895 ல் இந்தியா வந்தவர். பெங்களூரிலிருந்து மிஸ்டர் உவாக்கரிடம் தமிழ் மொழி கற்க தின்னவேலி வந்தவர். சற்றுநேர இடைவெளிவிட்டு.... லேசான புன்னகையோடு, எல்லாம் அறிவேன் என்றார் துரை.

சரி இப்போது நான் என்ன செய்ய வேண்டும் மிஸ் ஏமி, முடிந்தால் உதவுகிறேன் என்று ஆங்கிலத்தில் நடந்த அவர்களது உரையை உடன் வந்த ஆங்கிலேயர்களைத் தவிர வேறு எவராலும் புரிந்து கொண்டிருக்க முடியாது.

மிக்க மகிழ்ச்சி ஐயா என்று கைக்கூப்பி தனது நன்றியை தெரிவித்தபடி தொடர்ந்தார். ஒரு முக்கிய விசயமாக தங்களை சந்திக்க வந்தேன். முன் அனுமதி கோர இயலவில்லை, மன்னிக்கவும். இரண்டு மாதங்களுக்கு முன்பு, மார்ச் 10 ( 1909) அன்று ஒரு விதவைத் தாய் தனது 13 வயது மகளை என்னிடம் அழைத்து வந்தாள். முத்தம்மாள் என்ற அந்த தனது மகளுக்கு உறவினர்களால் ஆபத்து இருப்பதாகவும் அவளுக்கு எனது காப்பகத்தில் அடைக்கலம் தர வேண்டும் என்றும் என்னைக் கெஞ்சி கேட்டாள். முத்தம்மாளும் எங்களோடு இருப்பதையே விரும்பினாள். எனவே நிலமையை உணர்ந்து நானும் அவளை எங்களோடு இருக்க ஏற்றுக் கொண்டேன்.

இதற்கிடையே சென்ற வாரம் முத்தமாளின் தாயும் அவளது சிற்றப்பனும் வந்து முத்தம்மாளை திரும்ப அழைத்துச்செல்ல வந்தனர். ஆனால் முத்தம்மாள் அவர்களோடு செல்ல மறுத்து அழுதாள். அதற்கு காரணமாக, தனது தந்தை இறந்த பிறகு தாயின் நடத்தை சரியில்லை என்றும் சிற்றப்பன் தன்னை அவள் விரும்பாத ஒருவனை திருமணம் செய்ய வற்புருத்துவதாகவும் கூறினாள். மீறி அவர்களோடு அனுப்பினால் தற்கொலை செய்து கொள்வேன் என்றும் அழுது புலம்புகிறாள். இதனால் நான் அவளை அவர்களோடு அனுப்பவில்லை.

எனவே, அவளது தாயும் சிற்றப்பனும் மிகவும் வெறுப்பாக எங்களோடு சண்டையிட்டு சென்றனர். பின்னர் எனக்கு எதிராக வழக்கும் தொடுத்திருக்கின்றனர். அந்த வழக்கில் நான் கட்டாய மதமாற்றமும் சாதித் துரப்பும் செய்வதாகக் குற்றம் சாட்டியிருக்கின்றனர். இதில் எதுவும் உண்மையில்லை. தயவு கூர்ந்து தாங்கள் இதில் தலையிட்டு முத்தம்மாளை மீட்டுத் தர வேண்டுகிறேன் என்றார் ஏமி.

அதுசரி, மிஸ் ஏமி. ஏன் அந்தச் சிற்றப்பன் அந்தப் பெண்ணுக்கு விருப்பமில்லாதவனை திருமணம் செய்ய விரும்புகிறான்.? அதுவுமின்றி அந்தத் தாய் ஏன் அவனை எதிர்த்து உன்னிடம் தன் மகளை அழைத்து வந்தாள்...? பிறகு ஏன் இருவரும் சேர்ந்து கொண்டு உனக்கு எதிராக வழக்குத் தொடுக்க வேண்டும்? என்றார்... இமைகளை படபடவென அடித்துக் கொண்டு ஏமியின் பதிலை உற்று கவனித்தபடி...!

முத்தம்மாளின் தகப்பன் பெரும் சொத்துக்கள் உடையவனாம். அதற்கு முத்தம்மாள்தான் ஒரே வாரிசு. அவளுடைய சொத்தை அபகரிக்கவே இந்தத் திட்டம். முதலில் என்னிடம் கூட்டிக் கொண்டு வரும்போது அவள் தாயும் தனது மகளின் நலனில் அக்கரையோடு தான் இருந்தாள். பிறகு சில கிராம நிர்வாகப் பெரும்புள்ளிகளின் தூண்டுதலால் இவளும் அவனது விருப்பத்திற்கே வந்து விட்டாள். அந்த வழக்கிற்கு வரும் திங்கள்கிழமை அன்று தீர்ப்பு...என்றார் ஏமி.

கதையை ஒன்று விடாமல் கவனமாகக் கேட்ட கலெக்டர், ஓ....! இந்திய மக்களின் இத்தகைய மனோபாவத்தை என்னவென்பது ஏமி...!? ஆனால் இதோ பார், இந்திய சமய நம்பிக்கைகளில் நாம் தலையிடுவது நமது இருப்பிற்கே ஆபத்தாகி விடுமே...! என்று வார்த்தைகளை இழுத்தார். பிறகு விழிகளை அகல விரித்து.. ஆனாலும் உனது இந்தத் துணிச்சல், அறிவு, இந்தியர்கள் மீதான அன்பு.... உண்மையில் எனக்கு மெய் சிலிர்க்கிறது ஏமி..! மனதார பாராட்டுகிறேன் என்றவர், சரிசரி... நான் அவசரமாக ஒரு முக்கிய அலுவலாக சென்று கொண்டிருக்கிறேன். தொடர்ந்து உனது பணிகளை கடவுளை முன்வைத்து செய், கடவுள் உன்னோடு இருக்கிறார்.

ஆனால் நான் இதுபோன்ற பிரச்சனைகளில் நேரடியாக நீதித்துறையில் தலையிடுவது எனது பணிக்கு நாகரீகமாக இராது என்பது உனக்குத் தெரியாதது இல்லை. தொடர்ந்து நட்பில் இருப்போம். என்னால் இயன்றதைச் செய்கிறேன். இப்போது விடைபெற்றுக் கொள்கிறேன் என்றவர் எல்லோரையும் பார்த்து தலையாட்டிவிட்டு காருக்குள் ஏறினார்.

ஆங்கிலத்தில் நடைபெற்ற அந்தப் பத்து நிமிட சந்திப்பு ஏமியின் இதயத்தை மேலும் கனக்க வைத்தது. கார் விரைந்து கடந்து சென்றும் ஏமி இயல்பு நிலைக்கு வர இயலாமல் தடுமாறினார்.

அவரது உணர்வுகளைப் புரிந்த பொன்னம்மாள், அம்மா, வாருங்கள் கடவுள் நமக்கு வேறு நல்ல பாதையைக் காட்டுவார். கவலைப் படவேண்டாம். என்னால் உங்கள் வேதனையைத் தாங்க முடியல... என்று விம்மியபடி ஏமியின் சோர்ந்திருந்த கையை ஆதரவாகப் பிடித்தாள்.

நாம் வேறு விதத்தில் பிரச்சனையை கையாளுவோம் ஏமி. ஏன் கவலைப்பட வேண்டும். நம்மோடு கடவுள் இருக்கிறார்... என்று உவாக்கர் ஏமியை வண்டியில் ஏற அழைத்துச் சென்றார்.

திங்கள் கிழமை வழக்கு விசாரணைக்கு வந்தது. முடிவில், முத்தம்மாள் ஏமியுடனோ அல்லது அவளது தாயுடனோ இருக்க கூடாதென்றும், இந்த வழக்கு முழுவதும்

முடியும்வரை அவள் பொதுவான வேறு ஒருவருடைய வீட்டில் தான் இருக்க வேண்டும் என்றும் தீர்ப்பானது. அதன்படி நாங்குநேரி கிராமத் தலைவனாக இருந்த ஒரு நபரின் வீட்டில் முத்தம்மாள் ஒப்படைக்கப்பட்டாள்.

ஆனால் ஏமிக்கும் முத்தம்மாளுக்கும் இதில் கொஞ்சமும் உன்பாடு இல்லை. அன்றைக்கே பாளையங்கோட்டை நீதிமன்றத்தில் பெண்பிள்ளையான முத்தம்மாளின் பாதுகாப்பிற்காக, சரியான காரணங்களைக் காட்டி வழக்கு முடியும்வரை முத்தம்மாள் தன்னோடு இருக்க அனுமதி தருமாறு மேல்முறையீடு செய்தார்.

துடிக்கும் தாயுள்ளத்தோடு அடுத்தநாளே அருளாயோடு சேர்ந்து நேரடியாக முத்தம்மாளின் வீட்டிற்கு சென்று தாயையும் அவளது சிற்றப்பனையும் சந்தித்துப் பேசினார் ஏமி.

முத்தம்மாள் யாரென்றே தெரியாத ஒருவரின் வீட்டில் எப்படித் தங்கியிருப்பாள் என்று யோசித்தீர்களா? ஏன் என்னோடு இருப்பதில் உங்களுக்கு என்ன வருத்தம்? நான் அவளை என்ன செய்துவிடுவேன்? அவள் விரும்பாத விசயங்களை நீங்கள் தான் செய்ய நினைக்கிறீர்களே தவிர நான் அல்ல. என்னிடம் எந்த சுயநலனும் இல்லை. அவள் இன்றுவரை உங்கள் மதத்தில் தான் இருந்து கொண்டிருக்கிறாள். நீதிமன்றத்திற்கு வரும்போதும் நெற்றியில் பொட்டிட்டு அவள் விரும்பும் தெய்வத்தை வணங்கிவிட்டுதான் கிளம்பினாள். அவள்தான் என்றில்லை... யாராக இருந்தாலும் நான் என்னிடம் அடைக்கலமாக வருபவர்களிடம் இதுபோன்ற அவர்களது எந்த விருப்பத்திலும் தலையிடுவதில்லை. அதைப் போல உங்களது சாதியை எப்படி நான் மாற்றிவிட முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்.? எனக்கு எந்த சாதியும் கிடையாது. நான் எந்த சாதியையும் விருப்புபவள் அல்ல. புரிந்து கொள்ளுங்கள். அவளைக் காப்பாற்றும் வழியை சிந்தியுங்கள் என்ற ஏமியின் குரலில் இதுவரை இல்லாத கோபமும் சீற்றமும் இருந்ததை அருளாயி கவனித்தாள். இனி நான் எதுவும் சொல்வதற்கில்லை. என்று சொல்லிவிட்டு அங்கிருந்து கிளம்பினார் ஏமி.

இதற்குப் பிறகு, அந்தச் சிற்றப்பனும் தாயும் அவர்களைத் தூண்டிவிட்டு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களோடு சேர்ந்து ஒரு ஆலோசனைக் கூட்டம் போட்டனர்.

அவர்களுக்குள் ஏதேதோ பேசி இறுதியில் ஒரு முடிவிற்கு வந்தனர். இங்கப்பாரு தாயம்மா, உன் மகளை அந்த வெள்ளக்காரியால ஒன்னும் செய்ய முடியாது. பயப்படாதே, நாங்கல்லாம் உன் பக்கம் இருக்கோம். எப்படியும் முத்தமாள் நம்ம கைக்கு வந்திருவா. அதுக்கு நாங்க உத்திரவாதம். கேசை நல்லவிதமாக முடிக்க நாங்க சரியான ஆள்வச்சிருக்கோம். எங்களுக்குப் பெரியப் பெரிய ஆளுகல்லாம் மேலிடத்தில இருக்காவ. அதனால நீ கவலையை விடு. ஆனா, இப்போதைக்கு உன் மகள் இங்க உன்னோடு வர விரும்பாததால... தீர்ப்பு வரும் வரைக்கும் டோனாவூரிலேயே அந்தப் பொம்பள கூடயே இருந்துட்டு போகட்டும். ஏன்னா முழுசா தீர்ப்பு வர எப்படியும் நாலஞ்சி மாசமாவது ஆகும். என்றான் ஊர்த்தலைவன்.

சரி...என்று தலையாட்டினாள் தாயம்மாள்.

இவர்கள் இருவரும் உடன்பட்டதால் மறுபடியும் முத்தம்மாள் ஏமியோடு இருக்கும்படி உத்தரவானது. பாளையங்கோட்டையில் நீதிமன்றத்திலிருந்து டோனாவூர் வரும்வரை முத்தம்மாள் ஏமியின் அன்பின் அணைப்பிலேயே இருந்தாள். எப்போதும் நான் கடவுளிடம் வேண்டிக் கொண்டே இருந்தேன் அம்மா என்றாள் முத்தமா. என்ன வேண்டினாய்...? ஓரளவு அவளது எண்ணத்தை கணித்தாலும் அவளாக சொல்ல வேண்டுமென்ற ஆவலில் கேட்டார் ஏமி. எப்படியாவது என் ஏமியம்மையோடு என்னை சேர்த்துவிடு கடவுளேன்னு தான் தினமும் கேட்டேன் என்றாள். ஏமி அவள் நெற்றியில் விழுந்து கிடந்த முடிகளை ஒதுக்கி சீர்செய்து முத்தமிட்டார்.



எப்படி இந்தப் பெண்ணின் அன்புப் பிடியில் குழந்தைகள் அமைதலாகி பெற்றத் தாயைவிட அதிகம் நேசித்துவிடுகிறார்கள் என்ற வியப்பில் ஆழ்ந்தபடியே தனக்கு பின்புறம் இருந்த ஏமியை திரும்பி பார்த்தார் உவாக்கர். அனைவரையும் தொற்றிக் கொண்டது அன்பின் புன்னகை.

ஏமி, யூ ஆர் ரியலி கிரேட்.. என்றார், உவாக்கர். அவர் தன்னோடு ஆங்கிலத்தில் பேசக் கேட்டு வெகுநாளாகியிருந்தது. நோ, காட் ஒன்லி த கிரேட் எவர். என்று, உவாக்கர் தமிழில் மட்டும் தான் பேசவேண்டும் என்ற அன்புக் கட்டளையை அவரையும் அறியாமலேயே மீறினார் ஏமி.

ஆழ்ந்த துக்கத்திலும் அளவற்ற மகிழ்ச்சியிலும் தாய்மொழியால் மட்டும்தானே இதயத்தின் உணர்வுகளை மிகச் சரியாக வெளிப்படுத்த முடியும்.!?

ஆனாலும் முழுமையாக முத்தம்மாள் நம்மோடு இருக்கும்படியான தீர்ப்பு வரவேண்டுமே..! மனத்திற்குள் இருந்த இந்தக் கலக்கம் வேறெதுவும் பேசவிடாதபடி கட்டிப் போட்டது எல்லோரையும். வண்டி நாங்குநேரியை நெருங்கி கொண்டிருந்தது. கலெக்டர் துரைக்காக காத்து நின்ற அந்த இடத்தை தாண்டும் போது ஏமி வேதனை அரும்புகளால் குத்துண்டிருக்க வேண்டும். அந்த நிகழ்வைப்பற்றி ஏமியோ உவாக்கரோ எதுவுமே பேசாமல் அமைதியாகினர். விரக்தியால் எழுந்த அவர்களது பெருமூச்சுகளின் சத்தத்தை உணர்ந்திருக்கும் போல வண்டியை இழுத்துச் சென்ற அந்த மாடுகளும்! அவை, வேக வேகமாக இழுத்துக் கொண்டு கடந்து சென்றன அந்த இடத்தை.

**தொடர்வாள் முத்தம்மாள்.**

# ‘ஆதாமே, நீ எங்கே இருக்கிறாய்?’

தெருவாசலைத் திறந்துகொண்டு உள்ளே ஓடிவந்தார் அந்த மனிதன். கூடத்தில் கால் நீட்டியுட்கார்ந்து வெற்றிலை பாக்கு இடித்துக்கொண்டிருந்தாள் தாயார். அவளை ஒரு தாவு தாவி குதித்து முற்றத்தைக் கடந்தார். வழியில் முறத்தில் எதையோ எடுத்துக்கொண்டு வந்த மனைவியின் கையிலிருந்த முறத்தைத் தட்டிவிட்டு; அடுத்ததாவில் அறைவீட்டையடைந்து, சாத்தியிருந்த கதவையிடித்துத் திறந்து, உட்புகுந்து, கதவைப் பூட்டிக் கொண்டார். “என்னத்துக்கு இப்படி ஓடுகிறான் தடிமாடு மாதிரி?” என்று தாய் சலித்துக்கொள்ள, மனைவி கதவைத் தட்டி, “எதைக்கண்டு பயந்து இப்படி ஒளிகிறீர்கள்? கதவைத் திறவுங்கள்” என்று கெஞ்சினாள். பின் உண்மையாகவே கலவரங்கொண்டவளாய், “திறவுங்களேன். என்ன தான் நடந்தது?, சொல்லுங்கள்” என்று கூப்பாடு போட்டாள். உள்ளே ஒளிந்து கொண்ட மனிதன், “இதோ, பார். சத்தம் போடாதே, ஐயரும் உபதேசியாரும் நம் வீட்டுக்கு வருகிறார்கள். நான் வெளியே போய்விட்டேனென்று சொல்லிவிடு. என்ன? சொல்லுவியா? என்னைக் காட்டிக் கொடுத்து விடாதே. அம்மாவிடமும் சொல்லிவிடு போ,” என்று உள்ளிருந்து கொண்டே அவளுக்கு உத்தரவிட்டார். அவள், “ம்க்கும் சொல்லுவேன் சொல்லுவேன்! ஐயா உள்ளே தான் கட்டிலுக்கடியில் ஒளிந்துக் கொண்டாரென்று சொல்வேன். உங்களுடன் சேர்ந்து கொண்டு நானும் ஏன் பொய் சொல்ல வேண்டும்?” என்று அடம்பிடித்து, “இப்போ கதவைத் திறக்கப் போகிறீர்களா, இல்லையா?” என்று கூச்சல் போட்டாள். அதற்குள் அவனுடைய தாயார், “என்னம்மா? எதற்கு ஒளிந்து கொண்டானாம்?” என்று வினவிக் கொண்டு அங்கு வந்தாள்.

**“அதையேன் கேட்கிறீங்க அத்தை. அன்றைக்கு நாம் இரண்டு பேரும் எவ்வளவு சொன்னோம் கேட்டால் தானே! அன்றைக்கு அம்மன் கோயிலிலே கோழி வெட்டிப் பலி கொடுத்துவிட்டுத் திருநீறு பூசிக்கொண்டு, வேதமும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம் என்று சொல்லி மார்க்கத்தை மறுதலித்துவிட்டு, இன்றைக்கு ஐயர் வருகிறார் உபதேசியார் வருகிறார் என்று உதறல்பட்டால், நாமென்ன செய்வது? சொல்லுங்கள்,”** என்க, அம்மூதாட்டி, “அதுதானே பார்த்தேன்!” அன்றைக்கு நீயும் நானும் “வருவது வரட்டும் மறுதலிக்க மட்டும் மாட்டோம்” என்று சொல்லிவிட்டு வா என்றால், இவன் போய் மறுதலித்து விட்டு வந்தானாமே! மடப்பயல்! ”என்று ஏச ஆரம்பித்து விட்டாள்.

அப்பொழுது முன்கதவு தட்டப்பட்டது. கிழவியம்மாள் கதவைத் திறந்தாள். பாளையங்கோட்டை மிஷனெரி பெற்றிட் ஐயரும் (Rev. G. Pettitt) உள்ளூர் உபதேசியாரும் உள்ளே சென்றார்கள். பெண்களிருவரும் அவர்களை வரவேற்று உபசரித்தார்கள். உபதேசியார் அந்தப் பெரியம்மாளிடம், ‘அம்மா உங்கள் மகனையெங்கே? காட்டுக்குப் போய் விட்டாரா?” என்க, அவள், “இல்லை ஐயா, காட்டுக் கெல்லாம் போகவில்லை” யென்று கூறி, மேலும் பேசத் திகைப்புற்றவளாய் நிறுத்திக் கொண்டாள். பெற்றிட், “அவர் காட்டுக்குப் போகவில்லையென்றால், வேறெங்கே போயிருப்பார்?” என்று வினவ, அவள் பதில் கூறப் பின்னும் தயங்கினாள். அதைக்கண்ட உபதேசியார் அவளுடைய மருமகளைப் பார்த்து, ‘உனக்குத் தெரியாதா அவர் எங்கே போயிருக்கிறாரென்று?’ என்று கேட்க, அவள் வீட்டின் உள்ளறையைக் காட்டிக் கண்ணசைத்தாள். அக்குறிப்பைக் கண்டுகொண்ட உபதேசியார் ஐயரிடம், “அவர் உள்ளறைக்குள் ஒளித்துக் கொண்டார் போலும்,” என, ஐயர், “அப்படியா?” என்று கேட்டுக்கொண்டே அறைக்குச் சென்று கதவைத்தட்டி “தம்பி, உள்ளே ஒளித்துக்கொண்டீரா? வெளியே வாரும். உம்மைப் பார்த்துவிட்டுப் போகத்தானே நான் இவ்வளவு தூரம் வந்திருக்கிறேன்! திறவும்! திறந்து இங்கே வாரும்” என்று அன்புடன் அழைத்தார்.

தன் மனைவி தன்னைக் காட்டிக் கொடுத்து விட்டாள் போலிருக்கிறது என்று, அவள் மீது கோபமும் எரிச்சலும் கொண்டாலும், அம்மனிதன் கதவைத் திறந்து வெளியே வந்தார். வந்தவர் ஊழியரிருவருக்கும் வணக்கம் தெரிவித்து, வெட்கத்துடன் அவர்களைப் பார்த்துவிட்டுத் தலை குனிந்து நின்றார்.

அவ்வளவுதான்! ஆரம்பித்து விட்டனர் அம்மாள்மாரிருவரும்! அவர்களிருவரும் ஐயரையும் உபதேசியாரையும் வைத்துக்கொண்டே அவருக்குக் கொடுத்த ஏச்சும் பேச்சும்! “புறமதத்தினனான ஒரு கொடிய விரோதிகூட, எதிர்த்து நிற்கும் கிறிஸ்தவனொருவனை அவ்வளவு கோபாவேசத்துடன் ஏசியிருக்கமாட்டா” னென்று பெற்றிற் தன் நாட்க்குறிப்பில் எழுதிவைத்துள்ளார் (Journal date 19-8-1835). அந்த அளவு கோபித்தாள் அம்மூதாட்டி மறுதலித்த தன் மைந்தனை!. அவ்வளவு வெறுப்புடன் சலித்துக்கொண்டாள் அவரது மனைவி!. முதலில் அம்மனிதன், தான் உண்மையில் மறுதலிக்கவேயில்லை யென்றும், வேண்டுமென்றே யாரோ தன்னைப்பற்றி அப்படிக் கதை கட்டிவிட்டார்களென்றும், தன் மனைவியும் மாதாவும் அதை நம்பிக்கொண்டார்களென்றும் மழுப்பினானெனினும், பின்பு எல்லாவற்றையும் ஒப்புக் கொண்டான்.

பின் அவனை நடுவில் உட்காரவைத்துக் கொண்டு, நால்வரும் நயமும் பயமுமாய், அன்புடனும் அனுதாபத்துடனும், ஆவியானவரின் அருளுடனும் நடத்துதலுடனும் அவனுக்குப் புத்தி சொல்லி, அவனுக்குப் பாவ உணர்வூட்டினர். அதன் பின் ஐயர் ஊக்கத்துடனும் பரிவுடனும், அவருக்காகவும், அவரது மனைவிக்காகவும் தாயாருக்காகவும், ஜெபித்து ஆசீர்வதித்து, துலுக்கர்பட்டி என்ற அந்தக் கிராமத்தைவிட்டு, ஆனைக்குளத்துக்குப் போகப்புறப்பட்டார்.

புத்தக அறிமுகம்


மிஷன் இந்தியா இயக்கத்தின்

1934–2015

# கறைபடா ஆசான்

**புத்தகத்தின்**
**விலை: 100/– மட்டுமே**
**(தபால் செலவு தனி)**

வெள்ளை சட்டை வெள்ளை முடி என வலம் வரும் சகோதரர் ஸ்டான்லி பிரின்ஸ் அண்ணன் அவர்கள், ஒழுக்கம், கண்ணியம்,நேர்மை, பெருந்தன்மை, பரிசுத்தம் போன்றவற்றால் மாணவர்கள் மற்றும் சக ஆசிரியர்களால் அதிக மதிக்கப்பட்டவர். ஸ்ரீவில்லிபுத்தூர் சி எம் எஸ் பள்ளியின் கணித ஆசிரியராக பணிபுரிந்து வந்த காலத்தில் அனேக மாணவர்களை கிறிஸ்துவுக்கு நேராக வழிநடத்தி வந்தார். அவர்களில் அநேகர் இன்று சமுதாயத்தில் நல்ல நிலையில் உள்ளார்கள். தேவனுடைய அழைப்பை ஏற்று முழு நேரமாக கிறிஸ்துவின் பணியை தன் வாழ்வின் இறுதி மூச்சுவரை செய்தார். பரிசுத்தத்தை பேச்சு அளவில் மட்டுமல்லாது தன் வாழ்விலும் வாழ்ந்து காட்டியவர். ஆயிரமாயிரம் வாலிபர்களை கிறிஸ்துவுக்கு நேராக வழி நடத்திய தேவ மனிதர் அவர். அண்ணனுடைய வாழ்க்கை பயணம் நமக்கு கற்றுத் தரும் பாடங்கள் ஏராளம். 2010ம் ஆண்டு அண்ணனை நேராக சந்தித்து பெறப்பட்ட நேர்காணலை புத்தகமாக வழங்கி உள்ளோம். மேலும், பல தகவல்களை அண்ணனுடைய உடன் பணியாளர்கள், மாணவர்கள், ஊழியர்கள் என அநேகர் வழங்கியுள்ளார்கள். இக்கால இளைஞர்களுக்கு அண்ணனின் வாழ்க்கை மிகுந்த சவாலாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. வாங்கிப் படியுங்கள் உங்கள் பகுதி இளைஞர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள்.




**புத்தகம் கிடைக்குமிடம்**

**மிஷன் இந்தியா இயக்கம்**
**9444393227**

**விரைவில்**

# சாயர்புரம் திருச்சபை சரித்திரம்

**பேராசிரியர்.அருள்திரு. தே. அ. கிறிஸ்துதாஸ்**

பேராசிரியர் அருள்திரு தே.அ. கிறிஸ்துதாஸ் ஐயர் (1912-1990) அவர்கள் தென் இந்தியாவின் ஆக்ஸ்போர்டு என்று அழைக்கப்படும் பாளையங்கோட்டையில் பிறந்து, வளர்ந்தவர். பள்ளி ஆசிரியர், வேதாகமக் கல்லூரி பேராசிரியர், முதல்வர், அருட்பணியாளர் மற்றும் எழுத்தாளர் என பல துறைகளிலும் ஜொலித்தவர். திருச்சபையின் வரலாறு மற்றும் திருச்சபையின் வெற்றிக்குக் காரணமான தேவ மனிதர்கள் பற்றி நாம் அறிந்து கொள்ள இவர் எழுதிய நூல்கள் ஒரு திறவுகோல் என்றால் அது மிகையாகாது. எளிய மற்றும் வட்டார வழக்கு தமிழில் எவரும் புரிந்து கொள்ளும்படி ஆராய்ச்சி மற்றும் வரலாற்றுப் புத்தகங்களை எழுதுவது இறைவன் இவருக்குக் கொடுத்த வரம். அநேக புத்தகங்களை மட்டுமல்ல, அநேக கிறிஸ்தவ தலைவர்களையும் இவர் தன் திருப்பணி மூலமாக உருவாக்கி இருக்கின்றார்.

**‘சாயர்புரம் திருச்சபை சரித்திரம்‘** எனும் இந்நூல் மறைந்து கிடந்த சரித்திரங்களை கண்டெடுத்து சிறந்ததொரு ஆபரணமாக கொடுத்திருக்கின்றார் பேராசிரியர். அவருடைய படைப்புகளில் இது மிகச்சிறந்த நூலாக இருக்கும் என்பது நம்பிக்கை.

பராபரன் இந்நூலை இயற்றியவரையும், வெளியிட உதவியவர்களையும், இதனைப் படிப்பவர்களையும் ஆசீர்வதிப்பாராக.





Return Requested:

Tamil Printed Book- For Private Cirulation Only

To


**CHRISTAVA VARALATRU SUVADUGAL**
# 2.2.3(4)North Street,
Bungalow Surandai-627859.
Tenkasi District
Tamil Nadu
Ph: 04633 290401
Mo: **91767 80001**



Owned & Published By TINNEVELLY CHRISTIAN HISTORICAL SOCIETY, Tamil Eduction- For Private Cirulation Only
Editor|G.MUTHAIAH SELVAKUMAR| at 2.2.3(4)North Street, Bungalow Surandai-627859. Tenkasi District Ph: 04633 290401